சத்தியம்
தர்மம்
சாந்தி
பிரேமை
அகிம்சை

ஓம் சாயிராம்

# சாயி மார்க்கம்

ஜனவரி ~ ஏப்ரல் 2013

இலங்கை
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனச் செயற்பாடுகளின் தொகுப்புக்கள்





முஸ்லீம் மக்களுக்கு அமைத்து வழங்கப்பட்ட பொது நோக்கு மண்டபம்



பூம்புகார், கட்டுவன் பகுதிகளில் புனரமைப்புச் செய்யப்பட்ட கிணறுகள்



வறுமைக்குடும்பங்கள் இரண்டிற்கு கொட்டில் வீடுகளுக்கு சீமெந்து தரை அமைத்து வழங்கப்பட்டது



சத்திய சாயி பாடசாலையின் வருடாந்த பண்பு விருத்தி விளையாட்டு விழா - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 20
இதழ்: 50

ஒரே ஒரு மதம் அது
அன்பென்னும் மதம்

ஜனவரி - ஏப்ரல்
2013

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832, 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 200.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 01601004771
**SWIFT CODE: HBLILKLX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

## உள்ளே......

2013 உன்னத மாற்றத்திற்கான ஆண்டு 2
விவேகானந்த சாகூ கொழும்பில் ஆற்றிய உரை 3
பகவானின் நினைவுகள் 9
உருவமும் அருவமும் 12
கருணாமூர்த்தி சாயி நாதன் 18
குழுவேலையில் சுவாமியின் போதனைகள் 19
பாலவிகாஸ் கல்வி கற்றதன் அனுபவம் 22
பீஷ்மரின் வாழ்வும் பாபாவின் வாக்கும் 23
என்னை ஆட்கொள்ளும் சாயி 25
இளைஞர்களுக்கான மனித மேம்பாடும் சேவையும் 27
ஆத்ம விசாரணை 29
சத்திய சோதனை 30
இளைஞர்களுக்கான அறிவுரைகள் 31
தனிமையில் நம்மைபற்றி சிந்திப்போமா? 34
அர்ப்பணிப்புடன் செயலாற்றுங்கள் 36
இலங்கையின் யுத்தகளத்தில் போதிக்கப்பட்ட விபூஷண கீதை 37
நிறுவனச் செய்திகள் 39




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2013 ஆம் ஆண்டு உன்னத மாற்றத்திற்கான ஆண்டு

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று நடந்த வடபிராந்திய பொதுக்கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டை உன்னத மனமாற்றத்திற்குரிய ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டது. நாம் எல்லோரும் இப் பிரகடனத்தை உதாசீனம் செய்யாது, இதயத்தில் ஏற்றி எம்மால் இயன்றளவு செயற்படுத்து வோமாக.

மாற்றம், உன்னதம், ஓராண்டுக் காலம் இம் மூன்றும் பிரகடனத்தில் அடங்கியுள்ளது. இப்போதிருக்கும் நிலை திருப்தியானதாயில்லாததால் மேல் நோக்கி மாற வேண்டியுள்ளது. இம் மாற்றத்திற்குரிய செயற்பாடுகள் தீவிரமடைய வேண்டும். இம் முயற்சி இடைவிடாததும், தொடர்ச்சியானதும், பயனுள்ள தாகவும் இருக்க வேண்டும். இப்படியான முயற்சியால் தான் நாம் எமது குறிக்கோளை ஓராண்டுக்குள் அடையலாம்.

மாற்றம் உன்னத நிலை அடைவதேயாகும். உன்னதம் என்றால் எமக்குள்ளிருக்கும் தெய்வீகம் மாற வேண்டும். வெளிப்பட வேண்டும் என்பதையே குறிக்கின்றது. உள்ளிருக்கும் தெய்வீகம் என்றால் என்ன? சுவாமி சொன்ன 5 அடிப்படை மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்பனவேயாகும். இவ் வாக்கியத்திலுள்ள ஆழ்ந்த, பரந்த, நுண்மையான விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும். மலர்தல் அல்லது வெளிப்படுதல் என்றால் மேற்கூறிய 5 மேம்பாடுகளும் எமது எண்ணம், உணர்வு, சொல், செயல் ஆகியவற்றில் எப்போதும் பரிணமிக்க வேண்டும்.

குணாதிசயங்களில் நல்லவையுமுண்டு, தீயவையுமுண்டு. மனித விழுமியங்கள் அல்லது மேம்பாடுகள் என்றால் வாழ்க்கைக்கு மெருகூட்டும் எல்லோருக்கும் பயன்ளிக்கும் நல்ல குணாதிசயங் களையே குறிக்கின்றன.

உன்னதம் (Excellennce) இப்போதிருக்கும் நிலை அல்லது செயற்பாடு நாளுக்கு நாள் உயர்வடை வதையே குறிக்கின்றன. இதன் முற்று நிலை பரிபூரண நிலையாகும். இந்த தசாப்தத்தில் எதைச் செய்தாலும் அது உன்னதமாகவும், பூரணமாகவும், துல்லியமான தாகவும் இருக்க வேண்டுமென்பது முற்போக்கு வாதிகளின் கூற்றாகும். இது உலகியலுக்கு மட்டு மல்லாமல் ஆன்மீகத்திற்கும் மிகவும் பொருந்தும்.

இந்த உன்னத மாற்றத்தை அடியார்களில் ஏற்படுத்தும் பெரிய பொறுப்பு எமது ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்திற்குண்டு. இதற்கான சந்தர்ப்பங் களை நிறுவனம் ஏற்படுத்த வேண்டும். வட பிராந்தியக் குழு இதற்காக மாதாந்த சாதனைகளையும் ஒழுங்கு செய்துள்ளது. இளைஞர் அணியும் தமக்கு உகந்த மாதாந்த சாதனையை ஒழுங்கு செய்துள்ளது. இச் சாதனை 4 மணித்தியாலம் நடைபெறும். ஒரு மணித்தியாலம் - பிரார்த்தனை, வேதமோதல், நாமசங்கீர்த்தனம், தியானம், தீவிரசாதனைக்கும் மூன்று மணித்தியாலங்கள், சிறப்புப் பேச்சு, கலந்துரையாடல் ஆகியவற்றிற்கு கொடுக்கப் பட்டுள்ளது. இச் சாதனைகளுடன் அதி முக்கியம் வாய்ந்த சாதனை நாளாநத மதிப்பீடு ஆகும். இதற்காக மதிப்பீட்டு கையேடு அச்சிடப்பட்டுள்ளது. இக் குறிப்பில் காலை, மாலை, பிரார்த்தனை, தியானம், உணவுக்கு முன் பிரார்த்தனை, சாயி இலக்கியம் படித்தல், சேவையிலீடுபடல், கோபம், பொறாமை, புறங்கூறல், ஆசைக்கு வரம்பு ஆகியவை குறிப்பீட்டில் சுயமதிப்பீட்டிற்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. இதை எவ்வாறு கையாள வேண்டுமென்று விளக்கமும் அளிக்கப்பட வேண்டும். இதை செய்வதில் நாம் மிகவும் ஊக்கமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மாத முடிவில் அன்பர்கள் தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்து, இன்னும் எவ்வளவு முன்னேற வேண்டு மென்பதை அறிந்து செயற்பட வேண்டும். இச் செயற்பாட்டை உதாசீனம் செய்யக் கூடாது.

**உன்னத மாற்றத்திற்குரிய சில வழிகாட்டிகள் வருமாறு:**

அ) நான் எனது என்ற நிலையிலிருந்து நாம், எமது என்ற நிலைக்கு மாற வேண்டும்.

ஆ) நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் எமது நன்மைக்கே என்று தளராத நம்பிக்கையும் அன்பும் கடவுள்மீது இருக்க வேண்டும்.

இ) எதிலும் எல்லாவற்றிலும் சுவாமியைக் காண முயல வேண்டும்.

ஈ) எண்ணம், உணர்வு, சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் ஏற்பட வேண்டும்.

உ) தியாக மனப்பாங்குடன் இயன்றளவு சேவை செய்ய வேண்டும்.

நாம் தீவிரமாக செயற்பட்டால் மேலான ஆழ்ந்த விளக்கங்கள் காலப்போக்கில் ஏற்படும்.

உன்னதமான பயணத்தை தீவிரமாக்குவோம். பகவானின் அருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஜெய் சாயிராம்

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் விவேகானந்த சாகூ அவர்கள் 2012 ஜுலை மாதம் ஸ்ரீலங்கா வந்தபோது கொழும்பில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்

எனது எண்ணம், சொல், செயல் அனைத்தும் பகவானின் பொற்கமலப் பாதங்களில் சமர்ப்பணம். ஸ்ரீலங்காவில் ஏற்படும் அனுபவம் பிரசாந்தி நிலையத்தில் ஏற்படுவதைப் போலவேயுள்ளது. இங்கே தூய்மையான தெய்வீகமான அன்பை உணர்கின்றேன்.

நான் பகவானின் மகாசமாதி தரிசனத்திற்குச் சென்ற போது, அங்கே பொறிக்கப்பட்ட வாக்கியம் "அனைவரையும் நேசி , அனைவருக்கும் சேவை செய்" என்பது மனதில் ஆழப் பதிந்தது. பகவான் 70 வருடங்களாக ஆற்றிய போதனையின் சராம்சம் அதுவேயாகும்.

நான் யாழ்ப்பாணத்தில் தேசிய இளைஞர் மாநாட்டில் பங்கு பற்றினேன். அங்கே இளைஞர்கள் தங்களுக்கு வீட்டிலிருந்தும், சமூகத்திலிருந்தும் எத்தனையோ தடைகள் எழுகின்றன என்ன செய்யலாம்? என்று கேட்டார்கள். இதற்கு மறுமொழி சுவாமியின் போதனைகளிலும், வாழ்விலும் உள்ளன. சுவாமிக்கும் குடும்ப அங்கத்தவர்களிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் எத்தனையோ தடைகள் எழுந்தன அவர் தனது பணியிலிருந்து நகரவேயில்லை. தமது பணியைக் கைவிடவில்லை. அவருடைய சங்கல்ப்பம் மேன் மேலும் உறுதியாகியது. தனது அவதாரத்தை பிரகடனம் செய்த போது, சிலர் மகிழ்வுற்றார்கள். சிலர் நம்பவேயில்லை. சிலர் பைத்தியம் என்று அபிப்பிராயம் கொண்டார்கள். சிலர் பொறாமைப்பட்டார்கள்.

இளம்பருவத்தில், அடியார்கள் ஒருதடவை பல்லக்கில் தூக்கிச் சென்றார்கள். இருபக்கமும் மேடான நிலம் பாதையோ மிகக் குறுகியது. இதைக் கண்டு பொறுக்க முடியாதவர்கள் காளை மாடுகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள். கூடியிருந்த மக்களுக்கு திரும்பி ஓடவும் முடியாத நிலை. சுவாமி பல்லக்கிலிருந்து இறங்கி அதன் முன்னே அசையாது நின்றார். மாடுகள் அக்கணமே அமைதியாகி மெல்ல, மெல்ல சுவாமியிடம் போய்ச் சுவாமியும் கழுத்தில் தடவி அனுப்பினார். தெய்வீக அன்பு காளைகளை அடி பணிய வைத்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண்மணி சுவாமியை விருந்திற்கு அழைத்து நஞ்சூட்டப்பட்ட வடைகளைப் பரிமாறினார். சுவாமி எல்லா வடைகளையும் தானே சாப்பிட்டுவிட்டு பின்பு வாந்தி எடுத்தார். வீட்டுப் பெண்மணிக்கு அதிர்ச்சியாகி விட்டது. சுவாமி அவரைப் பார்த்து "நீ எவ்வளவோ கர்மவினைகளைச் சேர்த்துக் கொண்டாய். இதிலிருந்து மீள, இங்கே வரும் அடியார்களுக்கு உணவளிக்க வேண்டும்." என்று கூறினார்.

சுவாமி அன்பே வடிவமாகையால் உன்னத தலைவனாக விளங்கினார். இளம்பராய காலத்தில் சித்திராவதிக்கு அடியார்களுடன் ஒவ்வொரு நாளும் செல்வது வழக்கம். நதிக் கரையில் வயது போன அம்மையார் சுவாமி வரும் வரை காத்திருந்து வெற்றிலைக் கூறு கொடுப்பது வழக்கம் ஒருநாள் அவரைப் பார்த்து என்ன வேண்டும் பாட்டி? என்று கேட்டார்? "சுவாமி எனது கணவர் ஆங்கிலேயரின் படையில் பணிபுரிந்தார். 1920 ஆம் ஆண்டில் காலமானார். அவரின் நினைவாகப் படம் கூட என்னிடம் இல்லை. அவரின் படம் தரமுடியுமா? என்று கேட்டார். சுவாமி நதிக்கரை மண்ணுள் கைகளைப் புதைத்து வெளியே எடுத்த போது கணவரின் படம் வந்தது, சுவாமி அதைக் கொடுத்த போது, பாட்டி வெட்கமடைந்து முகம் சிவந்தது. அன்பின் நிமித்தம் எதையும் செய்வார்.

ஒருமுறை நதிக்கரையிலிருந்து ஒரு சிறு கல்லை எடுத்துஅவரின் அன்பரிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். அவர் கடிக்கும் பொழுது அது கற்கண்டாக மாறியது. தான் இந்த அற்புத லீலைகளைச் செய்வது, எங்களுடன் நல்ல உறவொன்றை ஏற்படுத்தவேயென்று கூறியுள்ளார்.

சக்கம்மா என்ற கன்னட மாநிலப் பெண் அடியாள் சுவாமியை நேரத்துக்கு நேரம் சாப்பிடும்படி வற்புறுத்துவார். வேறு யாரும் உணவு கொடுப்பதையும் விரும்ப மாட்டார். சுவாமி ஒருமுறை இன்னொரு பக்தையிடம் தோசை சுட்டுத் தரும்படி கேட்டார். கொடுத்ததும் சாப்பிட்டு விட்டு சக்கம்மாவிடம் போனார். எங்கே தோசை சாப்பிட்டீர்கள் என்று வினாவ அந்தப் பக்தை மிகவும் கட்டாயப் படுத்தினாள் ஆனபடியால் சாப்பிட்டேன் என்று சொன்னார். இப்படி அவர் புரிந்த லீலைகள் அநேகம்.

ஒருமுறை பேராசிரியர் சஞ்சே சகானி எம்மைப் பார்த்து "சுவாமி தான், சுவாமியில்லை சுவாமியில்லை என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? என்று கேட்டார். நாங்கள் தாமதிக்க அவர் சொன்னார். "சுவாமி வாயை மூடுங்கள்" என்று சொல்லக் கூடியளவு சுவாமி மீது அசையாத நம்பிக்கை இருக்க வேண்டும் என்று கூறினார். சுவரில் அறைந்த ஆணி இறுக்கமாக இருக்கிறதா என்று பார்க்க, அதை ஆட்டிப் பார்ப்போம். அதை போல சுவாமியும் எம்மைக் குலுக்கிப் பார்ப்பார் அவருடைய பணியை மேற்கொள்ளும் சக்தி எமக்கு உண்டா? என்று ஆட்டிப் பார்ப்பார். ஒவ்வொரு நாளும் சோதனையாகவே இருக்கும்.

2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அன்று MBA தினம் நான் இரண்டாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். சுவாமி நிகழ்வுகளை அன்று பார்த்த பின்பு, முகாமைத்துவத்தில் அருளுரை நிகழ்த்துவது வழக்கம். கடந்த 3 வருடங்களாக சுவாமி வரவேயில்லையென்றாலும் நாம் நிகழ்வுகளைத் தயாரித்துத் தயார் நிலையில் இருப்போம். சுவாமியையும் வரவழைப்போம். நாடக நிகழ்வில் நான் சுவாமி விவேகானந்தராக சுவாமியின் முன்னால் நடிக்க வேண்டுமென்பது எனது ஆசை. எமது துணைவேந்தர் என்னை சைதன்ய மகாபிரபுவாக நடிக்கும்படி சொன்னார். எனது சக மாணவன் இராமகிருஸ்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமஹம்சராக நடிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டார். நாங்கள் தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டோம். நாடக நிகழ்வு நடக்கப் போகும் சில நாட்களுக்கு முன்பு துணைவேந்தர் என்னை சுவாமி விவேகானந்தரின் பாத்திரத்தை நடிக்கும்படியும் எனது அறையிலுள்ள மாணவரை இராமகிருஸ்ணராக நடிக்கும்படியும் சொன்னார். சுவாமி எங்களின் ஒத்திகைகளைப் பார்க்க வராவிட்டாலும். நடப்பதெல்லாம் தெரிந்து, அதை தரிசனத்தின் போது எம்மிடம் கூறி மகிழ வைப்பார். எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று அறிவுரையும் கூறுவார். அந்த நாடகத்திற்கு காளியின் உருவச் சிலை வைத்தால் நல்லதென்றெண்ணி எமது வளாகத் திலுள்ள சிலையைக் கொண்டு போக எண்ணினோம், அது 4 அடி உயரமான சிலையாகையால் காருக்குள் வைக்க முடியவில்லை. நானும் சகமாணவனும் கையிலே தூக்கிக் கொண்டு இரவு 11.30 மணிக்குப் புறப்பட்டோம். தெருவைக் கடக்கும் பொழுது ஒரு துவிச்சக்கர வண்டியில் ஜோடி ஒன்று வந்தார்கள் மனிதன் மிகவும் உயரமானவராக (6 அடியளவில்) காணப்பட்டார். பெண் கீழ் தேசத்தவர் போலவும், கருமை நிறமாயும் காணப்பட்டார். பெண் தச்சிணேஸ்வரர் காளியைப் பற்றிச் சிறிது கூறினார். நாங்கள் எமது நாடகத்திற்காகத் தூக்கிச் செல்கிறோம் என்று சொல்ல அவர்கள் எங்களை வாழ்த்தி விட்டு ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றார்கள். நான் கண் வெட்டாது பார்த்துக் கொண்டிருக்கையில் மறைந்து விட்டார்கள். நான் அழத் தொடங்கியதைக் கண்ட நண்பர்கள் ஏன் அழுகிறேன் எனக் கேட்டார். அந்த ஜோடி சிவனும் காளியுமல்லோ என்று சொன்னேன். அடுத்த நாட்காலை சுவாமி தரிசனத்தின் போது நேரே என்னிடம் வந்து தரிசனம் கிடைத்ததா? எனக் கேட்டார். இச் செய்கை நான் நினைத்ததை உறுதிப்படுத்தியது.

அந்தவருட நிகழ்விற்கு மாணவர்களுடைய பெற்றோர்களையும் அழைத்திருந்தார்கள். நாடகத்தின் போது சுவாமி எனது தாயாரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். நாடகத்தில் நரேந்திரனின் (சுவாமி விவேகானந்தர்) தகப்பனார் இறந்த போது, பெரிய கடன் சுமையை விட்டுச் சென்றார். நரேன் ஏதாவது வேலை செய்ய வேண்டுமேயென்று நினைக்க அவரின் குரு ஸ்ரீ இராமகிருஸ்ணர் தாய் காளியிடம் கேட்கச் சொன்னார். நரேன் காளியம்மனிடம் போய்க் கேட்க முனைந்ததும் அவரின் வாயிலிருந்து "தாயே எனக்கு பக்தியும், ஞானமும், வைராக்கியமும் தந்தருள்வாயே என்று வந்தது. ஸ்ரீஇராமகிருஸ்ணர் தாயிடம் கேட்டாயா? என்று வினாவத் தான் கேட்டதைச் சொன்னார். திரும்பவும் கேட்கும்படி குரு சொன்னார். நரேன் திரும்பவும் அதையே கேட்டார். மூன்று தடவையும் இதையே கேட்டார். வீட்டு நிலமையைப் பற்றிச் சொல்ல வில்லை. குருவானர் நரேனின் தலைமேல் கை வைத்து ஆசீர்வதிக்க நரேன் நிர்விகல்ப சமாதி நிலையை அனுபவித்தார். இதைப் பார்த்து சுவாமி புன்னகை புரிந்தார். எனது தாயார் விடுதிக்கு வந்ததும் விம்மி விம்மி அழுதார். ஏன் என்று கேட்ட பொழுது நேற்றுத்தான் எமது வீட்டை வரிஇலாக உத்தியோக த்தர்கள் துருவித் துருவிப் பார்த்தார்கள் என்று சொல்லி, என்னைச் சுவாமியிடம் வழிகாட்டும்படி கேட்கச் சொன்னார்.

அடுத்த நாள் தரிசனத்தின் போது சுவாமி நேரே என்னிடம் வந்து என்ன வேண்டும் என்று கேட்டார். நான் முழங்காலில் நின்று எனக்கு பக்தி, ஞானம், வைராக்கியம் தான் வேண்டுமென்றேன். திரும்பவும் திரும்பவும் சுவாமி கேட்க, நான் அதையே திரும்பக் திரும்பக் கேட்டேன் நாடகத்தில் நடந்த மாதிரியே வாழ்விலும் நிகழ்ந்துள்ளது. தாயாரும் என்னிடம் சுவாமியிடம் எங்கள் நிலையைப் பற்றி சொன்னாயா என்று கேட்டார். நான் கேட்டதைச் சொன்னேன். நாம் சுவாமியிடம் உலக வாழ்க்கை விடயங்களைப் பற்றிக் கேட்பது நல்லதல்ல. நாம் அவரிடமிருந்து மிகவும் மேலானதைக் கேட்க வேண்டும். எங்களின் விருப்பப்படி சுவாமி நடக்க வேண்டுமென்றும் நினைக்கக் கூடாது.

அடுத்தநாள் பின்னேர தரிசனத்தின் போது சுவாமி என்முன்னே வந்து, ஏய் ஹிரண்யகசிபு என்று அழைத்தார். பக்கத்திலிருந்த மாணவன் நான் சுவாமி விவேகானந்தராக நடித்தேன் என்று சொன்னார். சுவாமி திரும்பவும் ஹிரண்யகசிபு என்றே கூப்பிட்டுச் சென்றார். சுவாமி என்னை ஏன் அப்படிக் கூப்பிட்டாரென சிந்தித்த போதுதான் எங்களின் அடுத்த நாடகத்திற்கு, போடப்பட்டவர் வராததால் என்னை அவசரமாக ஹிரண்யகசிபுவின் வேடத்தை ஏற்க வேண்டியிருந்தது. சுவாமிக்கு எல்லாம் தெரியும்.

சுவாமி எங்களை அணுகியதும் எங்களின் மனம் செயலற்று, அவரின் சங்கல்பப்பமே வெளிப்படும். பிரார்த்தனையில் சுவாமியினால் தூண்டப்பட்டதையே நாம் கேட்போம். சுவாமிதான் கதைப்பார். நாமல்ல என்பதை நாம் அறிவோம்.

சுவாமியின் சங்கல்ப்பத்தைவிட மனிதனின் சங்கல்ப்பம் உண்டா? என்று ஓர் கருத்து பரிமாறலை சுவாமி நடத்தனார். அப்போது மாணவன் ஒருவன் பேனாவை தனது பொக்கற்றிலிருந்து எடுத்து உயர்த்திக் காட்டினார். இது தனது சங்கல்ப்பமே என்று சுவாமியிடம் சொன்னார். அப்போது சுவாமி மாணவனின் வலது கையைத் தூக்கச் சொன்னார். மாணவன் உசாராகத் தூக்கினார். பின்பும் தூக்கச் சொன்னார் அவனால் எவ்வளவு முயற்சித்தும் தூக்க முடியவில்லை. சுவாமி ஏன் தூக்க முடியவில்லை? எல்லாம் சுவாமியின் சங்கல்ப்பமே என்று செயல் மூலம் அறிவு புகட்டினார். எல்லாம் அவரின் திட்டப்படியே நடக்கும். ஒன்றும் தற்செயலாக நடப்பதில்லை. சாயியின் செயலே என்று ஆங்கிலத்தில் Not Coincidence, All sai incidence என்று அழகாகச் சொன்னார். த்ரையி பிருந்தாவனில், சுவாமி எங்களுடன் அருகாமையிலிருந்து நெருக்கமாக உரையாடுவார். எங்களைப் பார்த்து, நீங்கள் படிப்பு முடிந்து வெளியேறப் போகின்றீர்கள் கல்யாணம் (Marrige) என்றால் என்ன என்று சொல்ல வேண்டும் உங்களுக்கு லைலா மஜனு (Lila Majnu) காதல் கதையைப் பற்றித் தெரியுமா? சுவாமி சொன்னார் அவர்களிடையே உள்ள காதல் தூய்மையானதும் ஆழமானதுமாகும். சினிமாவில் பார்க்கும் காதலைப் போலல்ல. இரு உடலும் ஓர் உயிரும் போலானது. மஜனு சாதாரண குலத்தைச் சேர்ந்தவன் லைலா அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தவள். லைலாவின் தகப்பனாருக்குப் பிடிக்கவில்லை. மஜனுவைப் பிடித்து சிறையிலிட்டு சவுக்கடி கொடுக்கும்படி கட்டளையிட்டார். கால் கைகள் சங்கிலியால் கட்டப்பட்டன. ஒவ்வொரு சவுக்கடியின் போதும். தொடர்ச்சியாகவும் லைலா லைலா என்ற நாமத்தைச் சொல்லிக் கொண்டேயிருந்தான் இது இதயத்திலிருந்து எழுந்தபடியால் நாமஸ்மரணையாகி நாமம் ஒரு பாதுகாப்பச் சங்கிலியாக மாறி அவனைக் கட்டி வைத்த சங்கிலியை உடைத்தது. நாமஸ்மரணை அன்புடன் சொல்லப்பட வேண்டும். இலட்சியமான கல்யாணத்தில் முதல் ஒருவர் மற்றவரைப் பற்றிய தெளிவான விளக்கம் ஏற்பட்டு பின்பு அதற்கேற்ப வாழ்க்கையைச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும். மாறிச் செய்தால் சங்கடந்தான் ஏற்படும். இந்தக் கருத்துப் பரிமாறல் முடிவில் ஒரு மாணவன் சுவாமியைக் கல்யாணம் செய்யவேண்டுமென்று எண்ணினான். சுவாமி என்னைப் பார்த்து, இவன் எப்போதும் கல்யாணத்தைப் பற்றியே நினைக்கிறான் என்றார். எனக்குப் பெரிய சங்கடமாயிருந்தது. சுவாமியே விளங்கப் படுத்தினாார்.

ஆங்கிலச் சொல் மரீஜ் ( Marrige) என்றால் மேர்ஜ் இன் (Merge in) என்பதையே குறிக்கிறது. நீங்கள் எல்லோரும் சுவாமியுடன் ஒன்று சேரவே விரும்புகிறீர்களல்லவா? இதைத்தான் நான் கல்யாணம் என்று சொன்னேன். ஒவ்வொரு செயலிலும், நிகழ்விலும் ஆழ்ந்த படிப்பினை இருக்கும்.

நான் கல்முனை சென்றிருந்தேன் அங்குள்ள மக்களில் அநேகர் சுவாமியின் தரிசனத்தைப் பெறவில்லையாகினும், சுவாமியின் மேல் அசையாத நம்பிக்கை வைத்துள்ளதை நான் உணர்ந்தேன். அங்கே காலைச் சாப்பாட்டிற்கு இட்டலியும் சட்னியும் தந்தர்கள். அப்போது சுவாமியின் கூற்று ஞாபகத்திற்கு வந்தது. ஒருமுறை இட்டலி சட்னி கொடுக்கப்பட்ட நேரம் எங்களைப் பார்த்து தான் இட்டலியா அல்லது சட்னியா என்று கேட்டார். நாம் மௌனமாக இருந்தோம். சுவாமி" இட்டலி உலகம், சட்னிதான் கடவுள் என்று சொன்னார். நாங்கள் அவரிடம் இது எப்படி? பெரிய முக்கியமான பொருள் இட்டலி. சிறிதளவு சட்டனியை எப்படி கடவுளுக்கு ஒப்பிடலாம். என்று கேட்டோம். சட்னி இல்லாது போனால் இட்டலியில் சுவை இருக்காது. உலகம் இட்டலி நான் உலகுக்கு சுவையூட்டும் சட்னி என்று விளக்கினார். அவர் எப்போதுமே நாங்கள் தெய்வங்களென்று நினைவூட்டுவார். இதையே அவரின் செயல்கள் எல்லாம் எமக்கு வலியுறுத்தும்.

அவதாரங்கள் ஒவ்வொன்றின் கைகளில் ஏதாவது (சங்கு, சக்கரம், முதலியன) இருக்கும். எமது பகவானின் கைகளில் பக்தர்கள் கொடுத்த கடிதங்களே இருக்கும். அவர் கடிதங்கள் எல்லாம் வாசிப்பார். அவர் இரவில் சிறிய விளக்கின் மூலம் ஏராளமான கடிதங்களை தெரிந்து தெரிந்து வாசிப்பார். நீங்கள் கடிதம் எழுதுவதனால் இருதடவை எனது ஆசீர்வாதம் கிடைக்கிறது என்றார். நாங்கள் கடிதத்தை எழுதும் பொழுது நாங்கள் அவரை நினைத்தபடியால் முதல் ஆசீர்வாதம். அவர் கடிதத்தை வாசிக்கும் பொழுது அவர் எங்களைப் பற்றிச் சிந்திக்கிறார். இது இரண்டாவது ஆசீர்வாதம்.

கடிதங்களை நாம் வாசிப்பது போல் வாசியாமலே உள்ளிருப்பது எல்லாம் தெரியும். இதை எங்களுக்கு இப்படியாகத் தெரியப்படுத்தினார். பிருந்தாவன் வளாகத்தில் படிக்கும் பொழுது, ஒருநாள் எமது ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை. சுவாமியின் வாசஸ்தலம் அருகில் இருந்தது. நாம் எல்லோரும் சுவாமியைப் போய்த் தரிசிப்போமென்று சப்தம் போடாமல் அவரின் அறைக்கதவடிக்குப் போனோம், சிறிய கதவு நீக்கலால் சுவாமி கடிதம் வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக இருந்து எட்டி எட்டிப் பார்க்கும் பொழுது சடுதியாக நான் முன்னுக்குத் தள்ளப்பட்டு கதவை முழுமையாகத் திறந்து விட்டோம். பகவான் கோபிப்பாரோ என்ற பயம் இருந்தாலும், நாம் அமைதியாக அவரைச் சூழ்ந்து அவர் கடிதம் வாசிப்பதையே பார்த்தோம். அவரும் தலையை நிமிர்த்தி புன்னகை புரிந்தார். சுவாமி சடுதியாக ஒரு கடிதத்தை எடுத்து இதற்குள் துளசி இலை இருப்பதை திறந்து பார்க்கும் படி ஒரு மாணவனிடம் கொடுத்தார். திறந்ததும் துளசி இலை இருந்தது. இன்னொரு கடித்தை வேறொரு மாணவனிடம் கொடுத்து அதனுள் கராம்பு இருப்பதாய்ச் சொன்னார். அதனுள்ளும் கராம்பு இருப்பதை திறந்து பார்த்தோம். இன்னொரு கடிதத்தைக் கொடுத்து அதனுள் 5 ருபாய் நோட்டு இருப்பதாய்ச் சொன்னார். திறந்து பார்த்தால் அது இருந்தது. சிலருக்கு இன்னும் சந்தேகம் இருந்தது. சுவாமி கையால் தடவிக் கண்டுபிடித்தாரா? அல்லது தனது திருஸ்டி மூலம் கண்டாரா? என்பதே ஐயம். சுவாமி இன்னொரு மாணவன் எழுதிய கடிதத்தைக் கொடுத்து அதில் எழுதிய எல்லாவற்றையும் சொன்னார். மாணவன் உடைத்து வாசித்ததும் அதில் எழுதியதெல்லாவற்றையும் சுவாமி கூறியதாகவே இருந்தது. எழுதிய மாணவனே வாசித்துக் காட்டினார். இது எல்லாம் ஒரு நாடகமே என்றார். அவர் தனது பக்தர்களையோ, மாணவர்களையோ ஒருபோதும் அவமதிக்க மாட்டார். ஏனையோர் முன்னிலையில் ஏளனம் செய்யவும் மாட்டார். சுவாமியின் அறையை விட்டு வெளியே வந்த போது முதலில் கடிதம் கொடுத்த மாணவர்கள் இருவரும் கண்ணீ விட்டார்கள். ஏன் என்று வினாவிய போது தாங்கள் மூன்றாவது கடிதம் வாசிக்கப்படும் வரை சந்தேகம் கொண்டோம். பின்னர் தான் சுவாமி எல்லாம் அறிபவர் என்பது எம் மனதில் உறுதியானது என்று கூறினார்கள்.

நான் பட்டதாரி மாணவனாக இருந்த போது பகவானைப் போலவே நானும் வரவேண்டுமென்றே பிரார்த்தனை செய்தேன். பிரசாந்தி நிலையத்தில் ஹைதராபாத் இளைஞர்கள் எவ்வளவு மும்முரமாக வேலை செய்வதைப் பார்த்து நானும் அப்படிச் செய்ய அருளவேண்டுமென்று சுவாமியை வேண்டுவேன். எனது படிப்பு முடிந்தாலும் சுவாமி புறப்பட அனுமதிக்கவுமில்லை, வேலை செய்ய சந்தர்ப்பமும் தரவில்லை. தரிசனத்திற்குப் போவதும், உண்ணுவதும், உறங்குவதுமாக இருப்பதை நான் விரும்பவில்லை. நான் இரவில் கணபதி பீடத்தை 108 தடவை சுற்றுவேன். ஒருநாள் நடுநிசி, சமாதி வீதியிலுள்ள எனது விடுதிக்குப் போகும் பொழுது ஈஸ்வரம்மா சமாதியின் முன்புள்ள வீதியில் குப்பை கூழங்கள் நிறையப் போடப்பட்டிருந்தது. துர்நாற்றமும் வீசியது. அப்போது நான் அடுத்தநாட் காலை முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாக இவற்றை அகற்றி, சரியான முறையில் குப்பைத் தொட்டியும் கட்டவேண்டுமென்ற சங்கல்ப்பத்துடன் நித்திரைக்குப் போனேன். அடுத்த நாட் காலை அவ்விடத்திற்கு வந்த போது நான் செய்ய வேண்டுமென்று நினைத்த மாதிரியே குப்பைத் தொட்டி கட்டப்பட்டு குப்பைகளெல்லாம் அகற்றப்பட்டு மிகவும் சுத்தமாக இருப்பதைக் கண்டு வியந்தேன். யாரால் இப்படி இவ்வளவு வேலையையும் குறுகிய நேரத்தில், இரவில் செய்து முடிக்கலாம் எனறு ஆழ்ந்து யோசித்த போது பகவான் தான் இதைச் செய்துள்ளாரெனத் தோன்றியது. நான் காலை தரிசனத்திற்காகச் சென்றிருந்தேன் அருகாமையில் பேராசிரியர் அனில்குமாரும் இருந்தார். சுவாமி எங்களை அணுகியதும் ஏ! அனில்குமார் எப்படி? என்று கேட்க அனில்குமார் அவர்கள் நன்றாக உள்ளேன் என்றார். சுவாமி: அனில்குமார் நீ அப்படியாய் இருக்கலாம் எனது பையன்கள் நல்லாயில்லை என்கிறார்களே நான் அவர்களது நேரத்தை வீணாக்குகிறேன் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமலே நான் மிகவும் தீவிரமாகப் பதப்படுத்துகிறேன். அவர்களை என்னைப் போல வரச் செய்து கொண்டிருக்கிறேன். நான் சங்கல்ப்பித்ததும் அது நடக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். இது எங்களுக்குத் தந்த முக்கிய செய்தி. சுவாமியின் கூற்று, சமாதி வீதியில் இரவு நிகழ்ந்ததை உறுதிப்படுத்தியது.

ஒரு கதை சுவாமி சொன்னார், ஒரு பையன் ஆமையொன்றைத் தனது செல்லப் பிராணியாக மிகவும் பற்றுடன் வளர்த்து வந்தான். ஒரு நாள் அது மறுபுறமாகப் பிரண்டு ஒரு அசைவுமில்லாமல் இருந்தது. அது இறந்து விட்டதென்று தகப்பனார் சொல்ல பையன் மிகுந்த துக்கமடைந்தான். அதைக் குறைப்பதற்காக தகப்பனார் அருமையானன ஆமை இறந்துவிட்டாலும் நாங்கள் பெரிய விதத்தில் மரணச்சடங்கைச் செய்வோம் உனது நண்பர்களை வரச் சொல்லு, பாண்ட் வாத்தியமும் ஒழுங்கு செய்வோம் எல்லாம் ஆயத்தமாகி காவிக் கொண்டு போகத் தூக்கிய போது அது உயிர்த்தது. இது பையனுக்குச் சந்தோசத்தைக் கொடுக்கவில்லை. தான் செய்த ஆயத்தமெல்லாம் வீணாப் போகுதே என்று கவலைப்பட்டான். அது மாத்திரமல்ல, ஆமையைக் கொல்லுமாறு மன்றாடினான். சகல மரியாதை களுடனும் சடங்குகளுடனும் மரண நிகழ்வை நடத்த வேண்டுமென்று அடம்பிடித்தான். இதில் நாம் கற்ற பாடம் யாது?

நாங்கள் செயலைப் பற்றி சிந்திக்கிறோமே யொழிய என்னத்திற்காக என்ன நோக்கத்திற்காக ஒன்றைச் செய்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம்.

இன்னொரு நிகழ்வைப் பற்றிக்கூற விரும்புகிறேன் நான் உடம்பல்ல என்பதை எப்படி உணர்வது? நுள்ளினால் நோகிறது, யாரும் பேசினால் துன்பம் வருகிறது. ஆன்மீகத்தில் முதல் நம்பிக்கை எழ வேண்டும். பின்புதான் அனுபவம் ஏற்படும். நான் பல மாதங்களாக நான் உடம்பல்ல, உடம்பல்ல என்ற சிந்தனையை ஆழமாகப் பதித்து நான் சுவாமி, நான் சுவாமி என்று எண்ணிச் செயலிலும் வெளிப்பட்டது. சில மாதங்கள் கழிந்த பின்பு எனக்கு ஒரு விதமான ஆனந்த நிலை ஏற்பட்டது. இதைத் தான் சுவாமி மாணவர்களுடன் நடத்திய நேர்காணலின் போது தெரியப்படுத்தினார்.

சுவாமி நாங்கள் சிறு விளையாட்டில் பங்குபற்றுவோம். நான் ஆங்கில எழுத்துக்களைச் சொன்னதும் அடுத்தது எது வருமென்று நீங்கள் ஒவ்வொருவரும் யோசித்துக் குறிக்க வேண்டும். சுவாமி A நாங்கள் சொன்னோம் B சுவாமி C என்றார் நாங்கள் D என்றோம் சுவாமி E என்றார் நாமும் F என்று சொன்னோம். சுவாமி சடுதியாக M என்றார், நாங்களும் உடனே N என்றோம். சுவாமி உங்களின் மறுமொழி BDF என்ற கிரமத்தில் அடுத்தது H என்றே சொல்லியிருக்க வேண்டும். நானும் முறையை மாற்றி M என்றதும் நீங்களும் முறையை மாற்றி N என்று சொன்னீர்கள் இதே மாதிரித்தான் ஒரு முறை (Patern) மாறினால் நீங்களும் உடனே முறையை மாற்ற வேண்டும். துன்பங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தால் அதையே எப்போதும் யோசித்துக் கொண்டிருந்தால் துன்பங்கள் விளையும். எமது யோசனை முறையை மாற்ற நிகழ்வுகளும் மாறத் தொடங்கும். நாம் ஒவ்வொருவரும் முறையை மாற்றலாம் இப்படி மாற்றும் பொழுதுதான் அற்புதங்கள் நிகழ்கின்றன.

நான் சுவாமி உடம்பல்ல என்ற எண்ணம் ஆழமாக, ஆழமாக எனது செயல்களிலும் சுவாமியின் ஆசைவுகளைப் போன்றேயிருந்தன. (கை அசைவு, நடை ஆகியன) சக மாணவர்கள் என் மீது கடினமாக "விவேக் நீ போடும் நாடகத்தை நிற்பாட்டு பைத்தியம் போல் தெரிகிறது" என்றார்கள். நான் விடவில்லை. நான் செய்வது அல்லது அசைவுகள் என்னை அறியாமலே நடக்கின்றன. நான் எனது சாதனையை தொடர்ந்து செய்தேன்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அன்று எமது விளையாட்டு விழா. நாங்கள் மும்முரமாக ஒரு பெரிய உருவம் அமைப்பதில் ஆர்வமாய் இருந்தோம். அது 40 அடி உயரம் அதில் பகவானின் கைகளில் பெரிய உலகம் இருப்பதாய் உருவாக்கினோம். சுவாமி வந்து பார்த்து சிறு பிள்ளைபோல் ஆனந்தமடைந்தார். (இது குல்வந்த் மண்டபத்தில் நடந்தது. அதுதான் எனது கடைசி வருட பரிசளிப்பு விழா ) ஒவ்வொரு வருடமும் பரிசு எடுத்தவன் இம்முறை கிடைக்காதே என்று ஒரு சிறு கவலை. அவ் விழாவிற்கான வேலைகளைச் செய்து விடுதிக்கு காலை 3.00 மணிக்குப் போய்ப்படுத்தேன். சிறிது நேரத்தில் (4.30 காலை) நான் எழும்பினேன். என்ன அதிசயம் எனது படுக்கையில் ஒருவர் படுத்திருந்த போல் இருந்தது. உற்றுப் பார்த்த போது என் உடம்புதான் எனக்கு பெரிய அதிர்ச்சியும் பயமும். நான் இறந்து விட்டேனோ என்று நினைத்தேன். எத்தனையோ அலுவல்களை செய்யவில்லையே என்று யோசித்தேன். காற்றினில் பஞ்சுபோல் மிதந்து சென்றேன். சுரங்கத்திற்குள்ளாலே இழுக்கப்பட்டு சென்றேன். எல்லாம் ஒளி மயமாக இருந்தது. பேரானந்த அனுபவம். சுவாமி அங்கே பிரசன்னமாகி திரும்பவும் என்னை உடம்பிற்குள் செல்லுமாறு பணித்தார். எனக்குப் போகவிருப்பமில்லை யென்று சொன்னேன். சுவாமி திரும்பி அந்த உபகரணத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்குள் போக வேண்டுமென வற்புறுத்தி செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கிறது என்று சொல்லி உடம்புக்குள் தள்ளி விட்டார். இந்த அனுபவம் நான் உடம்பல்ல என்பதை உறுதிப்படுத்தியது.

அடுத்த நாள் பகவான் உரையாற்றும் பொழுது சொன்னார்: எனது பையன்கள் சுவாமியின் சந்தோசத் தையே வேண்டுகிறார்கள். அவர்களுக்கு நான் விசேட பரிசு கொடுப்பேன். அதாவது அவர்கள் அழியாத அம்ருத புத்திரர்கள் என்ற அனுபவத்தை அடையச் செய்வேன். என்னைப் பார்த்து அது எப்படி இருந்தது? என்று கேட்டு நான் மிகவும் நன்றி என்று சொன்னேன். சுவாமி நன்றி சொல்லத் தேவையில்லை உனக்கு விருப்பமாய் இருந்ததா என்று கேட்டார்? நாம் எமது கைகளை வெறுமையாக்கினால் தான், சுவாமி நிரப்புவார். (இத்துடன் சிறிய இடைவேளை பின்பு சொற்பொழிவு ஆரம்பமாகியது)

கர்ம விதி எப்படியானது? ஒரு நிகழ்வைக் கூற விரும்புகிறேன். ஐரோப்பிய மனவசப் படுத்தும் நிபுணர் (Edward keesy) ஒரு மிகவும் பருமனான பெண்ணுக்கு மன சிகிச்சை அளித்தார். ஏனைய வைத்தியங்கள் பயனளிக்காததால், மிகவும் மனமுடைந்த நிலையில் இவரிடம் போனார். சிகிச்சையின் போது (Psychoanalysis) அவர் ஓர் வித்தியாசமான மொழியில் பேசினார். அதைப் பதிவு செய்து மொழி ஆராய்ச்சியாளர்களிடம் கொடுத்த பொழுது, அது ஓர் மிகவும் பழைய உரோம மொழி என்று சொன்னார்கள். அவன் "தான் அக் காலத்தில் உரோமாபுரியில் மிகச் சிறந்த மெய்வல்லுனராக அழகான உடற் கட்டுடன் இருந்தேன். அப்போது பருமமாயிருந்தவர்களைப் பார்த்து மிகவும் கேலி செய்தேன்." என்று சொன்னாள். எவ்வளவு வருடங்களுக்குப் பின் கர்மவினையை அனுபவிக்க வேண்டியிருந்தது. தீய கர்ம வினைகளைச் சேர்க்க வேண்டாம். கர்ம விதி மாற்ற முடியாதென்றால் கடவுளின் பங்கு என்ன என்று கேட்கலாம். சத்குரு மூன்று விதமாகச் செயற்படுவார்.

1) சத்திரசிகிச்சையின் போது எவ்வாறு நோ, வலி இல்லாது செய்யலாமோ, அதே போல வினையை அனுபவிக்கும் போது ஏற்படும் துன்பத்தைக் குறைப்பார்.
2) மருந்துப் போத்தல்களில் எப்பொழுதும் காலாவதியாகும் திகதி போடப்பட்டிருக்கும் இத்திகதியை மாற்றிப் பின் போடலாம்.
3) நிறைய சில்லறைக் காசுகள் ஒருவரிடம் இருந்தால் மிகவும் பாரமாயிருக்கும். இவற்றை நோட்டுக்களாக மாற்றினால் பாரம் எவ்வளவோ குறைந்து விடும்.

என்னிடம் வந்தால், நான் நோட்டுக்களாக மாற்றுவேன் என்று சுவாமி சொல்லியுள்ளார்.

"ஒரு அறை பல வருடங்களாகப் பூட்டியிருந்தாலும் யன்னல் கதவை திறந்தவுடன் சூரிய ஒளி பாய்வதைப் போல் நானும் பக்தன் அடைக்கலம் பூண்டதும் கர்மாவை எரித்து விடுவேன்" என்று பகவான் சொல்லியுள்ளார்.

சிறிய சிறிய ஆசைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படலாம். ஒருவனுக்கு மேர்சிடிஸ் பென்ஸ் கார் ஓட வேண்டுமென்ற ஆசை நிறைவேற்றப்படாது இறந்து விட்டான். அவன் பணக்காரனாகப் பிறந்து அப்படியான காரை வாங்கி ஓட்டலாம். அல்லது பணக்கார குடும்பத்திலுள்ள காருக்கு கார் ஓட்டியாக சென்று காரை ஓட்டலாம்.

இன்னும் ஓர் நிகழ்வு:

சுவாமியினுடைய இளமைக்கால சக மாணவன் பின்பு சுவாமியின் பள்ளிக்கூடத்திலும் படித்தார். சுவாமியிடம் நல்ல அன்பு, சுவாமியும் அவரைக் கவனித்துக் கொண்டார். அவருடைய இரு பெண் பிள்ளைகளின் விவாகத்திற்கு போதியளவு சீதனம் இல்லாத குறையைத்தீர்க்குமாறு பகவானிடம் தரிசனத்தின் போது கேட்டார். சுவாமி நேர்காணலுக்கு கூப்பிட்டார், நான் பணமாகத் தரமுடியாது ஆனால் நான் சொன்னபடி செய்யலாமா? என்று கேட்டார். பக்தன் ஆமோதிக்கவே அறையின் நிலத்தில் ஓர் துவாரம் தோன்றி ஒரு பெரிய கரிய நாகபாம்பு வெளியே வந்தது. பக்தன் பயந்து சுவாமியைச் சுற்றி சுற்றி ஓட சுவாமி அதைப்பிடி என்று சொன்னார். பயத்தின் நிமித்தம் பகவான் சொன்னபடி செய்யவில்லை. பாம்பு சிறிது நேரத்தின் பின் துவாரத்திற்குள் நுழைந்து சென்றது. அப்போது பகவான் பிடி பிடி என்று சொல்ல, பக்தன் வாலைப் பிடித்தார். என்ன அதிசயம் பிடித்த வால் உடனே தங்கமாக மாறியது. சுவாமி "நான் சொன்ன மாதிரி முதலிலே பாம்பைப் பிடித்திருந்தால் எவ்வளவு தங்கம் கிடைத்திருக்கும். சந்தர்ப்பம் போய் விட்டது. கிடைத்ததைக் கொண்டு பெண் பிள்ளைகளின் கல்யாணத்தைச் செய் என்று ஆசீர்வதித்து அனுப்பினார். பகவான் சொன்னதை வேறு சிந்தனையின்றி உடனே செய்ய வேண்டும் என்பது இங்கே காட்டப்பட்டுள்ளது.

எனது படிப்பும் முடிந்து சில மாதங்களின் பின்பு வெளியே (புதுடில்லிக்கு) போய் வேலை செய்யுமாறு பணித்தார். அங்கே வேலை செய்த பொழுது, ஆச்சிரமத்தில் சிறு பிள்ளைகளுக்குச் செவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. ஒருநாள் கம்பனியின் வேண்டுகோளை நிறைவேற்றாமல் ஆச்சிரம பிள்ளைகளின் வேண்டுகோளை நிறைவேற்றினேன். கம்பனி என்னை வேலை நீக்கம் செய்யுமா? என எண்ணி அறைக்குப் போன போது சுவாமி என் உருவம் எடுத்து கம்பனி வேலையை திறமையாகச் செய்து கொடுத்தார். இந் நிகழ்வை யாழ்ப்பாணத்தில் விரிவாகச் சொல்லியுள்ளேன். (கடந்த சாயி மார்க்கத்தில் பிரசுரமாயுள்ளது) சுவாமியின் பணியை நாம் செய்தால் அவர் எம் பணியைச் செய்வார் என்பது பொன் மொழி.

இந்நிகழ்வை சுவாமி குல்வந் மண்டபத்தில் சொல்லும்படி பணித்தார். சொல்லும் போது சுவாமியின் கண்கள் கலங்கின. அவர் கண்களை இமை காப்பது போல எம்மைக் காப்பார். முடிவில் என்ன வேண்டுமென்று என்னைக் கேட்டார்.

"நிபந்தனையற்ற அன்பை தாருங்கள்" என்று கேட்டேன். இன்னொரு நேர் காணலின் போது, எங்களைப் பார்த்து விரும்பியதைக் கேளுங்கள் என்றார். நான் "எங்கள் எல்லோரையும் உங்களைப் போல ஆக்குங்கள்" என்றேன். என்னைப் பார்த்து "பெரிய விடயத்தை மிகவும் இலேசாகக் கேட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாயே" என்றார். எனது சக்தியையா விரும்புகிறாய்? என்று கேட்டார். "மகனுக்கு தந்தையிடமுள்ள சொத்தைக் கேட்க உரிமையுண்டு அதைத் தான் கேட்கிறோம்" என்றேன். சுவாமி " நான் எதைத் தர வந்துள்ளேனோ அதையே கேட்டுள்ளாய்" நான் எல்லாம் தருவேன் நேரம் வரவேண்டும்." என்று சொன்னார். என் கையைப் பிடித்து பக்கத்திலே நிறுத்தி புகைப்படம் பிடிப்பித்தார். அவர் வேண்டுமானால் எமது விதியை மாற்றலாம்.


இது ஸ்ரீலங்காவிற்கு முதல் வருகையென்றாலும் சுவாமி கனவிலே என்னை மேலே இருந்து ஸ்ரீலங்காவைக் காட்டியுள்ளார். இதை இரத்தினபுரி என்று சொன்னார். பழமை வாய்ந்த கோவில்களைக் காட்டினார். நான் கடந்த ஜனவரி மாதம் (2012) விவாகம் செய்தேன். அதன் பின்பு பாங்கொக், இந்தனோசியா, போக உத்தேசித்தோம். சுவாமி வேண்டாம் என்று சொல்லி எம்மை ஸ்ரீலங்காவிற்கு அழைத்து வந்துள்ளார்.

எல்லோருக்கும் சாயிராம்

(முடிவில் சகோதரர் பிரபாகரன் நன்றியுரையாற்றினார்)

தமிழில் தொகுப்பு : ஆசிரியர் 15.1.2013

(சகோதரர் விவேகானந்த சாகூ சுவாமியின் பழைய மாணவன் எம்.பி.ஏ பட்டம் பெற்றவர் 14,15, 16 ஜூலை 2012 இல் நடந்த தேசிய இளைஞர் மாநாட்டில் பங்கு பற்றினார். ஏனைய உரைகள் முன்னைய சாயி மார்க்கத்தில் பிரசுரிக்கப்பட்டு விட்டன.)



***குழந்தை பிறந்தவுடன் அழுகிறது. ஏனெனில் ஜீவன் ஆனந்த நிலையிலிருந்து உலகில் சிக்குவதற்கு விரும்பவில்லை. மாயையினுள் வருவதற்கு அதற்கு விருப்பம் இல்லை. முதன் முறையாக மூச்சு விடுவதற்கும் காற்றின் வழியை சுத்தப்படுத்துவதற்கு என்று விஞ்ஞானம் விவரிக்கிறது . ஆனால் அதற்காக அது ஏன் அழவேண்டும்? மூச்சு விடுவதை வேறு வழியில் அதாவது அசைப்பதாலோ, நடுங்க வைப்பதாலோ, ஆரம்பிக்க முடியும் இல்லையா? அழுது கொண்டிருக்கும் குழந்தை பிற்காலத்தில் சிரித்துக் கொண்டு இந்த உலகத்தை திறக்க வேண்டி இருக்கிறது.***

***ஒருவருடைய மடிவினால் அவருடைய வாழ்க்கை தீர்மானிக்கப்பட வேண்டி இருக்கிறது. நாடகத்தில் தன்னுடைய தன்மையைத் தனியாக வைத்துக் கொண்டு, தன் பாத்திரத்தில் அதிகப் பற்று வைக்காமலிருக்கும் நடிகனைப் போல கர்மத்தைச் செய்யும் எல்லாம் ஒரு நாடகம் என்றும், அதில் ஒரு பாத்திரத்தை கடவுள் உங்களுக்கு அளித்திருக்கிறார் என்றும் நினைவு கொள்ளுங்கள். உங்கள் பாத்திரத்தை நன்றாக நடியுங்கள். அப்போது உங்கள் கடமைகள் எல்லாம் முடிகின்றன. அவர் நாடகத்தை உருவாக்கி அதை அனுபவிக் கிறார்.***

***-சாயி பாபா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவானின் நினைவுகள்

***பேராசிரியர் ரவிக்குமார் சைவ மங்கயர் கழகத்தில் நவம்பர் 2012 இல் நடாத்திய உரையின் சாராம்சம். கலாநிதி ரவிக்குமார் அவர்கள் சுவாமியின் பாலவிகாஸ் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலேயே (1969) மாணவனாக சேர்ந்தார். அவர் பாடசாலையிலும் படித்து பின்பு உயர்கல்வி வளாகத்திலும் படித்து இரசாயனவியலில் பட்டம் பெற்றார். அதிலேயே கலாநிதிப் பட்டமும் பெற்றார். 37 வருடங்களாக சுவாமியின் அருகாமையில் இருக்கும் வாய்ப்பைப் பெற்றவர். அவரின் வருகை பகவானின் அருளும் எங்கள் பாக்கியமே என ஸ்ரீலங்கா மத்தியசபையின் செயலாளராக (அப்போது) பதவி வகித்த சாயி சகோதரர் பிரபாகரன் அறிமுகவுரையை நிகழ்த்தி அவரை பேச வருமாறு அழைத்தார்.***



பகவானுக்கு சமர்ப்பணம்: எல்லோருக்கும் சாயிராம், உங்களுக்குள்ள தமிழ்ப் பாண்டித்தியம் எனக்கு இல்லை. என்றாலும் தமிழில் பேச முயற்சிக்கிறேன். 16 வருடங்களுக்கு முன்பு சுவாமியின் 70 ஆவது அவதார வருடம் நடந்த நிகழ்வு, சுவாமி பெரிய குழு ஒன்றை நேர்காணல் அறைக்கு கூட்டிச் சென்றார். நான் தரிசனத்தின் போது முதல் வரிசையில் இருந்தேன். சுவாமி வெளியே வரும் வரை கையிலிருந்த புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினேன். அப் புத்தகம் எனது சகோதரி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெரியபுராணம்.

திருஞானசம்பந்தருடைய வாழ்க்கைப் பகுதியை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் அவர் குழந்தையாக இருந்த போது, அழுது அடம்பிடித்து தகப்பனாருடன் கேணிக்கு போன பக்கம், தகப்பனார் நீரில் மறைந்ததும் குழந்தை வீரிட்டு அழுதது, அத் தருணத்தில் சுவாமி கதவைத் திறந்து "ஏ ரவீ எத்தனை லீட்டர் பால் வேணும்?" என்று மூன்று தடவை கேட்டு விட்டு உள்ளே சென்றார். எனக்குப் புதிராக இருந்தது. புத்தகத்தை தொடர்ந்து வாசித்த போது, பிள்ளையின் குரலைக் கேட்டு, சிவனும் பார்வதியும் காட்சி கொடுத்து பால் கொடுத்த கட்டம் வந்ததும் புதிர் விளங்கியது. என்னே ஆண்டவனின் கருணை ஆண்டவன் எல்லாம் அறிந்தவர்.

1963 ஆம் ஆண்டு இடது பக்கம் பாரிச சாதத்தால் பாதிக்கப்பட்டார். 8 நாட்களுக்குப் பின்பு தரிசனம் கொடுக்க வேண்டும் என்று இறுக்கமாகச் சொல்ல பக்தர்கள் சுவாமியைத் தரிசன மண்டபத்திற்கு தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவர் சொல்வது தெளிவாகக் கேட்கவில்லை. தண்ணீர், தண்ணீர் என்று கேட்டதைத் தெரிந்து தண்ணீர் ஒரு செம்பில் கொடுத்தார்கள். அவர் நீரைத் தனது வலது கையால் எடுத்து இடது பக்கத்திலுள்ள கை கால்களுக்குத் தெளித்ததும், பாரிசவாதம் நீங்கியது. சொற்களும் தெளிவாக வந்தன. சுவாமி உடனே அருளுரை வழங்கினார்.

பரத்வாஜ முனிவர் 100 வருடங்களுக்கு பின்பும் வேதம் படித்து முடியவில்லையே என்று சிவனை வேண்ட ஆயுள் மேலும் 100 வருடத்தால் நீடிக்கப்பட்டது பின்பும் போதாது என்று வேண்ட மேலும் 100 வருடம் கொடுக்கப்பட்டது. 300 வருடங்கள் போயும் அவரால் படித்து முடிக்கவில்லை. அவர் மீண்டும் வரம் கேட்க எத்தனை வருடம் சென்றாலும் படித்து முடிக்க முடியாது. ஆனாலும் ஒரு யாகம் செய்தால் முழுவதையும் அறியும் சக்தி வந்து விடும். அந்த யாகத்திற்கு சிவன், பார்வதி விருந்தாளியாக அழைக்க வேண்டும் என்று வழிகாட்டப்பட்டது. முனிவர் சிவன், பார்வதியை அழைக்க கைலாசத்திற்கு சென்றார். அங்கே சிவனும் பார்வதியும் சிவதாண்டவ நடனம் தொடர்ந்து ஆடிக் கொண்டே இருந்தார்கள். சிவனின் பார்வை விழவேயில்லை. பார்வதி கண்டும் ஒரு புன்னகை மட்டும் புரிந்தாள். 8 நாட்கள் கழிந்த பின்பு முனிவர் களைப்பினால் மயங்கி விழுந்தார். அப்பொழுது இடது பக்கம் இயக்கமின்றி கிடந்ததை சிவன் ஓடி வந்து பார்த்ததும் அறிந்தார். சிந்தை தெளிந்ததும் இருவரும் யாகத்திற்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். நம்முடைய உதாசீனத் திற்காக வரம் கேட்கச் சொன்னார். யாத்திற்கு வரவேண்டும் என்பதையே கேட்டார். நாங்கள் வருவோம், மேலாக உமது கோத்திரத்தில் 3 தடவை அவதரிப்போம் முதலாவது சீரடி சாயியாகவும் (சிவன்) இரண்டாவது சத்திய சாயி அவதாரமாகவும் (சிவ சக்தி) மூன்றாவது பிரேம சாயி அவதாரமாக (சக்தி) வருவோம். சிவசக்தி அவதாரத்தின் போது 8 நாட்கள் பாரிசவாதத்தை எடுப்பேன் என்றும் சொன்னார். சுவாமி எவ்வளவோ அன்பு செலுத்துகின்றார்.

இந்த மண்டபத்தில் சரஸ்வதி தேவியின் விக்கிரகத்தை பார்த்ததும் இன்னொரு நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது. ஒரிசா மாநிலத்தில் குண்டுனி என்ற சிறு கிராமம் உண்டு. அக்கிராமத்தில் ஒரு வைத்தியர் சரஸ்வதி தேவியின் உந்துதலால் வைத்தியராகி அக்கிராமத்திலேயே சேவை செய்தார். அவர் நோயாளி வந்ததும் தேவையான மருந்துகளை கொடுத்து அவசர நிலமையை சமாளிப்பார். நோயாளி சந்தர்ப்பம் கிடைத்ததும் அந்த மருந்துகளை வாங்கி திருப்பிக் கொடுக்க வேண்டும். சிகிச்சைக்காக பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்பதில்லை. ஒரு முறை ஒரு நோயாளி இரவு வந்துள்ளார். தேவையான மருந்தைக் கொடுத்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார். நோயாளி இறந்து போனார் நோயாளியின் மகன் வைத்தியரை கண்டபடி பேசி மருந்தையும் திருப்பி வாங்கிக் கொடுக்கவில்லை. வைத்தியர் தனது கொள்கையை மாற்றினார். இனிமேல் மருந்துக்கு காசு வாங்குவ தென்றும் இல்லையேல் பார்ப்பதில்லையென்றும் கொள்கையை பின்பற்றினார். ஒருநாள் கடுமையான சுகயீனத்தில் நோயாளி வந்தபோது பார்க்க மறுத்து விட்டார். அன்றிரவு அவருக்கு சரஸ்வதி தேவி கனவில் தோன்றி மிகவும் கோபத்துடன் நோயாளியிடம் பணமில்லையென்றாலும் சிகிச்சையளிக்கச் சொன்னார். வைத்தியரும் மன்னிப்புக் கேட்டு சிகிச்சையளிக்கச் தொடங்கினார். இவர் தனிமையாக ஒரு நாள் இருக்கும் பொழுது நெஞ்சு வலியும், மூச்சுக் கஸ்டமும் ஏற்பட்டது. தான் படித்த வைத்தியர் கல்லூரி வைத்தியசாலைக்குப் போனார். அவர்கள் இவரைச் சோதித்த பின்பு நெஞ்சில் இருதயத் தளர்ச்சி உள்ளதைக் கண்டார்கள். அதற்கு பிரபல்யம் வாய்ந்த AIIMS (அகில இந்திய வைத்தியக் கலை நிறுவனம்) ஒப்பரேசனுக்காகப் போனார். இதற்கு 10 இலட்சம் ரூபாய்கள் செலவாகும் என்று சொன்னார்கள். இனத்தவர்கள் காசு சேர்த்து தருவதாகச் சொல்லி ஒப்பரேசனுக்கு ஆயத்தமானார்கள். சுவாமி கனவில் தோன்றி AIIMS இல் 10 இலட்சம் ரூபா செலவில் ஒப்பரேசன் செய்யத் தேவையில்லை, பங்களூரிலுள்ள வைற்பீல்ட் வைத்தியசாலைக்கு வா, இலவசமாக சிகிச்சை நடக்கும் என்று கூறினார். இதுவரை சுவாமியைப் படத்தில்தான் கண்டார். மனைவிக்குச் சுவாமியின் மீது நம்பிக்கை இருந்தது, இருவரும் புட்டபர்த்தி நோக்கி பயணித்தனர். சுவாமி திரும்பவும் கனவில் தோன்றி வைற்பீல்ட் வரச் சொன்னார். இவர்களும் அப்படியே வைற்பீல்ட் சென்றார்கள். அங்கேயுள்ள அதிநவீன விசேட வைத்தியசாலையில் சிகிச்சை வெற்றியாக நடந்தது, எங்கேயோ ஒரு கிராமத்தில் பணிபுரிகின்ற வைத்தியருக்கு கனவிலே தோன்றி உதவியுள்ளார். இது கடவுளால் தான் முடியும்.

அடுத்த நிகழ்வு: எனக்கு முன்னைய மாணவன் ஒருவன் எம்.ஏ சமஸ்கிருதம் முடித்து, மேற்படிப்புக்காக பங்களூர் போய் வந்தார். வைற்பீல்ட் இல் இருந்து 3 மணித்தியாலத்திற்கு ஒரு முறைதான் பஸ் ஓடும். இவர் பலதடவைகள் பஸ்ஸை விட்டு விட்டார். மாணவர்கள் பரீட்சைக்கு போகமுன்பு சுவாமியின் ஆசீர்வாதம் பெற்றுத்தான் போவார்கள். அம்முறை மாணவர் களுக்கு கிடைத்த மண்டப நுழைவுப் பத்திரம் அவருக்குக் கிடைக்கவில்லை. மண்டபப் பத்திரம் கிடைக்காததைப் பயந்து, பயந்து சுவாமியிடம் சொன்னார். சுவாமி "போய்ச் சாப்பிடு, பரீட்சைக்குப் போ" என்று கட்டளையிட்டார். இவர் போனார். செய்வதறியாது கல்லூரி வளவிலுள்ள சீமெந்து வாங்கிலில் இருந்தார். கல்லூரி பீயோன் எங்கிருந்தோ பின்னால் வந்து மண்டபப் பத்திரத்தைக் கொடுத்தார். பெயர் சரியாக இருந்தது, மாணவன் பரீட்சை எழுதினான். பீயோனைக் காணவில்லை. மாயமாய் மறைந்து விட்டான். பின்பு தரிசனத்தின் போது சுவாமி "ஏய், நந்தகுமார் பரீட்சை நன்றாகச் செய்தியா?" என்று கேட்டார். "ஆம் சுவாமி, பல்கலைக்கழக பியோன் மண்டபப் பத்திரத்தைக் கொண்டு வந்து தந்தார்" என்று சொன்னதும், சுவாமி பத்திரம் கொண்டு வந்தது பல்கலைக்கழக பீயோன் (University peon) இல்லை, பிரபஞ்ச பீயோன் (Universe peon). சுவாமி எவ்வளவோ செய்கிறார். மிகவும் சக்தி வாய்ந்த கடவுள்.

ஒரு முறை கோடைக்கானலில் தங்கிய போது எமக்குள்ள அறை சுவாமியின் அறைக்குப் பக்கத் திலேயே இருந்தது. உணவு அருந்தி விட்டு சுவாமி அன்று நிகழ்த்திய உரையை மீட்டெடுத்து குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தேன். எனது நண்பன் முன்னைய பகவானின் மாணவன், இப்போது கற்பிக்கும் தொழில் புரிபவர். தொலைபேசியில் அவரின் தாயாருக்கு விட்டு, விட்டு வலி ஏற்படுகிறது. சுவாமியிடம் சொல்லி விபூதி வாங்கி அனுப்பும்படி சொன்னார். எங்களுக்கு சுவாமியின் கோட்பாடு - ஒருவரும் இடையாட்களாக தொழிற்படக் கூடாது என்பது தெரியும். நீயும் சுவாமியை வேண்டு, நானும் வேண்டுகிறேன் என்று நண்பனுக்குச் சொன்னேன். பி.ப 1.00 மணிக்கு சுவாமி தரிசனம் கொடுக்க வந்தார். சுவாமி என்னைப் பார்த்து " ரவி என்ன சமாச்சாரம்? " என்று வினாவ "சகோதரன் சற்றேஜியின் தாயார் சுகமில்லாது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறார்" என்றேன். சுவாமி "அது ஒன்றுமில்லை. கவலைப்பட வேண்டாம் என்று சொல்லு. சின்னப் பையன் கொஞ்சம் சரியில்லை. அதுதான் கொஞ்சம் சோதனை. வீட்டுக்கு தாயைக் கொண்டு போகச் சொல்லு. 3 நாட்கள் கழித்து ப்ருந்தாவனம் வரச் சொல். அப்போது பிரசாதம் கொடுப்பேன்" என்று சொன்னார். நண்பனுக்குச் சொன்னேன். அவர் டாக்டரிடம் தாயாரை துண்டுவெட்டி வீட்டுக்குப் போக அனுமதி கேட்க, டாக்டர் அசந்து போனார். அதி தீவிர சிகிச்சையில் இருக்கும் ஒருவரை வீட்டுக்கு நேரே அனுப்ப முடியாது. வேண்டுமானால் உங்கள் விருப்பத்தின் பேரில் வைத்தியசாலையை விட்டுப் போகிறோம் என்று கையெழுத்து வைத்து விட்டுக் கொண்டு போகலாம் என்று சொன்னார். சுவாமி சொன்னதைத்தான் செய்கிறேன் என்று டாக்டரிடம் சொல்லிவிட்டுத் தாயாரை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். பின்பு பரிசோதனை செய்த போது ஒரு ஆரோக்கியக் குறைவும் இருக்கவில்லை. சுவாமியின் ஒரு வார்த்தை போதும்.

இன்னொரு நிகழ்வு. நான் புட்டபர்த்தி வளாகத்தில் எனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். எனது அப்பா பெங்களூர் வந்திருந்தார். அவர் சுகவீனப்பட்டார். டாக்டர் ஒப்பரேசன் செய்ய வேண்டுமென்று சொன்னார். என்னுடைய மேற்பார்வையாளர், ஏதோ ஒரு காரணத் திற்காக பெங்களூர் போய்வரச் சொன்னார். த்ரயி ப்ருந்தாவனத்தில் போய் உட்கார்ந்திருந்தேன். சுவாமி கதவைத் திறந்து வந்ததும், "அப்பாவின் ஒப்பரேசன் என்னாச்சு?" அப்பா சுவாமிக்கும் இன்னும் எவ்வளவோ வேலை செய்ய வேண்டும். எல்லாம் நான் பார்க்கிறேன் நீ புட்டபர்த்திக்குப் போ என்று சொன்னார். ஒரு வாரத்திற்குப் பின் பிரசாந்தி நிலையத்திற்கு வந்து "அப்பாவின் ஒப்பரேசன் என்னாச்சு?" வருகிற வியாழக்கிழமை ஒப்பரேசன் எனது வைத்திய சாலையில் நடக்கும். புதன்கிழமை போய்ப்பார்" என்று சொன்னார். வீபூதி பிரசாதம் தந்து அப்பாவிடம் கொடுக்கச் சொன்னார். நான் இரவு 10.00 மணிக்கு போய்ச் சேர்ந்தேன். ப்ருந்தாவன் ஆஸ்பத்திரியிலோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பொது ஆஸ்பத்திரியிலோ அப்பா அனுமதிக்கப்படவில்லை. அடுத்தநாட் காலை தேடிப் பார்ப்போமென்று போய் தூங்கி விட்டு, அடுத்த நாட் காலை எமது வீட்டிற்குப் போனேன். அங்கு சன நடமாட்டம் இருக்கவில்லை. கதவு எல்லாம் திறந்திருந்தன. நான் யோசித்துக் கொண்டிருக்கையில் அப்பா ஆரோக்கியத்துடன் முன் வந்தார். என்ன அப்பா? அவர் தான் பிலோமினா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அடுத்த நாள் ஒப்பரேசனுக்கு ஆயத்தமாயிருந்தார்கள். டாக்டர் பற் தான் சத்திர சிகிச்சை நிபுணர். அன்று காலை ஒரு என்ஜினியர் டாக்டரிடம் போய் தனது கனவில் சுவாமி என் அப்பாவை வீபூதியால் தடவி, சுகப்படுத்தியதை கண்டதாகச் சொன்னார். டாக்டர் திரும்பவும் பரிசோதித்து விட்டு ஒப்பரேசன் தேவையில்லை என்று சொல்லி, வீட்டுக்கு அனுப்பி வைத்தார். நாங்கள் எல்லோரும் பிரசாந்தி நிலையத்திற்கு நன்றிகூறி நமஸ்காரம் செய்யச் சென்றோம். அப்போது நான் மாணவர்களுடன் இருந்த போது, எப்படி அப்பாவை ஒப்பரேசன் மேசையிலிருந்து தப்ப வைத்தேன் என்றதைச் சொல்ல சொன்னார். இதற்கு முன்பு சுவாமி சிறிது நேரம் மாணவர்களுடன் ஏதோ கதைத்தார். அப்பாவுக்கும் பாத நமஸ்காரம் நான் சொல்லி முடித்த பின்பு மாணவன் ஒருவன் என்னிடம் வந்து, சேர் நீங்கள் சொன்ன எல்லாவற்றையும் சுவாமி எங்களுக்கு முதலிலே சொல்லி விட்டார் என்று சொன்னான். கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

"கடவுள் எல்லாம் தெரிந்தும், ஒன்றும் தெரியாதவர் போல நடிப்பார். மனிதன் ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவன் போல் நடப்பான்"

சுவாமி இப்படியெல்லாம் நடத்தி விட்டுக் கடைசியாக ஒரு கேள்வி கேட்பது வழக்கம். அப்போது தான் அவர் தெய்வம் என்பதை உணர்வோம்.

இன்னொரு நிகழ்வு: இதை நான் அடிக்கடி சொல்லிக் கொள்வேன். நான் எம்.எஸ்.சி மாணவனாக இருக்கும் காலம். மாணவர்கள் நாடகம் தயாரித்துக் கொண்டிருந்தோம். எனக்கு தந்த பாத்திரம் கண் தெரியாத சிறு பையன். அதில் யேசு பிரான் அச்சிறுவனுக்கு கண் பார்வை கொடுத்த காட்சி. தரிசனத்தின் போது சுவாமி பெண்கள் பகுதியில் நின்று ஏதோ செய்ய பெரிய கை தட்டல் கேட்டது. சுவாமி என் அருகே வந்து, சுவாமி வந்ததும் கண்பார்வை வந்து விட்டது என்றார். பெண்கள் பகுதியில் 18 வயது பெண் பிறப்பிலிருந்தே கண் தெரியாது. சுவாமி அவளுக்குப் பார்வையைக் கொடுத்தார். அது தான் பெரிய கைதட்டலுக்கு காரணம் என்று சுவாமியே சொன்னார்.


அது நடந்தது 5 வருடங்களுக்குப் பின்பு, நான் ஆய்வு கூடத்தில் ஆய்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது சல்பூரிக் அமிலம் என் கண்ணில் சிதறியது. கண்களைக் கழுவ நீர்கூடக் கிடைக்கவில்லை. கண் எரிவுடன் பார்வையும் போய் விட்டது. சுவாமி விபூதி பிரசாதம் தந்து சரியாகி விடும் என்று சொன்னார். இரண்டாவது நாள் பார்வை வந்து விட்டது. சுவாமி முன் வந்து பாத நமஸ்காரம் தந்து, அடுத்த தடவை கவனமாக இருக்க வேண்டும். கண்ணாடி அணிந்து கொள் என்று சொன்னார். இந்த அசிட் கண்ணில்படும் விபத்து மீண்டும் நிகழ்ந்தது, சுவாமி திரும்பவும் வீபூதி தந்து சுகப்படுத்தினார்.

சுவாமி கண் தந்த தெய்வம்
சுவாமி நான் கண்ட தெய்வம்

ஒவ்வொரு கணமும் சுவாமியின் சிந்தனையில் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். பரிபூரண சரணாகதியடைய வேண்டும்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு:
ஆசிரியர்



***எனது வாழ்க்கை தான் எனது உபதேசம். என் வாழ்க்கை என்பது என்ன? அன்புடன் - மனித இனத்திற்கு 1 நாள் - 24 மணி நேரம், ஒரு வாரம் -ஏழு நாட்களும் அன்புடன் சேவை செய்வது தான். இந்தச் சேவை என்பது நோயாளிகளைக் குணப்படுத்துவது, ஆன்மாக்களை சீர் திருத்துவது, இளைஞர்களுக்குக் கற்பிப்பது, மனித இனத்தின் நலனுக்கு எப்பொழுதும் பாடுபடுவது. இவை தான் என் வாழ்க்கை. நான் உறங்குவதில்லை. எனக்கு ஓய்வு தேவையில்லை. நான் ஓய்வு எடுக்க வேண்டுமானால் இந்த அவதாரம் எடுத்திருக்க மாட்டேன்.***

***- சாயி பாபா***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# உருவமும் அருவமும்

***கலாநிதி ரவிக்குமார் கொழும்பில் 4.11.2012 இல் ஆற்றிய உரையின் தமிழாக்கம் கீழே பிரசுரிக்கப் பட்டுள்ளது. வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன் அவர்கள் அறிமுகம் செய்த பின்பு உரை ஆரம்பமாகியது.***

எனது பிரார்த்தனையுடன் கூடிய ப்ரணாமத்தை சுவாமியின் பொற் கமலப் பாதங்களில் சமர்ப்பிக் கின்றேன். மதிப்புக்குரிய பெரியோர்களே, அன்பான சகோதர சகோதரிகளே எல்லோருக்கும் எனது அன்பான சாயிராம்.

சுவாமி கிராமசேவையிலீடுபடவேண்டுமென்று பிரகடனம் செய்தார். இப்பொழுது குறு வீடியோ படத்தில் எவ்வாறு கிராம சேவையிலீடுபட்டோமென்று காட்டுகிறேன். 70 மாணவர்கள் எமது வளாகத்தில் அருகாமையிலுள்ள பெரபாகவி என்ற பின் தங்கிய கிராமத்தில் சேவையிலீடுபட தீர்மானித்தோம். அங்கு போய்த் தகவல் திரட்டினோம். சிறு சிறு குடிசைகளில் நெருக்கமாக வாழ்வதைக் கண்டோம். மூன்று விதத் தேவைகளை இனங்கண்டோம்.

1) திறந்த அடுப்பில் சமைப்பதால் எவ்வளவோ வெப்ப சக்தி வீணாகிறது.
2) வீடுகளுக்குள் போதியளவு வெளிச்சம் இல்லை.
3) பிள்ளைகள் விளையாடுவதற்கு மைதானம் இல்லை. பாடசாலைக்கருகாமையில் பாவனைக்கில்லாத நிலம் இருப்பதை அவதானித்தோம்.

நாம் 3 குழுக்களாக பிரிந்து செயற்பட்டோம்.

1) சக்தி விரயம் குறைந்த அடுப்புப் பற்றி யோசித்தார்கள். சுவாமியின் அருளினால் கேணல் நாயக் முன் வந்து புகையில்லா அடுப்பை வரைபடம் போட்டு செய்து முடித்தார்.
2) இரண்டாவது குழு வெளிச்சத்தைப் பற்றி ஆராய்ந்து. 2லீட்டர் போத்தல்களை ஒளித்தெறி கருவியாகப் பாவித்து கூரையில் வைத்தோம். வீடுகளுக்குள் போதியளவு சூரிய ஒளி உள்ளிட்டது. இக் கருவி பிலிப்பைன்ஸ் நாட்டில் பாவித்துள்ளார்கள்.
3) பாடசாலைக்கு அருகேயுள்ள நிலத்திற்கு மண் பறித்து நிரப்பியதில் மூன்றாவது குழு இயங்கியது. பள்ளங்களை நிரப்பி, புல்லுகள் பற்றைகளை நீக்கி கிணற்றிலிருந்து நீர் எடுத்துப் பாவிக்க வைத்துள் ளார்கள். ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி நகரசங்கீர் த்தனம், வேதபாராயணம் முடிந்ததும் வேலையைத் தொடங்கினோம். நிலத்தை மட்டமாக்கி, மண்நிரப்பி வொலிபோல் விளையாட சரியாக்கிக் கொடுத்தோம்.

சேவையின் முடிவில் அளவிலா ஆனந்தம் கிராமம் புதுப்பொலிவு பெற்றது. கிராமநிலதாரி எமது சேவையைப் பாராட்டி இச் சேவை மேலும்பல கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமென வேண்டினார். கிராமப் பிள்ளைகளுடன் சேர்ந்து நாமும் கைப்பந்து விளையாடினோம். எல்லோருக்கும் லட்டு பிரசாதமாக கொடுக்கப்பட்டது. இச் சேவை தொடர்ந்து நீடித்தது. "நாம் எடுக்கும் இம் முயற்சியில் வழிகாட்டியாக இருக்க வேண்டும்" என்றே சுவாமியைத் தொடர்ச்சியாக பிரார்த்தித்தோம்.

அருவ உருவ நிலையைப் பற்றி இனி சிந்திப்போம். அவதாரம் என்றால் என்ன? கடவுளின் ஒவ்வொரு செயலும், கருணையின் நிமிர்த்தமேயாகும். அவர் மனித நிலைக்கு இறங்குவது தான் அவதாரம். அப்போதுதான் மனிதருடன் நடமாடி அவர்களை மேம்படுத்தலாம். மனிதன் உயர்வதற்கே அவர் இறங்குகிறார். ஆகவே அவதாரத்தில் தெய்வீகத் தன்மையுடன் மனிதத் தன்மையும் கலந்திருக்கும். உண்மையிலேயே நாம் தெய்வீகமானவர்களே. ஆனால் மனிதத் தன்மையை அனுபவிக்கின்றோம். ஏன் மனித உருவம்? மனிதன் தானே வழிமாறி தடுமாறுகின்றான். விலங்குகள் தமது தர்மத்தின் வழியிலேயே செல்கின்றன. தெய்வ உருவங்கள் எடுத்தால் என்ன? உதாரணமாக நாம் நாக பாம்பை பூஜிக்கின்றோம். பாம்பாக வந்தால் மனிதர் அடித்துக் கொன்று விடுவார்கள். நாலுகைகள், சங்கு சக்கரத்துடன் வந்தால் நல்ல விசித்திரமான பொருள் என்று சொல்லி, காட்சிச் சாலையில் காட்சிக்கு வைத்து பணமும் வசூலிப்பார்கள். ஆகவே மனிதரை வழிநடத்த மனித உருவமே சாலப் பொருந்தும்.

சுவாமி முதலில் "நான் கடவுள்" என்று சொல்லிப் பின் "நீங்களும் கடவுள்" என்று கூறியுள்ளார். சுவாமி "வேதனை ஒருபோதும் என்னைத் தாக்க மாட்டாது" அதே போல "இன்பமும் துன்பமும் என்னைப் பாதிக்க மாட்டாது" என்று கூறியுள்ளார். அவர் சிறு பிள்ளையாயிருந்த காலத்தில் அவருக்குப் பேய் பிடித்து விட்டது என்று நினைத்துப் பெற்றோர் பேய் கலைப்பவனிடம் கொண்டு சென்றார்கள். அவன் கடுமையான சித்திரவதை செய்தான். தலையிலே வெட்டுப் போட்டு எலுமிச்சம் சாறு பிழிந்து விட்டான். கண்ணுக்கும் உள்ளே விட்டான். ஏன் இவற்றை யெல்லாம் பொறுத்துக் கொண்டீர்கள் எனக் கேட்டதற்கு வேதனை தன்னைத் தீண்டாதென்றும், எவ்வாறு வேதனையையும் தாங்கிப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்பதை காட்டவுமே அப்படி நடந்தேன். அவரின் நோக்கம் எங்களை கீழ் வகுப்புகளிலிருந்து மேல் வகுப்புகளுக்கு உயர்த்து வதேயாகும். ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தார். எம்மை உயர்த்துவதற்காக பணிகளும் தந்து சோதனை களும் தருவார். இறுதியில் அவரை எல்லா உருவங்களிலும் பார்க்கும் நிலையை அடைய வேண்டும். உருவத்தை மின் பல்புக்கு ஒப்பிடலாம். ஓடும் மின்சாரத்தைத் தெய்வீகத்திற்கு ஒப்பிடலாம். பல்ப் எரியாவிட்டால் மின்சாரம் இல்லையென்று சொல்லலாமா? பல்புக்கள் பலவிதமானாலும் ஓடும் மின்சாரம் ஒன்றே தான். உருவத்தின் மூலம் மின்சாரம் ஓடுவதை அறிகிறோம். அவர் எங்கும் வியாபித்து ள்ளார். உலகத்திலுள்ள அனைத்திற்கும் அவரே ஆதாரம். ஆழமாக நோக்கினால் உருவ நிலைக்கும் அருவ நிலைக்குமிடையில் வித்தியாசம் இல்லை.

உதாரணமாக வெள்ளித்தகட்டை எடுத்தால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியைத் தகட்டிலிருந்து பிரிக்கலாமா? முடியாது. வெள்ளிதான் தெய்வமென்றால் தகடு அதனின் உருவம். சிலர் கேட்டார்கள் "சுவாமி நீங்கள் ஒரு அவதாரமென்று உணர்ந்து யோகிகள் பிரசாந்தி நிலையத்திற்கு பெருமளவில் வருவதாக தெரிய வில்லையே" இதற்குச் சுவாமி தான் யோகிகளுடனே நெருக்கமாக அவர்கள் இருக்கும் இடத்திலே இருப்பதால் அவர்கள் இங்கு என்னைத் தேடி வரத் தேவையில்லை. சாதாரண மனிதரை உயர்த்தத்தான் நான் உதித்துள்ளேன். எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு சமநிலையை அனுஷ்டிக்க வேண்டுமென்று சொல்லி செய்து காட்டவே வந்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

உதாரணமாக இராமபிரானுக்கு பட்டாபிசேகம் ஒழுங்காகி விட்டது. நேரமும் நெருங்கி விட்டது. சிலவேளைகளுக்கு முன்னர், இராமர் காட்டுக்குப் போக வேண்டி நேர்ந்தது. காடும் சரி, அரசமாளிகையும் சரி இராமர் ஒரு சலனமுமில்லாது காடு சென்றார். சலனத்திற்கு அடிப்படைக் காரணம் நான் தான் செய்கிறேன் என்ற உணர்வுதான்.

ஒரு நிகழ்வு: நான் விடுதிக்கு பொறுப்பாக இருந்த பொழுது கஸ்தூரிப் பெரியாரிடம், சுவாமியின் கதிரையில் இருந்தால் எப்படியிருக்குமெனக் கேட்டேன்? ஒரு இலையான் கார் ஓட்டும் சக்கரத்தி லிருந்து தான் ஓட்டுவதாக நினைக்கிறது. கார்ச் சக்கரத்தை பிடித்து ஓட்டுபவர் சாரதி. சாரதி ஓட்டுகிறார் நாங்கள் நாம் தான் ஓடுகிறோம் என்று நினைக்கிறோம். சுவாமி சமாதியடைந்து விட்டார் என்று சொல்வது தவறு. சமாதி என்றால் சமநிலை. அவர் சன்னிதி நிலையிலு ள்ளாரென்றே சொல்ல வேண்டும். அவர் எங்களை உள்நோக்கிப் பார்க்குமாறு வழிகாட்டுகின்றார். அவர் எப்போதும் எங்களுடனேயே இருக்கிறார் இதற்கு ஒரு நிகழ்வு:

2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுவாமியின் ஆராதன மஹோற்சவத்தை முன்னிட்டு ஓர் அஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கு பி.சுசீலா அவர்கள் விரும்பினார்கள். (பி.சுசீலா சினிமா பின்னணிப் பாடகி, சுவாமியின் பக்தை) பெயர் பெற்ற பலரை அழைத்து விட்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு பீதி கொண்டார். நிகழ்ச்சி நிரல் ஆயத்தமில்லை. மண்டப ஒழுங்குகள் ஒன்றும் தெரியாது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். சுவாமி கனவில் தோன்றி "என்ன ஒரு ஆயத்தமும் செய்யவில்லையே. நிரலிலும் இல்லை நிகழ்ச்சிகளை முன் மொழிபவருமில்லை. ஒரு கடிதமும் பேனாவும் எடு தான் சொல்வதைக் குறி. 6.00 மணிக்குத் தொடங்கினாலும் சரிவராது 7.00 மணிக்கு தொடங்கி மண்டபமேடையில் 4 கதிரைகளுக்கு பதிலாக 5 கதிரைகள் வை. மாலைகள் போட வேண்டாம். பூ செண்டுகள் கொடுக்கவும். சௌகரர் ஜானகியை முன்மொழிவு செய்யவை. அந்தப் பாடகர் சிதம்பரத்தை கடைசியாகப் போடு" என்றார். சுசீலா அம்மையார் "சுவாமி சௌகரர் ஜானகிக்கு இன்னும் நான் அழைப்பிதழ் கொடுக்கவில்லை. இப்ப கொடுத்தால் என்மேல் கோபிப்பார்" என்று சொல்ல சுவாமி தான் போய் அதை ஒழுங்கு செய்வதாக கூறி மறைந்தார். அடுத்தநாட் காலை சௌகர் ஜானகி தான் வந்து சகல ஒத்துழைப்பும் தருவதாக சுசீலா அம்மையாரிடம் தொலைபேசியில் சொன்னார். சுவாமி எவ்வாறு அருவ நிலையிலும் மிகவும் நுணுக்கமாகச் சகலதையும் அவதானித்து செயற்படுகிறார்.

நாம் புறக்கண்ணால் பார்க்கும் பொழுதை பகவானின் படைப்புத்தான் பார்க்க முடியும். இந்த உலகம் நிலையானதல்ல. ஆகவே உலகுக்கும் ஆதாரமாயுள்ள என்னை வழிபட வேண்டுமென்று கூறியுள்ளார். காரியத்தில் கவனம் செலுத்தும் போது காரணத்தை மறக்க வேண்டும். உலகியல் பற்று வைக்க வேண்டாம். சுவாமி தரும வழிகாட்டலை நாம் பின்பற்றுவதில்லை. உதாரணமாக:

உணவுச் சாலையின் மேலுள்ள பலகையில் "இராணுவ ஹோட்டல்" என்று எழுதப் பட்டிருந்தது. ஒருவர் அவசரமாக உள்ளே போய் சைவ உணவு கேட்டார். அங்கு வேலை செய்பவன் ஐயா மேலே எழுதியிருப்பதைப் பார்க்கவில்லையா? இங்கு அசைவ உணவுதான் கிடைக்கும் என்று சொன்னான்.

உலகம் நிலையற்றது. துன்பம் நிறைந்தது. ஆனாலும் கடவுளால் நிரம்பியுள்ளது. நாம் மனதின் கீழ் செயற்படும் பொழுது துவைத நிலையில்தான் இருப்போம். மேலான நிலையை அடைந்ததும் கடவுளை தான் உணரலாம்.

உருவ வழிபாடா அருவ வழிபாடா மேன்மை யானது? இரண்டும் ஒரே மாதிரியான நிலைதான். ஒன்றைவிட மற்றையது மேலானதல்ல. கிருஸ்ணா உருவமா அர்ஜுனா உருவமா மேன்மையானது. இரண்டும் ஒன்று. அப்பொழுது கிருஸ்ணா தான் இராவணனைக் கொன்றார் என்றால் சரியா அல்லது பொருத்தமாயிக்குமா? இல்லை உருவங்கள் வேறாகினும் தெய்வம் ஒன்றே. பகவான் தனக்கு வரும் வழிபாடு இதயத்திலிருந்து வருகிறதா? என்பதைத் தான் பார்ப்பார். நாங்கள் எது எங்களுக்கு கவர்ச்சியாக இருக்கிறதோ அதில் வழிபாட்டைத் தொடங்கலாம். ஒரு தாய் குசினியில் சமையல் செய்து கொண்டிருந்தாலும் அவளது கவனம் தொட்டில்லில் தூங்கும் குழந்தைமேல் தான் இருக்கும். குழந்தை அழுததும் அதன்கிட்டே ஓடிப்போவாள். தாய் என்னராகம் என்ன தாளம் என்று ஆராய்வதில்லை. அழுகை கேட்டதும் ஓடிப்போவாள். இதேமாதிரி நாமும் அருவ நிலைக்கு முன்னேற வேண்டும். முதலில் நாம் விரும்பிய உருவத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

ஒருதாயார் தனது பிள்ளைகளுடன் கடைப் பக்கம் போய், அங்குமிங்கும் திரிந்து மிகவும் களைப்புடன் வீடு திரும்பினார்கள். தாய் பிள்ளை களிடம் என்ன நிற ஜூஸ் வேண்டு மென்று கேட்டாள். பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிற யூஸ் வேண்டு மென்றார்கள். தாய் அவர்கள் கேட்ட நிறமுள்ள கண்ணாடிக் குவளைகளை வைத்து அதில் ஒரே நீரையே ஊற்றினாள். பிள்ளைகள் மகிவும் திருப்தி யுடன் பருகினார்கள். நாம் எந்த உருவத்திலும் வழிபடலாம். ஆனால் எங்கும் அவரைக் காண வேண்டும்.

நான் முதலாவதாகக் கேட்ட அருளுரையில் பின்வரும் நிகழ்வை உதாரணமாகச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமாணவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொண்டார்கள். இதனால் கோபமும் காட்டிக் கொண்டார்கள். முதலாவது பையன் கல்லூரிக்குப் போகும் போது கோபக்கார மாணவன் வீட்டுக்கு முன்னால் சென்ற போது அங்கே நடுவிலே சுவாமியின் படத்தைக் கண்டான். உடனே பணிந்து கும்பிட்டான். இதை அடுத்த மாணவன் யன்னல் வழியாக கண்டான். உடனே ஓடிவந்து அந்த மாணவனை தழுவி சிநேகிதம் பூண்டான். மாணவன் என்ன கோபம் இருந்தாலும் சுவாமியைக் கண்டதும் தலை குனிந்து வணக்கம் செய்தான். இது நல்ல பலனை உடனே அளித்தது. எல்லா உருவங்களிலும் கடவுளைக் காணவேண்டும் அதை வழிபடவும் வேண்டும். பலன் நன்றாக இருக்கும் அநேகமாக நாங்கள் சுவாமியின் உருவம் அகன்றதும் பழைய நடத்தைக்கு மாறிவிடுவோம்.

ஒருமுறை ஒரு பக்தன் சுவாமியிடம் தானே வாழ்த்துக் கார்ட் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தார். சுவாமி அதில் எழுதியிருந்த வாக்கியத்தை எல்லோருக்கும் வாசித்துக் காட்டினார். அது இது தான்.

"I love you not only for what you are
but for what i am not when i am with you"

"நான் உங்களின் உருவக் காட்சியில் மாத்திரம் அன்பு கொள்ளவில்லை. ஆனால் உங்களுடன் இருக்கும் போது என்னில் இல்லாமல் போனவற்றிற்காகவும் உங்களில் அன்பு கொள்கிறேன்"

இன்னொரு உதாரணம்: ஒரு பாறைக் கல்லிலிருந்து அழகான கிருஸ்ணர் சிலை செதுக்க ப்பட்டு, அது வழிபாட்டிடத்தில் வைத்து வழிபடப் படுகிறது. அதைச் சுற்றியிருந்த கற்கள் எங்கோ ஒருவரும் கவனிக்காமல் கிடக்கின்றன. சிலையும் செதுக்கி உடைக்கப்பட்ட கல்லும் ஒன்றுதான். இதைத் தான் சுவாமியும் அதிலும் நான் இருக்கிறேன். அதுவும் மற்றையதும் ஒன்றுதான் என்று கூறியுள்ளார். வெளி உலகில் செயற்படும் பொழுது (துவைத) இரட்டை நிலையில் செயற்பட வேண்டும். எங்களுக்குத் தந்த பாத்திரத்தை செவ்வனே செய்து முடிக்க வேண்டும். ஆனால் எப்போதும் எங்கும் சுவாமி தான் என்பதை மறக்கக் கூடாது.

பேராசிரியர் பெனார்ஜி என்பவர் என்னுடைய ஆசிரியர் அவருக்கு கிருஸ்ணரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. விளையாட்டுக்காரன் என்றே எண்ணினார். ஒரு நாள் மைதானத்தில் உடற் பயிற்சியிலீடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது கிருஸ்ணர் முன்னே தோன்றினார். பின்பு அந்த உருவத்தையே எங்கும் எதிலும் கண்டார். இக் காட்சியின் பின்பு புட்டபர்த்தி சென்றார். தரிசனத்தின் போது, சுவாமி அவர் முன்னே வந்து அவரின் தலையில் கைவைத்து கிருஸ்ணரைப் பற்றிய அபிப்பிராயம் மாறி விட்டதா என்று கேட்டு விட்டுப் போனார். உலகிலுள்ள பொருட்களிலெல்லாம் அஸ்தி, பர்த்தி, பிரியம், நாமம் ரூபம் ஆகிய ஐந்தும் அடங்கியுள்ளன.

சுவாமி எங்களுக்கு கிராமங்களிலே சேவையிலீடுபடும் பொழுது எல்லோருக்கும் பிடித்தமான "ஓம் சத் சித் ஆனந்தாய நம:" என்ற நாமத்தையே உச்சரிக்கச் சொன்னார். எல்லாம் சத் சித் ஆனந்தம் நாமம் ரூபம் என்பதையே விளக்குகின்றது. இதை விளக்க சுவாமி கூறிய இன்னுமொரு கதை:

வியாபாரி இலாபம் கிடைத்து நன்றாக வாழ்ந்த காலத்தில் ஒவ்வொரு தெய்வீக ரூபத்தையும் தங்கத்தினால் செய்து பூஜை அறையில் வைத்தார். பிற்காலத்தில் வியாபாரம் விழுந்து வறுமையில் வாழ்ந்தார். எல்லாம் விற்றுக் கடைசியாக தன்னிட மிருந்த தங்க விக்கிரகங்களையும் ஒரு தட்டானிடம் விற்றார். தட்டான் ஒவ்வொன்றையும் நிறுத்து விலை பேசினான். அப்போது 500 கிராம் கிருஸ்ணன் விக்கிரகத்திற்கு 50 ரூபாவும் 600 கிராம் உள்ள பசு மாட்டு உருவத்திற்கு 60 ரூபாவும் சொன்னான். அப்போது வியாபாரி என்ன ஆச்சாரியாரே கிருஸ்ணரிலும் பார்க்க மாடு மதிப்புக்கூடியதா? ஆச்சாரியார் சொன்னார்: " நான் உருவத்தை பார்க்க வில்லை, அதிலுள்ள தங்கத்தைத்தான் பார்க்கிறேன். அதன் நிறைக்கு ஏற்ற விலையை தருவேன்" என்றான். எல்லாம் தங்கமே. உருவம் நிலையானதல்ல, அதன் மதிப்பு அதன் ஆதாரமாகிய தங்கத்தில்தான் தங்கியுள்ளது என்பதை விளக்குகிறது.

1978/79 ஆம் ஆண்டு டாக்டர்.ஜோன் ஹிஸ்லப் பிருந்தாவனத்திற்கு வந்திருந்தார். அவர் சுவாமியி னுடைய தீவிர பக்தன் அமெரிக்காவிலுள்ள சத்திய சாயி சேவா நிறுவனத்தின் தலைவர். சுவாமி அவரைக் கூப்பிட்டு

"எப்படி? சேட் பக்கற்றுள் என்ன?" என்று கேட்டார். "அது சுவாமி தந்த மோதிரம் எனாமல் உடைந்து விழுந்து விட்டது ஆகவே பக்கற்றில் வைத்திருக்கிறேன்" என்று ஹிஸ்லப் சொன்னார். சுவாமி தன் உள்ளங்கையில் வைத்து ஊதினார். உடனே ஷீரடி சாயி பாபாவின் உருவம் அதில் பொறிக்கப்பட்டது. விருப்பமா என்று கேட்க? ஆம் என்று ஹிஸ்லப் சொன்னார். அடுத்த நாட் காலை சுவாமி அவரை அணுகி, சுவாமி "என்ன மோதிரம் நல்லாயி ருக்கிறதா?" திரும்பவும் கையில் எடுத்து கிழவன் பாபா வேணுமா? இளைஞன் பாபா வேணுமா? என்று கேட்டார்? எல்லாம் சுவாமியின் விருப்பம் என்று ஹிஸ்லப் பதிலளித்தார். புதிதாக ஒன்று தரப் போகிறேன் என்று சொல்லி மோதிரத்தின் மேல் ஊதினார். பிரேம சாயியின் உருவம் மெல்லியதாகத் தெரிந்தது. முதற் தடவையாக இந்த உருவத்தை தெரியப் படுத்துகிறேன் என்று சுவாமி சொன்னார். மேலும் சுவாமி. "காலம் போகப் போக இந்த உருவம் மாறுதலடையும். முகம் தெளிவாகத் தெரியும்" என்று சொன்னார். 1990 ஆம் ஆண்டு பிருந்தாவனத்தில் சந்தித்த போது என்ன மாற்றம் மோதிரத்தில் ஏற்பட்டு ள்ளதெனக் கேட்டேன். அப்போது மோதிரத்தைக் காட்டினார். தொடர்ந்து மாறி வருவதை அவதானித் தேன். இப்போது முப்பரிமானத்தில் (three dimention) வெளிப்பட்டுள்ளது. மூக்கு வெளியே வந்துள்ளதை அவதானித்தேன். என்ன உருவத்திலும் வழிபடலாம். ஆனால் சிந்தனையில் தொடர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இந்த யுகம் விசேடமானது. மரணத்தின் போது இறை நாமத்தை உச்சரித்தாலோ, சிந்தித்தாலோ பேரானந்தம் கிடைக்கும். விரும்பியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வழிபடலாம்.

பிருந்தாவனத்தில் நான் சேர்ந்து முதல் வாரம்: சுவாமி படிக்கட்டிலால் இறங்கி வந்தார். இதற்கு முதல் நாள் மகா வாக்கியங்களைப் பற்றி உரையாற்றினார். இறங்கி வந்ததும், மாணவன் ஒருவரை பார்த்து "நீ யார்?" என்று கேட்டார். அதற்கு "நான் புதிய மாணவன்" என்று பதிலளித்தான். அதுவல்ல என்று சொல்லி, இரண்டாவது மாணவனைக் கேட்டார். அவன் "சுவாமி நான் உமது பிள்ளை" என்று பதிலளித்தான். இதே கேள்வியை மூன்றாவது மாணவனிடம் கேட்டார். அதற்கு அவன் "நானும் சுவாமியும் ஒன்றே" "ஸோ ஹம்" என்று சொன்னான். சுவாமி சிரித்துக் கொண்டே "நானும் நீயும் ஒன்று என்றால் எனக்குப் பதிலாக நீ தரிசனம் கொடு" என்றார். இக் கூற்று ஓர் நடிப்பு. புத்தியின் விளையாட்டுத் தனம். இது ஆன்மீகமல்ல. ஆன்மீகம் வெறும் சொற்களல்ல அப்பியாசம் அனுபவ மூலமாகத் தெரிய வேண்டும். உண்மையில் அந்த நிலையை நீ அடைந்தாயேயானால் பக்தர்கள் என்னில் என்னைக் காண்பார்கள். என்று சுவாமி கூறினார்.

நான் கொழும்புக்கு வரும் பொழுது, சென்னையில் ஒரு பிரமுகரைச் சந்தித்தேன். அவரும் சுவாமியின் பக்தன் அவர் தனது அனுபவத்தைச் சொன்னார்.

அவர் ஒரு பல்தேசியக் கம்பனியில் வேலை புரிகிறார். ஏரிஎம் இயந்திரங்களைத் தயாரித்து விற்கும் கம்பனி. அவர் இச் சம்பவத்தின் போது குவைத் என்னும் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தார். அந்நாட்டு உள்துறை அமைச்சர் இவரின் பயணப்பத்திரத்தில் தனது சீல் அடித்து இவர் குவைத்தில் எப்பகுதிக்குப் போனாலும் தகுந்த மரியாதை செலுத்துவார்கள் எனக் கூறியிருந்தார். அவர் இவருடன் நெருக்கமாகப் பழகுவார். ஒருநாள் நடுநிசி வரை கம்பனிக் கூட்டம் நடந்தது, தேசிய எல்லைகளில் நிலமை சரியில்லை என்று தகவல்கள் வந்தன. அமைச்சர் அப்படி யொன்றுமில்லை என்று சொன்னார். கூட்டம் முடிந்து ஹோட்டலுக்குப் போனதும் பீரங்கிச் சத்தம் கேட்டது. ஈராக் நாட்டுப் படை குவைத் நாட்டுக்குள் பிரவேசித்து கைப்பற்றிக் கொண்டு வருகின்றது என்பதை தெரிந்து கொண்டோம். அமைச்சரைத் தொடர்பு கொள்ள எத்தனித்தால் அவர் நாட்டையே விட்டு வெளிக் கிளம்பி விட்டதாக அறிவித்தார்கள். எனது நண்பனான அமைச்சருக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. அவருடன் சேர்ந்த எமக்கு என்ன கதியோ என்ற பீதி ஏற்பட்டது. அமைச்சருடைய சீல் பயணச்சீட்டில் இருந்ததால் மிகவும் அபாயமானதாக உள்ளதை உணர்ந்தேன். அவர் தனது மைத்துனரின் மாடி வீட்டிற்குப் போய் எல்லோரும் புறப்பட ஆயத்தம் செய்தோம். ஒரு மேசிடீஸ் பென்ஸ்காரில் மைத்துனரின் குடும்பமும் நானும் புறப்பட்டோம். முதலாவது காவலரனில் இருந்த ஈராக்கிய போர் வீரன் எங்கள் கைகளை உயர்த்தச் சொல்லி எங்களைப் பார்த்து விட்டு செல்லுமாறு பணித்தான். அப்போது இதைப் போல் 15 காவலரன்களைக் கடக்க வேண்டுமென்றும் அப்போது கைகளை உயர்த்தியவாறு வாகனத்தை விட்டு இறங்க வேண்டுமாறும் சொன்னான். இப்படியாக 13 கடவைகளைக் கடந்து 14 ஆவது கடவையை அடைந்தோம் இதுவரை 1400 கி.மீ கடந்து வந்துள்ளோம். 14 வது கடவைக் காவலாளி கடவையைத் திறக்கவில்லை. அவன் எமது காரில் பெற்றோல் இல்லையென்றும், திரும்பி போய் பெற்றோல் நிரப்பி வரச் சொன்னான். எமக்கிருந்த பீதியில் நாம் பெற்றோலைப் பற்றி சிந்திக்கவே யில்லை. காரில் தமிழ்ச்சஞ்சிகை இருந்தது. அதைத் தருமாறு காவலாளி கேட்டான். நாம் கொடுத்து விட்டு பெற்றோல் நிரப்பிவிட்டு திரும்பி வந்ததும் கடவையைத் தூக்கி போகச் சொன்னான். நாம் சுவாமியை நினைத்த படியே முன் சென்றோம். நாம் திரும்பி வந்ததும் காவலாளி எடுத்த சஞ்சிகையை திருப்பி தந்தான். 15 ஆவது கடவையில் காவலாளி ஒருவரும் போகமுடியாது சதாம் குசைனின் அனுமதியில்லாமல்? அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பெரிய அதிகாரியின் அனுமதி இல்லாமல் போகமுடியாது என்று சொன்னான். நாம் எல்லோரும் காருக்குள்ளேயே இருந்தோம். உயர் அதிகாரி நாளை காலை வருவார் அவரைச் சந்தியுங்கள் என்று சொன்னான். அடுத்த நாட் காலை 9.00 மணிக்கு வாகனத் தொடருடன் அதிகாரி வந்தார். நான் எல்லாப் பயணச் சீட்டுகளையும் எடுத்துச் சென்றேன் அவர் என்னுடைய பயணச் சீட்டை மாத்திரம் தருமாறு சொன்னான். நான் கொடுத்ததும் அதை திருப்பித் திருப்பி பார்த்தான். நாங்கள் காயத்ரீ மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருந்தோம். சிலநேரம் கழித்து தன்னுடைய கையெழுத்தை வைத்து, சீல் அடித்து போகலாம் என்றான். ஆனால் காரில் போகமுடியாது, நடந்தே செல்ல வேண்டுமென்று சொன்னான். இன்றும் 200 கி.மீ வனாந்தரத்தில் எப்படி பயணம் செய்யப் போகிறோம் என்று கவலைப் பட்டோம். அந்த உயர் அதிகாரி போக அனுமதி தந்தது மாத்திரமல்ல என்னைக் கட்டி தழுவி அனுப்பினார். நாங்கள் 10 மீட்டர் நடந்திருப்போம். காலியான ஒரு பஸ் ஜோர்டான் போகின்றது. வரும்படி சாரதி சொன்னான். நாம் எல்லோரும் ஏறி ஜோர்டான் நாட்டையடைந்தோம். எவ்வளவு பத்திரமாக சுவாமி எம்மை அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிந்தும் சந்தேகம் எழத்தான் செய்தது. உண்மையிலேயே சுவாமி வந்து உதவினாரா? என்ற சந்தேகம். ஞானத் தெளிவு அடையும் வரை சந்தேகமும் வந்து கொண்டே யிருக்கும். நாம் மங்கலான நேரத்தில் கயிற்றை பாம்பாக காணுவோம். நாம் எப்பொழுதும் JOY என்ற சொல்லிலுள்ள எழுத்து வரிசையை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். J- Jesus அல்லது கடவுள் முதல், O-Others மற்றவர்கள் இரண்டாவது, Y-You நீ மூன்றாவதாக உனது எண்ணம், சொல், செயலில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. எவ்வளவு நாள் அறை பூட்டப்பட்டிருந்தாலும் சுவாமி கதவைத் திறந்தவுடனே ஒளி உட்புகுந்து இருளை அகற்றி விடும். இக் கதையிலுள்ள பிரமுகரின் மகன் எங்களுடன் படித்துக் கொண்டிருந்தார். 2004 ஆம் ஆண்டு தரிசனத்தின் போது மாணவன் "சாயிராம்" என்று சுவாமிக்குச் சொல்ல எங்கே பெற்றோர்கள் என்று கேட்டு அவர்களை நேர்காணலுக்கு அழைத்தார். அப்போது அவர்கள் சுவாமியிடம் "எல்லாம் சுவாமியின் அன்பளிப்பே" என்று சொன்னார்கள். அப்போது அவர்களுக்கு குவைத்தில் நடந்ததைப் பற்றிச் சொன்னார். யார் அந்த முதற் கடவையில் நின்ற போராளி? நான் தான் 14 ஆவது கடவையில் நின்ற போராளியும் நான்தான். நான்தான் சஞ்சிகையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டேன். 15 ஆவது கடவையில், அந்த அதிகாரி ஏன் நெடுநேரம் எனது பயணச்சீட்டை பார்த்தான் என்று கேட்க, "நான் அவனை நல்லதெல்லாம் பார்க்க வைத்தேன்" என்று சுவாமி சொன்னார். கடவுள் முன்னுக்கு நின்றாலும் நீங்கள் காண்பதில்லையே,

சுவாமியின் உருவம் மிகவும் அழகானது. நாங்கள் கிடைக்கும் வாய்ப்பையெல்லாம் அதைக் காணப் பயன்படுத்துவோம். இந்தத் தரிசனத்தால்தான் பிரசாந்தி நிலையத்தில் வசிக்கும் பக்தர்கள் நீண்டகால ஆயுளைப் பெறுகிறார்கள்.

உதாரணமாக,

| | |
|---|---|
| கோபால் ராவோ | - 100 வயது, |
| கொண்டமராஜு | - 106 வயது, |
| எனது தகப்பனார் | - 90 வயது |

சுவாமி தனது தமையனாருக்கு எழுதிய கடிதத்தில் தான் மனித குலமனைத்திற்கும் ஆனந்தம் கொடுக்கவே வந்துள்ளேன் என்று எழுதியுள்ளார். பிரகலாதனுக்கு 5 வயதிலேயும், கஜேந்திரன் என்ற யானைக்கும், சபரி என்ற வயோதிபப் பெண்ணுக்கும் சுவாமி தரிசனம் கொடுத்தார். அவனைத் தீவிரமாக நினைத்தால் அவர் காட்சியளிப்பார். சுவாமி எங்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல எங்களின் விடுதலை யையும் பார்த்துக் கொள்வார்.

சுவாமியின் கரங்களைப் பற்றினால் பிறப்பு, இறப்பு என்ற சாகரத்தைக் கடக்க உதவுவார். இராமரைக் குகன் நதிக்கரையை வெள்ளத்தில் கடக்க உதவிய பின் இராமர் எவ்வளவு பணம் என்று கேட்டார். ஒரேவித தொழிலைச் செய்பவர்கள், ஒருவரிடமிருந்து மற்றவர் பணம் வசூலிக்கக் கூடாது என்று குகன் சொன்னான். என்ன மாதிரி இருவரும் ஒரே தொழில் செய்கிறோம் என்று இராமர் கேட்க "நீங்கள் சம்சார சாகரத்தைக் கடக்க உதவி செய்கிறீர்கள், நானோ இந்த நதியைக் கடக்க உதவி செய்கிறேன்" என்று குகன் பதிலளித்தார். இராமர் குகனை ஆசீர்வதித்தார்.

நாங்கள் அநேக உருவங்களைப் பிடித்தால் வழிதடுமாறி தொலைந்து போவோம். ஒரு கதை:
ஒரு மாணவன் பரீட்சைக்குப் போதியளவு ஆயத்தம் செய்யவில்லை, கடைசி ஒரு கிழமை கணேசப் பெருமானை வணங்கினான். சோதனையில் சித்தியடையவில்லை. கோபங்கொண்டு அதை அலுமாரியில் பூட்டி வைத்து அடுத்த பரீட்சையின் போது முருகனைத் தீவிரமாகக் கும்பிட்டான். அப்பொழுதும் சித்தியடையவில்லை. முருகனையும் அலுமாரிக்குள் தள்ளிவிட்டு காளி அம்மனை வழி பட்டான் அப்போது அவர் வைத்த சாம்பிராணி குச்சியின் புகை அலுமாரிக்குள் போவதைக் கண்டான் கோபங்கொண்டு அலுமாரியைத் திறந்து அங்கிருந்த இரு விக்கிரகங்களின் வாயையும் துணியால் மூடிக்கட்டிய போது காட்சி தந்தீர்களே என்ன விளக்கம்? என்று கேட்டான். முன்னர் எங்களை உயிரில்லாத உருவமாகப் பாத்தாய். அதுதான் உனக்கு தரிசனம் கிடைத்தது என்று விளக்கம் கொடுத்தார்கள். நாம் உருவத்தைக் கடவுளாக பார்க்க வேண்டும். கடவுளை உருவமாகப் பார்க்கக் கூடாது.

*தொடர்ந்து கேள்விகளுக்கு பதிலளித்தார்*

***கேள்வி:***
எமது ஆன்மீகப் பயணத்தில் முன்னே போவதும் பின்னே வருவதுமாக இருக்கிறது எப்போது நாம் திரும்பாது முன்னேறுகின்ற அந்த நிலையை அறிந்து கொள்ளலாம்.

***பதில்:***
மாணவன் விட்டு விட்டுப் படித்தால் பரீட்சைகளில் சித்தியையும் தோல்வியையும் அடைவான். ஆனால் எப்படியோ நீண்ட காலத்திற்குப் பின் சித்தியடைவான். மணிக்கூட்டின் பெண்டுலம் மாதிரி எங்களிடம் கடவுள் நம்பிக்கை இருக்கக்கூடாது. கடவுளின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டால் அவர் கைவிட மாட்டார். எமது நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது.
ஒருமுறை சுவாமியிடம் கேட்டேன்: மாணவன் 99 வீதம் புள்ளி எடுத்தால் மீதி 1 விதம் கொடுத்து 100 வீதமாக்க மாட்டீர்களா? சுவாமி கூறினார் நம்பிக்கையில் 99 வீதம் என்று இல்லை. 100 வீதம் அல்லது 0 தான். ஒரு பெரிய கிடங்கைக் கடப்பதற்கு முழு நீளத்தையும் பாய வேண்டுமா? அல்லது 99 வீதமான நீளத்தையும் பாய்ந்தால் போதுமா? முழு நீளத்தையும் (100 வீதம்) பாய வேண்டும். அல்லாவிடில் குழியில் விழ நேரிடும் என்றார். எங்களுக்கு மனதைக் கொடுத்து, தெரிவு செய்யும் சுதந்திரத்தையும் கொடுத்துள்ளார். நாங்கள் பூரண சரணாகதியடையாது எமது மனதை உபயோகித்து நாமே தெரிவு செய்தால், சுவாமி எட்ட நின்று சாட்சியாகவே நிற்பார்.

எமது பாதையில் திரும்பாமல் இருக்கும் நிலை எப்போதும் ஆனந்தமாக இருக்கும் நிலைதான். எது நிகழ்ந்தாலும் ஆனந்தமாக இருக்கும் நிலைதான் திரும்பல் இல்லாத நிலை. சுவாமி ஆனந்த த்திற்காகவே இதை தந்துள்ளார் என எதையும் ஏற்க வேண்டும்.

உதாரணமாக புற்றுநோய் வந்துவிட்டது. இதை ஒரு அழைப்பாகவும், சோதனையாகவும் ஏற்றுக் கொள்ளலாம். இதனால் சுரங்கப் பாதையின் மறுமுனையில் ஒளியைக் காணலாம். பின்பு சுரங்கத்தின் முதலில் நீயே ஒளியானதென்பதை உணர்வாய். இப்படியான மனப்பாங்குதான் எமது நிலையை நிர்ணயிக்கிறது.

இறகுகளின் பாரமின்மை எம்மை உயர்த்துகிறது
மண்ணின் பாரம் எம்மை பிடித்து இழுக்காமலிருக்கிறது

***கேள்வி:***
ஆன்மீகப் பயணத்தில் பல நிலைகளூடாகவா நாம் செல்ல வேண்டும்?
***பதில்:***
ஒரு விதையை விதைத்தால், அது மரமாகிப் பூத்துக் காயாகி கனியைத் தருகின்றது. எதுவாக இருக்க வேண்டும், எதுவாக இருக்கக் கூடாது என்பதிலும் பார்க்க, எப்படியிருக்க வேண்டும், எப்படியிருக்கக் கூடாது என்பதே முக்கியம். (how to be not how to be) பயணத்தின் வேகம் எங்கள் கையில்தான் இருக்கிறது. இப்பயணத்தில் பல படிகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கேள்வி:***

எது மிகவும் சிறந்த தியானமுறை?

***பதில்:***

எல்லாவிதமான தியானமுறைகளும் சிறந்தவையே. எங்களின் மனப்பாங்கு, எங்களின் ஆன்மீக நிலை, ஆன்மீக தாகம், குருவின் ஆசி ஆகியன தியான முறையைத் தீர்மானிக்கின்றன.

3 படிகள் உள்ளன. மனக்குவிப்பு (Concentration) ஆழ்ந்த கருத்தூன்றல் (Contemmplation) தியானம் (Meditation) ரோஜா செடியிலுள்ள பூவை முட்களுடன் பார்ப்பதுதான் மனக்குவிப்பு, முட்களை விட்டு மலரைத் தனியப் பார்ப்பது கருத்தூன்றல். பூவை கடவுளுக்கு அர்ப்பணிப்பது தியானம்.

சுவாமியிடம் எள்ளளவு தன்னலமுமில்லை. நாமும் அப்படியேயாக வேண்டும். சுவாமி விழுந்து இடுப் பெலும்பு உடைந்து சத்திர சிகிச்சைக்குப் போகும் போதும் தனது பக்தனாகிய டாக்டர்.ஹெக்டேயிக்கு நேர்காணல் கொடுக்க முடியவில்லையே என்று நினைத்து, ஒரு வாரத்திற்குப் பின் தருவதாக அந்த வைத்தியரிடம் சொன்னார். எப்போதும் பக்தர்களைப் பற்றிய எண்ணமே சுவாமிக்கு உண்டு. சிலருக்கு பக்தி மார்க்கம், சிலருக்கு கர்ம மார்க்கம், சிலருக்கு ஞான மார்க்கம் பொருந்தும். கலியுகத்திற்கு பக்தி மார்க்கமே இலகுவானது. சுவாமியை எந்நேரமும் நினைவில் வைத்திருப்பதே சிறந்த சாதனை. மாணவர்களுக்கு தியானம் அவசியம் என்று சுவாமி கூறியுள்ளார்.

***கேள்வி:***

வாக்குவாதத்தை எப்படி எதிர்கொள்வது. நான் மன்னிப்புக் கேட்கப் போகும் போதும், மீண்டும் வாக்குவாதம் எழும்பி விடும்?

***பதில்:***

எல்லோரும் கடவுளின் பிள்ளைகளே என்றும், எல்லோருக்கும் உலகை அவர்களின் மனம் கொண்டு பார்க்க உரிமையுண்டென்பதையும். ஏற்றுக் கொள்ள வேண்டும். இருவரின் கூற்றிலும் உண்மையிருக்கலா மென்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றவருடைய அபிப்பிராயத்தையும் கவனிக்க வேண்டும். பணிவும், ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் என்னை விவாதங்களிலிருந்து தப்ப வைத்துக் கொள்கின்றன.

யாராவது விவாதத்திற்கு வந்தால் கண்ணை மூடிக் கொண்டு "சுவாமி நான் உம்மில் அன்பை செலுத்து கின்றேன்" (Swami I love you) உன்று பிரார்த்தி த்ததும் கோபமோ, முரண்பாடோ அற்றுப் போய் விடுகிறது.

***கேள்வி:***

சரணாகதி பற்றிச் சொல்லவும்.

***பதில்:***

நவவித பக்தியில் கடைசிப் படி ஆத்ம நிவேதனம் அலைகளும், சமுத்திரமும் அவைகள் சமுத்திரத்தில் மறைவதே சரணாகதியாகும். உதாரணமாக என்னை சுவாமி எவ்வாறு கணக்கில் சித்தி எய்த வைத்தார். 35 எடுக்க வேண்டிய இடத்தில் 53 ஆக மாற்றினார். நாம் பயணம் செய்யும் போது, நாம் காவிக் கொண்டு போகும் சுமையை புகை வண்டியில் ஏறியதும் நிலத்தில் வைப்பது போல சரணாகதி அடைந்ததும் எம்மையும் எமது சுமையையும் பகவான் காவிக் கொண்டு செல்வார்.

ஜெய் சாயிராம்



## தெய்வம்

சத்திய சாயி பாபாவின் பெருமை
சாற்றுதற் கெளிதில்லை அவரோர்
சித்தியில் மிக்க தெய்வ மா மனிதர்
சிந்தையைக் கவர்ந்திடும் சீலர்
உத்தமர் உலகபாச பந்தங்களை
உதறிய அறநெறிச் செல்வர்
வித்தகர் அவரை நினைப்பதும் துதிப்பதும்
இறைவர்க்கு மிக உவப்பாகும்

இறைவனின் தூதர் என்று நாம் அவரை
ஏற்றிடின் பெரும் பயன் அடைவோம்
மறைகளை வடித்து அருள் மொழியாக
மனுக்குழு உய்வுக்கு மருந்தாய்
அறநெறி புகட்டும் சத்திய சாயி
பாபாவின் அடிவழி நின்றால்
இறைவனை அடைந்து அவள் ஒளி உருவில்
இரண்டறக் கலப்பது திண்ணம்

சித்திரா நதியின் பெருங் கரையதனில்
சேர்ந்திடும் வெண் மணல் பரப்பில்
சத்திய சீலர் அமர்ந்திருந் தங்கே
சகலரும் கண்டுளம் வியக்க
புத்தம் புதிய பொருள்களை அருளால்
புதை மணல் தோண்டி அங்கெடுத்து
வித்தைகள் போல அடியார்கள் வியக்க
விந்தைகள் புரிந்திடும் மேலோர்

பாபாவின் பெருமை பலவிதம் அதிலே
தேவனின் சாயலே அதிகம்
பூபாரம் தீர்க்கத் தோன்றிய மாதவன்
புரிந்த தெய்வீகம் போல் மனுவை
காப்பாற்ற நினைத்து கைகளை அசைத்து
கருணையால் திருநீறு அருள்வார்
மாபாரதத்தை நடத்திய கண்ணன்
மரபினில் வந்ததோர் தெய்வம்

அமரர்.க.வேலாயுதம்
தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# கருணா மூர்த்தி சாயிநாதன்

அம்பாறை மாவட்டத்திலே சாமாந்துறைப் பிரதேசத்தில் வீரமுனை எனும் கிராமமே எங்கள் ஊராகும். இங்கு 1993 ஆம் ஆண்டு திருக்கோயில், தம்பிலுவில், காரைதீவு போன்ற பிரதேசத்தில் உள்ள சாயி பக்தர்களினால் எங்கள் கிராமத்தில் பஜனை மண்டலி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. 1993 ஆம் ஆண்டு அதில் நானும் இணைந்து கொண்டேன். எனக்கு க.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் போது தலையிடி ஏற்பட்டது. பல வைத்தியங்கள் செய்தும் எதுவும் சரிவரவில்லை. படிக்க முடியாமல் படிப்பையும் கைவிட்டுவிடடேன். தொடர்ச்சியான தலையிடி என்பதால் எனக்கு நித்திரையும் வருவதில்லை. ஒரு நாளை கழிப்பதே பெரும் பிரச்சினையாக நாட்களைக் கடத்திக் கொண்டு வந்தேன்.

அந்த நேரத்தில் எங்கள் பஜனை மண்டலிக்கு எங்கள் கிராமத்தைச் சேர்ந்த பூவனம் என்னும் ஒரு அம்மா தனது வளவு எல்லாவற்றையும் சுவாமியின் பெயருக்கு எழுதித் தந்திருந்தார்கள். அந்த நேரத்தில் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் தற்போது புட்டபர்த்தியிலே வசிப்பவருமாகிய ஸ்ரீமதி.சுலோஜனா அம்மையார் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதுவதற்காக வந்தார்கள். அவர்களின் முயற்சியினாலும், உதவியினாலும் மண்டபம் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரங்களில் நான் பஜனைகளில் ஒழுங்காக பங்கு பற்றுவதில்லை ஏனென்றால் என்னால் தொடர்ச்சியாக ஒரு மணித்தியாலம் இருப்பதே பெரும் கஸ்டமாக இருந்தது. ஆனால் சேவைப் பணிகளில் மும்முரமாக செயற்பட்டேன். அப்போது ஒரு நாள் 1993 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் வெள்ளிக்கிழமை நான் நித்திரையாக இருக்கும் போது சுவாமி நேராகவே என்னிடம் வந்து "நீ ஏன் பஜனைக்கு வரவில்லை என்று கேட்டார்" என் அருகில் சுவாமி நிற்கின்றார், ஆனால் என்னால் எதுவுமே பேசவோ, எழுந்து நின்று பார்க்கவோ முடியவில்லை. (கை, கால், உடல் எதுவுமே இயங்கவில்லை ) சிறிது நேரத்திற்குப் பிற்பாடு தான் என்னால் எழும்புவதற்கு முடிந்தது. எழுந்தவுடன் நான் சுவாமியிடம் நான் இனிமேல் எக்காரணம் கொண்டும் பஜனைக்கு வராமல் விடமாட்டேன் என்று வாக்குறுதியளித்து விட்டு தியானத்தில் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் பார்த்தால் நான் இருந்த அந்த அறை முற்றாக சுவாமியே எனக்குத் தென் பட்டார். எனக்கு இரண்டு வாரங்களுக்கு உடலில் ஒரு நடுக்கமும் கதைக்க முடியாமலும் இருந்தது.

நீண்ட நாட்களாக புட்டபர்த்திக்குச் செல்ல வேண்டும் என எனக்கு ஒரு ஆசையிருந்தது. ஆனால் எனது பொருளாதாரக் கஸ்டத்தின் காரணமாக என்னால் அங்கே செல்வதற்கு முடியாமல் போய் விட்டது. 2006 ஆம் ஆண்டுதான் முதல் தடவையாக புட்டபர்த்திக்குச் செல்வதற்கு நானும் புவனம் அன்றியும் ஊரிலிருந்து கொழும்பிற்குச் சென்றோம். அவவுக்கு விசா கிடைத்து விட்டது அவ புட்டபர்த்திக்குச் சென்று விட்டா. எனக்கு இரண்டு வாரங்கள் கழித்தே விசா கிடைத்தது புட்டபர்த்திக்கு எவ்வாறு செல்வது என்று எதுவுமே தெரியாதாகையால் சென்னையில் உள்ள ஒரு நண்பருடன் தொடர்பு கொண்டேன், அவர் என்னை சென்னைக்கு வருமாறும் தான் புட்டபர்த்திக்கு செல்லும் பஸ் வண்டியில் ஏற்றி விடுவதாகவும் கூறினார். நான் புறப்பட்டு கொழும்பு விமான நிலையத்தில் இருக்கும் போது ஒரு இந்திய சகோதரர் என்னிடம் எங்கே செல்லப் போகின்றீர்கள் எனக் கேட்க, நானும் புட்டபர்த்தி என்று சொல்ல, அவர் தானும் ஒரு சாயி பக்தர் என்று கூறி என்னிடம் கதைத்து எனக்கு எவ்வாறு புட்டபர்த்திக்குச் செல்ல வேண்டும் என்ற விபரத்தையும் எழுதித் தந்தார். நான் சென்னை சென்று அந்த நண்பரைத் தொடர்பு கொண்ட போது அவர் அங்கே வரவில்லை. அப்போது தான் எனக்கு சுவாமியின் கருணைக் கரம் நினைவுக்கு வந்தது. (அதாவது இவன் வரமாட்டான் எனத் தெரிந்து ஏற்கனவே எனக்கு செல்லும் வழி சொல்லப்பட்டது) அதன் பிரகாரம் நான் கோயம்புத்தூர் சென்று புட்டபர்த்தி பஸ் எடுத்து புட்டபர்த்திக்குச் சென்று இரண்டு மாதங்கள் தங்கி வந்தேன்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டிற்குச் சென்று 70 நாட்கள் பிரசாந்தி நிலையத்திலே தங்கியிருந்தேன். 2007.11.05 பி.ப 4.00 மணிக்கு நான் திரும்புவதற்கு டிக்கட் புக்கிங் செய்திருந்தேன். 2007.11.04 ஆம் திகதி 7.00 மணி பஸ்ஸில் சென்னை வருவதற்கு பஸ் புக்கிங் செய்திருந்தேன். 2007.11.04 அன்று பி.ப தரிசனத்திற்கு சென்ற போது தரிசனம் முடிவடைந்தவுடன் பேராசிரியர் அனில்குமார் அவர்கள் ஓர் அறிவித்தல் செய்கின்றார்: இன்று 7.00 மணிக்கு விமான நிலையத்தில் சுவாமியின் விஸ்வரூப தரிசனம் நடைபெறும் என்று. எனக்கோ பெரும் கவலை நீண்டநாட்கள் நின்றிருந்தேன் இவ்வளவு நாட்களும் செய்யாத செயலை சுவாமி இப்போ செய்யப் போகின்றார். தனக்கோ 7.00 மணிக்கு பஸ் என்ன செய்வதென்றே தெரியாது. என்னிடம் பணம் இல்லை. எல்லாம் முடிந்து விட்டது. கவலையுடன் பஸ்ஸிற்காக பஸ்நிலையத்திற்கு வந்தேன். அங்கே வைத்துத் தான் எனது பாஸ்போர்ட்டை பார்த்தேன் அதை எடுக்க மறந்துவிட்டேன் அது சுலோசனா அம்மாவின் வீட்டில் உள்ளது. அவர் தரிசனத்திற்குச் சென்று விட்டார் ஆகையால் நான் பஸ்ஸில் ஏறமுடியாது ஆகவே தரிசனத்திற்குச் செல்வதற்கு சென்றேன். அங்கே சுவாமியை 2 மணித்தியாலங்களுக்கு மேலாக மிக அருகில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. தரிசனம் முடிந்து வர இரவு 9.00 மணியாகிவிட்டது. எனக்கோ எந்தவிதமான பயமோ, எவ்வாறு போய்ச் சேர்வோமென்ற எண்ணமோ வரவில்லை. சுவாமியின் சிந்தனையே இருந்தது. ஏதோ செய்வார் என்ற நம்பிக்கையும் இருந்தது. அப்போது தமிழ் தமிழ் நாட்டைச் சேர்ந்த நண்பர் பெங்களூருக்கு போவதற் கான வழியையக் கூறினார்.

( தொடர்ச்சி 21 ஆம் பக்கம் பார்க்க..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# குழுவேலையில் சுவாமியின் போதனைகள்

1. நீங்கள் எந்த வேலையில் ஈடுபட்டாலும், அனைத்தும் சுவாமியின் வேலையே என்று திடமாக நம்புங்கள். அதன் பின்னர்.
- நிர்மலமான இதயத்துடன் இருங்கள்
- சுயநலமற்று இருங்கள், இவ்வாறு செயற்பட்டால் வெற்றி நிச்சயம், துன்பம் உங்களை அணுகாது.

தெய்வப் பிரேமை அதிகரிக்க, அதிகரிக்க சுயநலம் குறைந்து, நான், எனது என்ற அகங்கார, மமகாரமும் குறையும். எனவே குழுவாகப் பணியில் ஈடுபடும் போது, சுயநலத்தைக் கொன்று விடுங்கள். பொது நலனையே இலட்சியமாகக் கொள்ளுங்கள்.

2. தெய்வப் பரீதி, பாபப் பிரீதி, சமூக நீதி என்ற மூன்று கொள்கைகளையும் இலட்சியமாகக் கொள்ளுங்கள்.

3. செய்வது அனைத்தும் சுவாமிக்கு உரித்தானது என்று அர்ப்பணிப்புடன் செயற்படும் போது "கருமம், வழிபாடாக உயர் மாற்றம் அடையும்". இதுவே உயர்ந்த தவ ஒழுக்கம் ஆகின்றது. சுவாமியை அடைவதற்கு இதுவே போதுமானது.

4. குழுவாக சேவைப்பணிகளில் ஈடுபடும் போது - சாதி, மத, குல, நாடு, நிறம், மொழி ஆகிய வேறுபாடு களுக்கு மனதில் இடங் கொடுக்கலாகாது. சுவாமி கூறும் உயர்ந்த தெய்வீக அறிவுரையை சிரமேற் கொண்டு பணியாற்ற வேண்டும். அதாவது:

"ஒரே ஒரு மதம் அது அன்பு மதம்
ஒரே ஒரு குலம் அது மனித குலம்
ஒரே ஒரு மொழி அது இதய மொழி
ஒரே ஒரு இறைவன், அவர் எங்கும் நிறைந்தவர்"

அனைவரும் இறைவனின் குழந்தைகளே என்ற ஒருமையுணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள். "Brother hood of man and father hood of god" அதாவது மனிதர் அனைவரும் சகோதரரே, இறைவனே அனைவருக்கும் தந்தை, இவ்வாறான பரந்த மனப்பாங்குடன் குழுவாகச் செயற்படுத்தும் போது தூய்மையான இருதயத்துடன் ஒற்றுமையாக முழுமனதோடு சிறந்த பங்களிப்பைச் செய்ய முடியும்.

- சகோதர பாவத்தினும் உயர்ந்தது ஏகாத்மபாவம். அதாவது அனைவருள்ளேயும் உள்ளது ஒரே ஆத்மா என்ற நம்பிக்கை. ஏகாத்மபாவம் அவ்வளவு எளிதல்ல. இருந்தாலும் அதற்கான முயற்சிகளைக் கைவிடாதீர்கள். இளைஞர்கள், மாணவர்கள் விரும்பினால் எதையும் சாதிக்க முடியும். அதற்கு உறுதியான சங்கற்பம் வேண்டும். "நான் முயற்சி செய்கின்றேன்" எனக் கூறலாகாது. உடனே செயற்பட வேண்டும். "Try, Try, Try" (முயற்சி) என்றால் அது Dry (வரட்சி) ஆகிவிடும். "I Can do, I Must do" என்னால் முடியும். நான் செய்ய வேண்டும் என்று கூறிக் கொள்ள வேண்டும். (பிருந்தாவனத்தில் பாபா சொன்ன பகவதம்) இவ்வாறு தொடர்ந்து முயற்சி செய்து, "ஏகாத்ம பாவனை"யை வளர்க்கும் போது அனைத்து நற்பண்புகளான சகிப்புத்தன்மை, தூய அன்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, இரக்கம், ஒற்றுமை ஆகிய அனைத்துக் குணங்களும் தானாக விருத்தியடையும் இவையே குழுச் செயற்பாடுகளின் போது அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை.

5. பகவான் எப்போதும் பின்வருவனவற்றை அவதானிக் கும்படி கூறுகின்றார். குழுவாகச் செயற்படும் போது இது மிகவும் அவசியமாகின்றது.

WATCH YOUR
- WORD
- ACTIONS
- THOUGHTS
- CHARACTER
- HEART

அதாவது,
- உங்கள் வார்த்தையை அவதானியுங்கள்
- உங்கள் செயலை அவதானியுங்கள்
- உங்கள் சிந்தனையை அவதானியுங்கள்.
- உங்கள் நடத்தையை அவதானியுங்கள்
- உங்கள் இருதயத்தை அவதானியுங்கள்

இதன் மூலம் எதிர்மறையான உணர்வுகள், சிந்தனைகள் , செயற்பாடுகளைத் தவிர்த்து மனத்தை சாந்தியுடன் வைத்திருக்க முடியும்.

(இதற்கு உதாரணமாக சுவாமியின் மாணவர் ஒருவருக்கு நடந்த உண்மைச் சம்பவம் பின்வருமாறு:)

இந்தக் குறிப்பிட்ட மாணவர் பகவானின் கல்லூரியில் கல்வி கற்றவர். இவர் பெற்றோர்கள் வெளிநாட்டில் வசித்து வந்தனர். இம்மாணவர் விடுமுறைக்காக பெற்றோர்களிடம் செல்ல அனுமதி கேட்ட போது, சுவாமி: மாணவருக்கு கைக்கடிகாரம் ஒன்றை கையசைத்து கொடுத்ததுடன் தவறிழைக்காதே, என எச்சரித்தார்.

அம் மாணவர் தனது நாட்டை அடைவதற்கு இரண்டு விமானங்கள் எடுக்க வேண்டியிருந்தது. எனவே அவர் இந்தியாவிலிருந்து ஒரு விமானம் மூலம் சென்று, அடுத்த விமானம் எடுப்பதற்காக வேறு ஒரு விமான நிலையத்தில் சில மணித்தியாலங்கள் தங்க வேண்டியிருந்தது. அந்த இடைவெளியில் மாணவர் விமான நிலையத்தை சுற்றிப் பார்வையிட்டார். அங்கு சுவர்களில் கீழ்த்தரமான சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருந்தன. அதைப் பார்வையிட்ட மாணவனின் மனத்தில் தீய சிந்தனைகள் தோன்றின.

உடனே அம் மாணவன், சுவாமி தனது நடத்தை பற்றி எச்சரித்தது பற்றி ஞாபகம் வர, அவ்விடத்தை விட்டு அகன்று முகம் கழுவுவதற்காக உள்ள தங்கு மிடத்திற்குச் சென்று சுவாமி கொடுத்த கடிகாரத்தை கழற்றி அருகில் வைத்தார். பின்னர் கடிகாரத்தை பார்த்த போது கடிகாரம் மறைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மிகுந்த வேதனையுடன் அடுத்த விமானத்தில் ஏறி வீடு சென்றார். அன்று மாணவரின் கனவில் தோன்றிய சுவாமி "விமான நிலையத்தில் என்ன செய்தாய் என எனக்குத் தெரியும், நான் உன்னுடனேயே இருந்தேன். கடிகாரம் என்னிடம் திரும்பி வந்து விட்டது. எனக் கூறினார்.

இச்சம்பவத்திலிருந்து விளங்குவது என்ன வெனில், சுவாமி இல்லாத இடமேயில்லை. எக் காரியம் செய்யும் போதும், "இவ்வாறான செயல் பகவானைத் திருப்திப் படுத்துமா?" என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். சுவாமியின் சர்வ வியாபகத்தையும், சர்வ வல்லமையையும், எல்லாம் அறிந்த தன்மையையும் ஞாபகத்தில் வைத்துச் செயற்படுவது இளைஞர்களிற்கு மட்டுமின்றி எல்லோருக்கும் நன்மையளிக்கும்.

- இதையே சுவாமி வேறு சந்தர்ப்பங்களில்
Be Good , Do Good, See Good
This is th e way to god எனக் கூறியுள்ளார்.

இதை சுவாமி மேலும் விளக்கும் போது, Reaction (பிரதி செயல்), Resound (எதிரொலி), Reflection (பிரதிபலிப்பு) என விளக்குகின்றார். அதாவது, பிறரைப் பற்றி நாம் குறை கூறினால், நாமும் அவர்களால் குறை கூறப்படுவோம். இதிலிருந்து தப்பிக்க முடியாது. ஒவ்வொன்றும் எதிர்ச் செயலாக உனக்குக் கிடைக்கின்றது. (பிருந்தாவனத்தில் கோடை அருள் மழை - 2002)

எனவே இளைஞர்கள் இப்போதிருந்தே சுவாமி கூறும் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்து நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் பூண்டு கொள்வதன் மூலம், தாங்களும் வளமடைவதுடன், தங்கள் குழுவுக்கும் நன்மை தேடிக் கொடுக்க முடியும்.

இதையே சுவாமி தன்னைப் பின்பற்றுங்கள்
"Follow the ,master
Face the Devil
Fight to the End
Finish the game" எனக் கூறியுள்ளார்

அதாவது, சுவாமி பூரணமான பிரேமையே உருவானவர், அதனால் தான் தன்னைப் பின்பற்றி பிரேமையை வளர்க்கும்படி கேட்கின்றார். அதையே சுவாமி "Love is god, Live in Love" எனக் கூறியுள்ளார்.

அதாவது, சுவாமி பூரணமான பிரேமையே உருவானவர், அதனால் தான் தன்னைப் பின்பற்றி பிரேமையை வளர்க்கும்படி கேட்கின்றார்"

பகவான் அடிக்கடி கூறுவதுண்டு:
Start the day with love
அன்புடன் நாளைத் தொடங்கு
Fill the day with love
அன்பினால் நாளை நிரப்பு
Spend the day with love
அன்புடன் நாளைச் செலவழி
End the day with love
அன்புடன் நாளை முடித்துக் கொள்
This is the way to God
இதுவே இறைவனுக்கான வழி

## For team work, this behavior is very important.

From Leadership Book:

**1. சுயகட்டுப்பாடு (Self Control)**
ஒரு குழுவாகத் தொழிற்படும் போது, எப்போதும் குழுத்தலைவர் சுயகட்டுப்பாடும், நல்லொழுக்கமும் உடையவராயிருத்தல் அவசியம். அப்போது தான் குழுவில் உள்ள மற்ற அங்கத்தவர்கட்கு முன் மாதிரியாக இருந்து அவர்களையும் சுயகட்டுப்பாடுடனும், நல்லொழுக்கத்துடனும் செயற்படுவதற்கு ஊக்குவிக்க முடியும்.

**2. வெற்றி, தோல்வியைக் கையாளும் முறை:**
ஒரு நல்ல தலைவர் எப்போதும் நிறுவனத்தில் ஏற்பட்ட அனைத்து உயர் மாற்றங்களுக்கும் குழுவில் உள்ள அனைத்து அங்கத்தவர்களின் பங்களிப்பே காரணம் எனக் கூறுவார். நிறுவனத்தின் பின்னடைவிற்கு தானே காரணம் என பொறுப்பெடுத்துக் கொள்வார்.

**3. இலட்சியமுடையவர்களாவிருத்தல்:**
தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் தங்களது பங்களிப்பு எவ்வளவுக்கு இருக்கவேண்டுமென்ற இலக்கு உடையவர்களாக ஒவ்வொரு குழு அங்கத்தவரும் இருக்க வேண்டும். எப்போதும் திட்டமிட்ட இலக்கையோ அல்லது அதற்கும் மேலாக நிறைவேற்றுவதற்கு திடசங்கற்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**4. பிழைகளைத் திருத்துதல்:**
குழுத்தலைவர் பிழைகளை சுட்டிக் காட்ட வேண்டிய சமயங்களில் நேரடியாக முற்றிலும் குற்றங் கண்டு பிடித்து புறக்கணிக்காது, ஒருவரிடமிருக்கும் திறமையை அல்லது நல்ல பண்பை முதலில் கூறி பின்னரே விட்ட பிழையை சுட்டிக் காட்ட வேண்டும்.

**5. எப்போதும் நாங்கள் என்ற பதத்தை பாவிக்க வேண்டும்:**
குழுவில் உள்ளவர்கள், தலைவர் உட்பட அனைவரும் தங்களை குழுவின் ஒரு பகுதியாகக் கருதி நாங்கள் என்றே கதைத்துக் கொள்ள வேண்டும்.

**6. இலகுவில் அணுகக் கூடியவர்களாயிருத்தல்:**
தலைவர் குழுவில் உள்ள ஏனைய அங்கத்தவர்களின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட நேரத்தையும், இடத்தையும் ஒதுக்குதல் வேண்டும். நோய் வாய்ப்படுதல், மற்றும் ஏனைய கஸ்டமான சூழ்நிலைகளில் குழு அங்கத்தவர்கள் இருக்கும் போது அவர்களை நேரடியாகப் பார்வையிட நேரம் ஒதுக்குதல் மிகவும் வரவேற்கத்தக்கது.

**7. மற்றவர்களை மதித்து நடாத்துதல்:**
குழு அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வும், ஒருவரையொருவர் விளங்கிக் கொண்டு மதித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் மனப்பான்மையும் இருக்கும் போது மட்டுமே வினைத்திறனுடன் செயலாற்ற முடியும்.

முக்கியமாக குழுத்தலைவர், ஏனைய அங்கத்தவர்களை பொதுவிடங்களில் மற்றவர்களின் முன்னிலையில் போற்றிப் பேசும் பண்புள்ளவராகவும், அதே நேரத்தில் தவறுகளை தனியாக கண்டிப்பவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறு நடந்து கொள்வதற்கு சுயநலமற்ற அன்பும், இரக்கமும், சகோதர மனப்பாங்கும் அவசியம்.

- எப்போதும் புன்சிரிப்புடன் மற்றவர்களை அன்புடன் பெயர்கூறி அக்கறையுடன் அழைத்து, நலம் விசாரித்து சுயநலமற்ற அன்பை விரிவுபடுத்த வேண்டும். உதாரணத்திற்கு "முரளி" எப்படியிருக்கின்றீர்கள்? எப்படி தாயார் சுகமாக இருக்கின்றாரா? என இவ்வாறு பழகும் போது, முரளி மனப்பூர்வமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் சூழல் உருவாகின்றது.

- மற்றவர்கள் கூறும் கருத்தை அவதானமாக, பொறுமையுடன் கேட்டு பிரச்சினைகளை ஆராய்ந்து நிதானமாக முடிவெடுத்தல்

- நன்கு வினைத்திறனுடன் செயற்படுவதை கண்ணுற்ற போது உடனடியாகவே அதை எடுத்துக்கூறி வரவேற்க வேண்டும்.

- ஒவ்வொரு குழு அங்கத்தவரதும் தொழில் சம்பந்தமான, மற்றும் ஏனைய அபிவிருத்தி சம்பந்தமாக தனிப்பட்ட அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

- எப்போதும் ஒருவருக்கொருவர் உதவி செய்து, ஒத்துழைத்து எடுத்த பணியை திறம்பட முடிப்பதிலே குறிக்கோளாக இருக்க வேண்டும். உங்களுக்கு மற்ற குழு அங்கத்தவர் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் மற்றவர் கட்குச் செய்ய வேண்டும். மற்றவர்களை மனம் நோகச் செய்து, சுயலாபம் தேடும் நோக்கத்தில் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஜெய் சாயிராம்

---

## *18 ஆம் பக்கத் தொடர்ச்சி ............*

அதாவது இங்கிருந்து 9.30 இற்கு ஒரு பஸ் இருக்கிறது அதிலேறி கொச்சேரிக்குச் செல்லுங்கள் அங்கிருந்து 5 இடங்களுக்குச் சென்று பங்களூருக்கு போகலாம். அங்கிருந்து சென்னைக்குப் போகலாம் என்று கூறி அந்த ஊர்களின் பெயர்களையும் எழுதித் தந்தார். அதன்படி நான் அந்த பஸ்ஸில் ஏறினேன். பஸ்ஸில் ஏறிய நான் கொச்சேட்டில் இறங்கவில்லை. அவ்வாறே இருந்து விட்டேன். கொச்சேரியைத் தாண்டிய காட்டுப் பகுதியில் பஸ் நடத்துனர் என்னிடம் வந்து கொச்சேரியில் இறங்க வில்லையா எனக் கேட்டு அடுத்த ஊரில் இறங்குமாறு என்னைக் கூறினார். நானும் ஆம் என்று கூறி இருந்துவிட்டேன். (எங்களிடம் ஒழுங்கான தொடர் பாடலும் இல்லை தெலுங்கு, தமிழ்) அப்போது அந்த காட்டுப் பகுதியில் இருந்து இரண்டு பேர் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்கள் என்னிடம் வந்து என்ன பிரச்சினை எனக் கேட்டார்கள், நான் எனது போகும் பாதையைக் காட்டினேன் அதற்கு அவர்கள் அவ்வாறு செல்ல வேண்டாம் அது பிழையான பாதை எனக்கூறி என்னை இவ்வாறு செல்லுமாறு அவர்கள் வேறு வழியை எழுதித் தந்து என்னை அதே பஸ்ஸில் இன்னுமொரு ஊருக்கு டிக்கட் எடுக்குமாறு கூறி டிக்கட் எடுக்கச் செய்து நான் எங்கே இறங்க வேண்டும் என்பதையும் நான் எந்தப் பக்கம் செல்ல வேண்டும் என்பதையும் நடத்துனரிடம் கூறி அவரை எனக்கு வழி காட்டுமாறும் கூறி விட்டு அவர்கள் அந்த காட்டு வழியிலேயே இறங்கி விட்டார்கள். (அந்த இருவரும் சுவாமியேயன்றி வேறு யாருமல்ல, ஏனெனில் அவர்கள் ஏறிய, இறங்கிய இடம் ஆள் நடமாட்டம் அற்ற காட்டுப் பகுதி மற்றது இருவரும் தமிழர்கள்) நான் பயணம் செய்து 3.00 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்தேன். என்னை நோக்கி வருபவர்களை பாதுகாப்பாக அவர்கள் வீட்டுக்கு கொண்டு சேர்ப்பது எனது கடமை என்பதை எனக்கு சுவாமி நிஜமாக்கினார்.

எனக்கு சிறுநீரகக் கல் இருந்தது. 2008 இல் புட்டபர்த்தியில் இருக்கும் பொழுது ஒரு கனவு. கனவில் சுவாமியிடம் செல்கிறேன். சுவாமி என்னை அழைத்துக் கொண்டு வெளியே செல்கின்றார். இருவரும் நடந்து செல்கின்றோம், அப்போது எனது காலில் கடும் வலி ஏற்படுகின்றது. நடக்கமுடியாமல் இருக்கின்றது. சுவாமி கையிலே ஒரு தணல் இடுக்கி வைத்திருக்கின்றார். அதனால் எனது வயிற்றில் குத்தி திருகி அதை வெளியே எடுக்கின்றார். அங்கே ஒரு கல் வருகின்றது. அதை என்னிடம் காட்டுகின்றார். இதுதான் உள்ளே இருந்தது என்று கூறி விட்டு அதை எடுத்து வெளியே எறிந்து விடுகின்றார்.

எங்கும் நிறைந்த பரப்பிரம்மம் மனித உருவெடுத்து வந்து எம்மையெல்லாம் ஆட் கொண்டு நல்வழிகாட்டி நோய் தீர்த்து ஆனந்தப் படுத்தி தரிசனமும் தந்த அந்த பரப்பிரம்மத்திற்கு நம்மால் என்ன கைமாறு செய்ய முடியும்.

ஜெய் சாயிராம்

ம.கிருபராசா
சத்திய சாயி நிலையம்
வீரமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பாலவிகாஸ் கல்வி கற்றதன் அனுபவம்

(முன்னாள் பாலவிகாஸ் மாணவர் கூறுகிறார்)

பாலவிகாஸ் சிறுவர்களை மலரச் செய்தல் எனப்பொருள் மொட்டுகளாலேயே அழகான பூவாக மலரமுடியும். சிறு வயதில் கற்பிக்கப்படுவன எமது ஆழ் அடிமனதில் ஆழமாக பதிந்து எமது வளரும் பருவத்தில் வெளிப்படுத்தப்படும் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை.

எமக்கு பாலவிகாஸ் கல்வியில் சுவாமியால் அறிமுகப் படுத்தப்பட்ட மனிதமேம்பாட்டு ஆன்மீகக் கல்வியுடன் மனித உயர்குண நலன்களும் போதிக்கப் பட்டன. போதிக்கப்படுகின்றன,

தேசத்தின் வளர்ச்சியானது ஒவ்வொரு தனிமனிதனினதும் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அன்புடனான பெற்ற கல்வி நல்ல அன்பு கலந்த செயலாக மாற்றமடைந்து மேற்கூறியதான அன்புடனான தேசம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. இதனை நோக்காகக் கொண்டே எமக்கு கற்பிக்க பாலவிகாஸ் கல்வி ஆழ்ந்த அடிப்படை ஆன்மீக, தேச, உலகியல் நுணுக்கமான கோட்பாடுகளைக் கொண்டு கற்பிக்கப்பட்டது, கற்பிக்கப்படுகின்றது.

இந்த வகையில் நான் உணர்ந்த சில விடயங்கள்....

சுவாமியால் அறிமுகப்படுத்தப்பட்ட தனது பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்ட ஒன்பது மனித மேம்பாட்டு ஒழுக்கக் கோவைகளில் (தினசரி தியான ஜெபம், குடும்ப பஜனை, பாலவிகாஸ் கல்வி, சமூக சேவை, நகரசங்கீர்த்தனம், சாயி இலக்கியம் கற்றல், மெதுவாக அன்பாக பேசுதல், புறங்கூறாதிருத்தல், ஆசைக்கு வரம்பு வைத்தல் ) பெரும்பாலானவை பின்பற்று வதற்கான அடிப்படைப் பயிற்சிகள் எமக்கு பாலவிகாஸ் கல்வியில் வழங்கப்பட்டன.

எமது பாலவிகாஸ் கல்வி தினமும் ஸ்லோகங்கள், தியானம், வேதம் என்பவற்றினூடான மன அமைதியுடனும் இறை, குரு ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்படும். இம் முறை எமது பாடசாலைக் கல்வி கற்றலின் போதும் வீட்டில் மீட்டலிலும் போதும் பின் பற்றப்பட்டமையினால் சிறந்த பலன்களையும் கல்வி வழிகாட்டலையும் கற்றல் நுட்பங்களை நாமாக உணர்ந்து பெற்றுக் கொள்ளவும் முடியும்.

பாலவிகாஸ் ஆன்மீகக் கல்வியில் சுவாமியால் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றவர்கள் குருமார்களாகும். ஏனெனில் அவர்களே மாணவர் களுக்கு சகல விடயங்களிலும் முன்னுதாரணமாக அமைவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நேர நிர்வாகம், அன்பாகப் பேசுதல், சகல விடயத்தையும் சுவாமியுடனான நோக்கில் பார்த்தல் போன்றன. எனது குருமாரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட விடயங்கள் ஆகும்.

அடுத்ததாக:

நாம் பாடசாலையிலும் சரி, கல்வி நிலையங்களிலும் சரி மாணவர் பருவம் முழுதும் அதாவது 12 வருடங்களில் எமது திறன்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அமைவது மிக மிக அரிதாகும். ஏனெனில் நான் கற்ற பாடசாலைகளில் அண்ணளவாக 2000 இற்கும் அதிகமான மாணவர்கள் கற்றனர். ஆனால் சாயி சேவா நிலைய பாலவிகாஸ் வருடமொன்றிற்கு குறைந்தது 3 தடவைகளாவது மேடையேறும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. எனக்கு மட்டுமின்றி சகல மாணவர்களுக்கும் கிடைக்கும் இதனால் எமது மேடைக் கூச்சம் நீங்கியது, பேச்சுத்திறமை என்பனவும் தைரியமும் வெளிப் படுத்தப்பட்டன.

நாம் எமது ஒரு நாளின் பெரும் பகுதியை தற்போது சமூகத்தவர் பலருடனும் தொடர்பில் உள்ளோம். எனவே எமது அமைதியான மனநிலை மாற்றமடையாது இருப்பதற்கு சுவாமி கூறிய அறிவுரையான நாமஸ்மரணை செய்தல், பாலவிகாஸ் கல்வியில் போதிக்கப்பட்டன. இதனால் சுயகட்டுப் பாடும், ஆளுமையும், கோபமற்ற தன்மையும் ஏற்படும்.

சகல விடயங்களிலும் எது சரி, எது பிழை என பகுத்தறியும் ஆற்றலும் தன்மையும், தன் தவறை அறிந்து கொள்ளும் தன்மையும் இக் கல்வி முறையால் தானாக வளர்கின்றன. இதற்கடிப்படையான சுவாமியால் ஒழுக்கக் கோட்பாடு "புறங்கூறாதிருத்தல்" ஆகும்.

அடுத்து பெரியோரை மதித்தல், பெற்றோரை வணங்குதல், பிறருக்கு உதவி செய்தல், ஒருவரி லிருக்கும் தீய குணங்களை விடுத்து நல்ல குணங் களைப் பார்த்தல் என்பன எமது பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களில் கற்பித்த போதும் அது வெறும் புத்தக அறிவாக மட்டுமே அமைந்தது யாரும் அதனை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தவில்லை

ஆனால் எமது பாலவிகாஸ் கல்வியில் இவையனைத்தும் உறுதியானது. எவ்வாறெனில் எமக்கு வருடா வருடம் வழங்கப்படும். ஆத்மீக சுய விசாரணை ஏடு மூலமும் அதனை மாதா மாதம் குருமார்கள் கண்காணித்தும் தந்தனர்.

எம்மால் மற்றவர்களுக்கு உதவி புரிவதனைப் பார்த்து எமது சக மாணவர்களும் நடந்து கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

ஜெய் சாயிராம்

செ.கமலாட்சன்
யாழ் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பீஷ்மரின் வாழ்வும் பாபாவின் வாக்கும்

தமிழில் உள்ள மிக பெரிய இதிகாசங்களில் மண்ணாசை மனிதனை எப்படி அலைக்கழித்து இறுதியில் அவனை அழிக்கிறது என்பதை தெளிவாக விபரிப்பதுமான இதிகாசம் மகாபாரதமாகும். வடமொழியில் வியாசரால் எழுதப்பட்ட இந்நூல் வில்லி புத்தூரரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சந்திர வம்சத்தில் தோன்றிய குரு என்ற மன்னனின் பரம்பரையில் வந்த அரச குடும்பத்தாரின் வாழ்க்கையைச் சொல்லுகின்ற இம் மகாபாரதத்தில் பேசப்படாத துறைகளே இல்லை எனலாம். இதனால் தானோ என்னவோ இது ஐந்தாம் வேதமாக போற்றப்படுகிறது. நமது பகவான் பாபாவும் பல இடங்களில் இம் மகாபாரதக் கதைகளை உதாரணம் காட்டியுள்ளார். இப்படிப்பட்ட இந்த மகாபாரதம் அஸ்தினாபுரத்தை ஆண்டு வந்த சந்தனு என்ற அரசனின் ஆட்சியுடன் ஆரம்பமாகிறது.

ஒரு முறை சந்தனு கங்கைக் கரைவழியே நடந்தது சென்று கொண்டிருந்தபோது அங்கு அழகான பெண்ணொருத்தியைக் கண்டார். அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிய சந்தனு, அவள் தான் கங்காதேவி என்று அறியாமலேயே தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி அவளை வேண்டினார். அதற்கு கங்காதேவி "நான் எது செய்தாலும் அதில் நீங்கள் குறுக்கிடக்கூடாது, அவ்வாறு குறுக்கிட்டால் அந்தக் கணமே நான் உங்களைப் பிரிந்து சென்று விடுவேன். இந்த நிபந்தனைக்கு சம்மதித்தால் நான் உங்களை திருமணம் செய்கிறேன்" என்றாள் அவளின் மீது தீராத ஆசை கொண்டிருந்த சந்தனு அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. சிறிது காலத்தின் பின் கங்காதேவி ஒரு ஆண் குழந்தையை பெற்றாள். ஆனால் அவள் அக் குழந்தை பிறந்ததுமே அதை தூக்கிச் சென்று கங்கை ஆற்றில் எறிந்து விட்டாள். சந்தனு மிக மனவேதனை யடைந்தாலும் அவளுக்கு கொடுத்த வாக்குக்கட்டுப் பட்டு அமைதியாக இருந்தான். ஆனால் கங்கா தேவியின் இந்தப் போக்கு இதோடு நிற்கவில்லை. கங்காதேவி தனக்கு அடுத்தடுத்து பிறந்த ஏழு குழந்தைகளை கங்கையாற்றிலே எறிந்து விட்டாள். பின்னர் பிறந்த எட்டாவது குழந்தையையும் அவள் கங்கையில் எறிய முற்படுகையில், பொறுக்க முடியாத சந்தனு அவளைத் தடுத்து அவளின் செயலைக் கண்டித்தான்.

அப்போது தான் கங்காதேவி தான் யார் என்ற உண்மையையும் தனக்கு பிறந்த குழந்தைகள் அஷ்டவசுக்கள் என்றும் அவர்கள் ஒரு சாபத்தால் பூவுலகில் பிறந்தார்கள் என்றும் சந்தனுக்கு கூறினாள். இதனால் ஆச்சரியமடைந்த சந்தனு அவர்களின் சாபத்துக்கான காரணத்தை வினாவ கங்காதேவி சொல்லத் தொடங்கினாள்: ஒருமுறை வசிஸ்ட முனிவரை தரிசிக்க அஷ்டவசுக்கள் அவரின் ஆச்சிரமத்திற்கு சென்றனர். அப்போது அங்கு அவர் இல்லை. ஆனால் அங்கு நின்ற வசிட்டரால் வளர்க்கப்படும் நந்தினி என்ற தெய்வீக பசுவின் மேல் ஆசை கொண்ட அஷ்டவசுக்களில் ஒருவரான தீயு என்பவன் தன் சகோதரர்களுடன் சேர்ந்து அப் பசுவைக் கவர்ந்து சென்று விட்டான். இதனை தன் ஞானதிருஷ்டி மூலம் அறிந்த வசிட்டர் அவர்களை பூமியில் மானிடர்களாக பிறக்கும்படி சாபமிட்டார். வசிட்டரின் சாபத்தை வசுக்கள் அறிந்ததும் அவரிடம் வந்து தம் பிழையை மன்னிக்கும்படி வேண்டினர். அவர்கள் மேல் இரக்கம் கொண்ட வசிட்டர் நீங்கள் அனைவரும் பூமியில் பிறந்த கணமே சாபவிமோசனம் பெறுவீர்கள். ஆனால் தீயு மட்டும் பூமியில் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்த பின்னரே சாபவிமோசனம் பெற முடியும் எனக் கூறினார்.இதைக் கூறிய கங்காதேவி, உங்களால் எறியாமல் தடுக்கபட்ட இந்தக் குழந்தைதான் தீயு. அதை நானே வளர்ப்பேன் என்றும் எனது நிபந்தனையை நீங்கள் மீறி விட்டதால் நான் உங்களிடமிருந்து பிரிந்து செல்கிறேன் என்று கூறிவிட்டு குழந்தையுடன் மறைந்தாள். மன்னன் கவலையில் ஆழ்ந்தான்.

இந்த பீஷ்மரின் பிறப்பே பாபாவால் வலியுறுத்திக் கூறப்படுவதும் ஒன்பது ஒழுக்க நெறிக் கோவைகளில் ஒன்றாக இருப்துமான "ஆசைக்கு வரம்பு வைத்தல்" என்ற அரிய கருத்தை கூறி நிற்கிறது. அதாவது சந்தனு மன்னன் கங்கா தேவியின் மேல் ஆசை கொண்டதால் தான் தன் எட்டு பிள்ளைகளையும் இழந்ததோடு, தன் மனைவியையும் இழந்தான். மேலும் பல வரங்கள் பெற்ற அஷ்டவசுக்கள் கூட நந்தினி என்ற பசுவின் மேல் கொண்ட ஆசையால் தான் பூவுலகில் பிறக்க வேண்டி ஏற்பட்டது. எனவே பாபாவால் கூறப்படுகின்ற ஆசைக்கு வரம்பு வைத்தல் என்ற கருத்தை சாயி அடியவர்களாகிய நாம் எம் வாழ்க்கையில் மிகவும் வலிமையாக கடைப்பிடிக்க வேண்டும். தான் கொண்டு சென்ற குழந்தை இளைஞன் ஆனதும் அவனை கங்காதேவி மீண்டும் சந்தனுவிடம் கொண்டு சென்று ஒப்படைத்தான். கங்கைக்கு பிறந்ததால் அவன் கங்கதத்தன் என அழைக்கப்பட்டான். சிறிது காலத்தின் பின் சந்தனு மன்னன் சத்தியவதி என்ற செம்படவர் குலப் பெண்ணின் அழகில் மயங்கி அவளைத் தனக்கு திருமணம் செய்து தரும்படி அவளின் தந்தையிடம் கேட்டான். அவன் அதற்கு என் மகளை திருமணம் செய்து கொண்டால் அவளிற்கு பிறக்கும் குழந்தையும் அதன் சந்ததியினருமே உமக்குப் பின் இந்த நாட்டை ஆள வேண்டும். இதற்கு நீர் சம்மதித்தால் என் மகளை உமக்கு நான் திருமணம் செய்து தருகிறேன். என்று கூறினான். மன்னன் கவலையில் ஆழ்ந்தான். தந்தையின் கவலைக்கான காரணத்தை மந்திரிகள் மூலம் அறிந்து கொண்ட கங்கதத்தன் தானே நேரடியாகச் சென்று சத்தியவதியின் தந்தையை சந்தித்தான் அவன் தன் நிபந்தனையை கங்கதத் தனிடம் கூற அவன் சிறிதும் தயக்கமின்றி "நான் என் அரசுரிமையை துறக்கிறேன், மேலும் என் வாழ் நாள் முழுவதும் நான் பிரம்மச்சரியாகவே இருப்பேன்" என அவனுக்கு வாக்களித்தான். கங்கதத்தனின் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகத்தைக் கண்ட தேவர்கள் அவனுக்கு பீஷ்மர் என்ற பட்டத்தை வழங்கினார். பயங்கரமான சபதத்தை மேற்கொண்டவன் என்ற கருத்தைக் கொண்ட பீஷ்மர் என்ற பெயராலேயே கங்கதத்தன் அன்றிலிருந்து அழைக்கப்பட்டான். தன் மகனின் தியாகத்தை அறிந்த சந்தனு விரும்பிய நேரத்தில் மட்டுமே மரணம் அடைய முடியும் என்ற வரத்தை பீஷ்மருக்கு வழங்கினார். பின்னர் சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் திருமணம் நடைபெற்றது. மகாபாரதம் என்ற இதிகாசம் தோன்றுவதற்கும் பாண்டவர்களும், கௌரவர்களும் பிறப்பதற்கும் காரணமாக அமைகின்ற இந்தச் சம்பவம் மூலம் பாபா குறிப்பிடுகின்ற இரண்டு போதனைகள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்றில் முதலாவது, பெற்றோரின் கவலைகளை நீக்குவதும், அவர்களின் மனதை நோகடிக்கச் செய்யாமலிருப்பதும் ஒரு பிள்ளையின் முக்கிய கடமை என்பதாகும். இக் கருத்தை பாபா தன் பல உரைகளில் குறிப்பாக இளைஞர்களுக்காக கூறியுள்ளார். தன்னுடன் நீண்ட காலம் இருந்தவர்களைக் கூட சென்று உன் பெற்றோர்களை சந்தோசப் படுத்து என்று கூறி பாபா அனுப்பி வைத்த பல சம்பவங்களை நாம் அறிந்திருக்கிறோம். எனவே பெற்றோர்களின் மனதை புண்படுத்தாமலிருப்பது ஒவ்வொரு சாயி அடியார்களினதும் கடமையாகும். பீஷ்மரின் வாழ்வில் நடந்த இந்த சம்பவத்தின் மூலம் நாம் அறியக்கூடிய இரண்டாவது விடயம் "தியாகம்" ஒருவர் செய்கின்ற ஜபம், தியானம், யாகம், தவம் இவை எல்லாவற்றையும் விட சிறந்தது அவர் தன் வாழ் நாளில் செய்யக் கூடிய ஒரு சிறிய தியாகமாகும். ஒருவர் ஒரு தியாகத்தை செய்வாரேயானால் அவர் எதைத் தியாகம் செய்தாரோ அதைவிட சிறப்பான தொன்றை பெறுவார் என பாபா கூறியுள்ளார். பாபாவின் இக்கூற்றுப்படியே பீஷ்மர் தன் அரசாட்சியையும் இல் வாழ்க்கையையும் தியாகம் செய்ததன் மூலம் எவராலும் எப்போதும் நிகழும் என தீர்மானிக்க முடியாத மரணத்தை தான் விரும்பும் போது மட்டுமே பெறும் வரத்தை பெற்றார். குரு சேஷத்திர யுத்தத்தில் சிகண்டியை முன்னிறுத்தி போர் செய்த அர்ஜுனனால் பீஷ்மரை வீழ்த்த முடிந்ததேயன்றி அவரை மரணமடையச் செய்ய முடியவில்லை. போர்க் களத்தில் வீழ்த்தப்பட்ட பீஷ்மர் சிலகாலம் அம்பு படுக்கையில் இருந்து, உத்தராயண காலம் தொடங்கிய பின்னர் தான் தன் உயிரை நீர்த்தார். எனவே எம்மால் செய்யக் கூடிய சிறிய தியாகம் கூட எதிர்காலத்தில் எமக்கு மிக உயர்ந்த பலனைத் தரும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் சித்திராங்கன், விசித்திரவீரியன் என்ற இரண்டு பிள்ளைகள் பிறக்கிறார்கள். சிறிது காலத்திற்கு பின் சந்தனுவும் இளமைப் பருவத்திலேயே சித்திராங்கனும் இறக்கிறார்கள், அப்போது விசித்திரவீரியன் சிறுவனாக இருந்ததால் பீஷ்மர் அவனுக்கு உதவியாக இருந்து நாட்டைப் பரிபாலிக்கிறார். விசித்திரவீரியன் இளைஞன் ஆனதும் அவனுக்கு திருமணம் முடிப்பதற்காக காசி நாட்டு இளவரசிகளான அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்போரை அழைத்து வருகிறார். அவர்களில் அம்பை சௌபால நாட்டு அரசனை தான் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக கூற, பீஷ்மர் அவளை தகுந்த மரியாதையுடன் திருப்பி அனுப்பி வைக்கிறார். பின்னர் அம்பிகையையும், அம்பாலிகையையும் விசித்திர வீரியனுக்கு திருமணம் செய்து வைக்கிறார். ஆனால் அவர்களுக்கு குழந்தை பிறக்க முதலேயே விசித்திரவீரியன் இறந்து போகிறான் இதனால் அஸ்தினாபுர அரசை ஆட்சி செய்யும் பொறுப்பு பீஷ்மரிடம் செல்கிறது. மேலும் அவர் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே அவ் அரசுக்கு வாரிசுகள் கிடைப்பார்கள். இதனால் சத்தியவதி உட்பட நாட்டின் மந்திரிகள், நாட்டுமக்கள் என எல்லோரும் பீஷ்மரை ஆட்சியை ஏற்கும்படியும். திருமணம் செய்து கொள்ளும்படியும் வேண்டுகின்றனர். ஆனால் அவர் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக அவற்றை மறுத்து விட்டார். இப் பிரச்சினையைத் தீர்க்கும்படி சத்தியவதி வியாசரை வேண்ட அவரின் அருளால் அம்பிகைக்கு திருஷ்டரனும், அம்பாலிக்கு பாண்டுவும் பிறக்கின்றனர். இச்சம்பவங்களின் மூலம் நாம் பாபாவின் இரண்டு கருத்துக்களை உணர்ந்து கொள்ள முடியும். முதலாவது "பிறர் கூற்றுக்கு மதிப்பளித்தல்" அதாவது அம்பை ஒரு பெண், பீஷ்மர் ஒரு நாட்டின் பலம் பொருந்திய நாட்டின் இளவரசர் அவர் நினைத்திருந்தால் அம்பையையும் விசித்திர வீரியனுக்கே திருமணம் செய்து வைத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் அம்பையின் கூற்றுக்கு மதிப்பளித்து அவளை திருப்பி அனுப்பி வைக்கிறார். இதன் மூலமாக பிறர் கூற்றுக்கு மதிப்பளித்தல் என்ற ஸ்வாமியின் கூற்று வெளிப்பட்டு நிற்கிறது.

இரண்டாவது மிக முக்கியமானதும், பாபாவால் தான் அடையக்கூடியவர்களுக்கு மிக வலியுறுத்திக் கூறப்படுவதுமான "திரிகரண சுத்தி" அதாவது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டும். இதையே பீஷ்மர் கடைப் பிடித்துள்ளார். அவருக்கு மிக எளிதாக கிடைத் திருக்கக்கூடிய அரசாட்சியைதான் செய்து கொடுத்த வாக்கிற்கிணங்க புறக்கணித்தார். அதாவது தான் செய்து கொடுத்த வாக்கிற்கிணங்க புறக்கணித்தார். அதாவது தன் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஸ்வாமி தன் சிறு பிராயத்தில் முதன் முதல் இயக்கி நடித்த நாடகத்தின் பெயர் "செப்பினாடு சேஸ்தாரா" அதாவது சொல்கிறபடி செய்கிறோமா? என்பது அதன் அர்த்தம். இதிலிருந்தே நாம் ஸ்வாமி திரிகரண சுத்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். இவ்வாறாக பீஷ்மரின் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவங்களும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் போதனைகளுடன் பொருந்துகிறது. இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான மகாபாரத காலத்திற்கும் ஸ்வாமியின் கருத்துக்களும் போதனைகளும் ஏற்றதாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே இவ்வளவு பெறுமதி வாய்ந்த பாபாவின் கருத்துக்களையும் போதனை களையும் நாம் முற்று முழுதாக பின்பற்றி சாயி அடியவர் என்ற நிலையிலிருந்து சாயி பக்தராக மாறி "நாமே சாயி" என்ற உன்னத நிலையை அடைய முயற்சிப்போமாக.

ஜெய்சாயிராம்

சி.கௌதமன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# என்னை ஆட்கொள்ளும் சாயி

சுவாமியின் பொற்கமலப் பாதங்களை வணங்கிக் கொண்டு என் இதயத்தில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வம் சாயி பகவான் என்னை ஆட்கொள்ளும் முறையை கட்டுரை வடிவில் தருகிறேன்.

2002 ஆம் ஆண்டு ஆடி மாதம் சத்திய சாயி பாபாவினுடைய வாழ்க்கைச் சரித்திர புத்தகம் வாசிக்கக் கிடைத்தது. பாபாவின் அற்புத லீலை களையும், மக்கள் மீது காட்டும் அன்பையும் கருணை யையும் வாசித்து அறிந்ததும் இந்த அற்புத மகானைப் பார்க்க எனக்கும் கிடைக்குமா என்று ஏதோ ஓர் ஏக்கம் மனதில் தோன்றியது. கண்ணீர் பெருக பகவானே.. ஒரு முறை என்றாலும் உங்களைக் காண முடியுமா? உங்கள் தரிசனம் கிடைக்க அருள்புரிவீர்களாக? என மனமுருகிப் பிரார்த்தனை செய்தேன். எங்கும் நிறைந்த சாயி பகவான் எனது அன்பு வேண்டுதலை ஏற்று அந்த மாதமே எனது உறவினர்களுடன் புட்டபர்த்திக்குச் சென்று தனது தரிசனமும் கிடைக்கச் செய்தார். அதன் பின்பும் எனது சகோதரியுடன் இரண்டு முறை யாத்திரை செல்லும் போது புட்டபர்த்திக்குப் போக பகவானின் தரிசனமும் கிடைத்தது.

2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் யாத்திரை போய் வந்ததும் சாயி சகோதரி திருமதி சக்கரவர்த்தி அவர்கள் சுவாமியின் வீபூதிச்சரையும், ஜெபமாலையும் எனக்குத் தந்தார்கள். எல்லாம் சுவாமியின் அருள்தான் என்று நினைத்து நன்றி கூறினேன். அன்றிரவு வீட்டில் கும்பிடும் போது அந்த வீபூதியை எடுத்து நெற்றியில் பூசவும் பிரகாசமான ஒளி தோன்றத் தொடங்கியது. இந்த அற்புதமான ஒளிப் பிரகாசம் என் உள்ளத்தைப் பரவசப்படுத்தியது. முதல் முறையாக இதிலிருந்து சுவாமியின் அருட்பார்வை கிடைக்கப் பெற்றேன். சாயி சமித்திக்குப் போக வேண்டும். பஜனை சொற்பொழிவு எல்லாம் கேட்க வேண்டும் என்று அன்போடும் பக்தி யோடும் நம்பிக்கையோடும் பகவானை வேண்டிக் கும்பிட்ட பலன் சாயி அன்பர்கள் திரு.திருமதி சக்கரவர்த்தி அவர்கள் ஒரு வியாழக்கிழமை மட்டக்களப்பு சமித்திக்கு கூட்டிச் சென்றார்கள். அங்கே சுவாமியின் படத்தில் தோன்றிய பிரகாசமும், பஜனைப் பாடல்களும், சுவாமியைப் பற்றிய சொற்பொழிவும் என் உள்ளத்திற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்து சாயி பக்தையாக்கி விட்டது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் தவறாது போகத் தொடங்கினேன்.

ஒரு முறை ஜோதி தியானம் செய்ய பயிற்சி தந்தார்கள். சாயி பகவானே எனது குருவும், தெய்வமும் என வணங்கித் தியானம் செய்யத் தொடங்கிய நாளிலிருந்து அற்புதமான காட்சிகள் காணத் தொடங்கினேன். ஒரு நாள் தியானத்தில் மணிக்கூடு தோன்றி 5.30 நேரம் காட்டப்பட்டது. அந்த பிரம்ம நேரத்திற்கே தியானம், ஜெபம் செய்து வழிபடத் தொடங்கினேன். காலையிலும், மாலையிலும் ஒளி வட்டம் சுற்றுவதும், சக்கரம் சுழல்வதும் எல்லாத் தெய்வங்களும் தோன்ற அவர்கள் முன் சுவாமி நின்று காட்சி கொடுப்பார். இதிலிருந்து அவர் தான் எல்லாம் எனப் புரிய வைத்தார். பத்திரிகையில் வரும் செய்திகள் சுவாமியின் விடயங்கள், கட்டுரைகளைப் பார்க்கும் படி காட்சி காட்டப்படும்.

சில நாட்களின் பின் தியானத்திலேயே தற்பைப் புல்லால் கொடிமரம் உருவாக்கி அதன் அர்த்தத்தையும் புத்தகத்தின் மூலம் விளங்க வைத்தார் சுவாமி. இறைவனது நாமம் தான் உனது கொடிக்கம்பம் என்பதை எப்போதும் நினைவில் கொள் என்று தெளிய வைத்து இரட்சித்தருளினார். ஒரு நாள் மணிக்கூடு திரும்பவும் தோன்றியது. அதில் சின்னக் கம்பி பெரிய கம்பி ஒரே இடமாக 12 மணி காட்டியது. இதன் அர்த்தம் புத்தகத்தில் கிடைத்தது. கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீக நியதி பொறிக்கப்பட்ட கடிகாரம் ஒன்று தர்மக்ஷேத்திரத்தில் பதிக்கப்பட்டிருக்கிறது. கடிகாரத் தின் முட்கள் அவைகளை வரிசைக் கிரமத்தின் படி பன்னிரெண்டு என்ற எண்ணை அடையும் போது அந்த எண் பாபாவின் பாதங்களை முழுமையாகச் சரணாகதி யடைந்ததைச் சுட்டிக் காட்டும். ஆத்மீக நியதிகள் தவறாது கடைப்பிடித்து வரும் சாதகனை நெஞ்சில் அன்போடு அணைத்துக் கொள்வார் என்றிருந்தது. இதிலிருந்து கருணைக் கடவுள் என்னை ஆட்கொள் ளும் விதம் பற்றி மகிழ்ச்சியடைகிறேன் ஆனந்தமே என் சாயி.

எல்பென்டா குகையில் செதுக்கப்பட்டிருந்த மும்மூர்த்தியின் வடிவம் சிறப்பாக இருக்கிறது என்று பாபா தனது பக்தர்களுக்கு கூறியதை வாசித்தேன். அன்று இரவு படுக்கையறை சீலிங்கில் ஒரு குகை தோன்ற அதிலிருந்து பாபா வெளியேறி நேரே சுவரில் தோன்றி பிரம்மா, விஷ்ணு, சிவனாகக் காட்சியளித்தது மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தது. சில சமயத்தில் நித்திரை கொள்ளவிடாது ஒரே தெய்வத் திருவிளை யாடல்கள் காட்டுவதும், பாபா 14 வயதிற்குள் புரிந்த லீலைகளை நடித்துக் காட்டுவதும் நடைபெறும். ஒரு முறை நித்திரையில் எனது கையைத் தட்டி எழுப்பி சக்தி நடனம் புரிவதைக் காட்டினார். தேவியின் மேனி வண்ணமும், ரூபமும் நகைகளும் ஆடைகளும் கண்டு கண்கள் ஆச்சரியமடைந்தது. திரையில் படம் பார்ப்பது போல் இம்மாதிரித் திவ்விய காட்சிகளைக் கண்டு களிக்க நான் முற்பிறப்பில் செய்த புண்ணியமென்று நினைத்து காருண்ணியக் கடவுள் சாயியின் பாதங்களில் சரணடைகின்றேன்.

இமயமலை புனித யாத்திரைக்குச் செல்லும் போது சுவாமி அன்னை ஈஸ்வரம்மா தேவியையும் கூட்டிச் சென்றவர் இவற்றை புத்தகத்தில் வாசிக்கும் போது எனக்கும் போகக் கிடைக்குமா? என்று நினைத்தேன். என் அன்புத் தெய்வம் 2010 ஆம் ஆண்டு சகோதரியுடன் இமயமலை யாத்திரை போக அருள் புரிந்தார். எனக்கு எலும்பு வருத்தம், கால் விறைப்பு இருந்தது. இந்தியாவிலேயே இரண்டு முறை விழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். தேகத்திற்கு ஒரு பாதிப்பும் வரவிடாது காப்பாற்றியவர் சுவாமி தான். வானில் இமயமலையில் போய்க் கொண்டிருக்கும் போது பகவானே! என்னால் சகோதரி ஆட்களின் பயணம் தடைப்படக் கூடாது என்று கண்மூடி பிரார்த்தித்தேன். உடனே கணீர் என்ற சத்தத்தில் எனது பெயர் சொல்லி பொன்மணி என்று கூப்பிடக் கேட்டது. யார் என்னைக் கூப்பிடுவது என்று கண் விழித்துப் பார்த்தால், வானிற்குள் முன்பகுதியில் அன்னை ஈஸ்வரம்மாதேவியும், சுவாமியும் ஒளிமய மாகச் சிரித்தபடி தோன்றி மறைந்தார்கள். "நாமிருக்கப் பயமேன்" என்று அபயமளித்த காட்சியும். கூப்பிட்ட குரலும் மறக்க முடியாத சம்பவம். எந்தவிதமான பிரச்சினையுமின்றிப் பயணம் நிறைவேறியது.

எங்கள் கருணைக் கடவுள் சாயி பகவான் வருத்தமுற்று இருப்பது அறிந்து எங்கும் பிரார்த்தனை நடைபெற்றது. சுவாமி வருத்தமுற்றிருக்கும் போது தனது பிரசன்னத்தைக் காட்டத் தவறவில்லை. பஜனை நடைபெறும் போதும், சுவாமி வழிபாடு செய்யும் போதும் படுக்கையில் இருப்பது போலவும், எங்கும் போய்ப் பக்தர்களைப் பார்ப்பது போலவும் காட்சி காட்டுவார்.

24.04.2011 சுவாமியின் மகாசமாதியன்று அவரது ஸ்தூல உடலைத் தரிசிக்க உலகெங்கும் இருந்து பக்தர்கள் சென்றார்கள், அங்கே பூசைகள் நடைபெறும் போது சமித்தியிலும் அதே நேரம் தீபம் காட்டப்பட்டது. என் இதயவாசன் சாயி எனக்குக் காட்சி கொடுத்து பேழையில் எனக்கு முன் தோன்றி யிருந்தார். என் உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிய உடனே குனிந்து பேழையைத் தொட்டு வணங்கினேன். இக் காட்சியைக் காட்டித் தன்னுடைய பக்தையாகிய எனக்கு அருள் புரிந்தார்.

தற்போது சூட்சும ரூபத்தில் எங்கும் பிரசன்னமாகிய பக்தர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கின்றார். சுவாமி சொல்லியது போல் என் உள்ளும் புறமும், முன், பின், அக்கம், பக்கம் எங்கும் தோன்றி பாதநமஸ்காரம் தந்தவர். அதன் பின்பு படத்திலிருந்து மேலெழுந்து சுவர் பக்கமாக வந்து எனக்கு முன்னால் நிற்பார். ஆனந்தக் கண்ணீருடன் நன்றி கூறியபடி பாத நமஸ்காரம் செய்வேன். சில வேளைகளில் எலும்பு நோ, இடுப்பு வருத்தம் கடுமையாக இருக்கும். அந்நேரத்தில் சுவாமியின் கையிலிருந்தும் வேறு அம்சங்கள் மூலமும் ஒளியை எனக்கு நேரே அனுப்பி நோமாறக்கூடியதாக அனுக்கிரகம் செய்வார்.

நலிந்த நிலையில் இருக்கும் எனக்கு மன வலிமையைத் தந்து, பஜனைக்குத் தவறாது போகவும், வேறு நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் போய்வரக் கூடியதாக கிருபை செய்வார். வீபூதி வரும் காட்சியை கல்லாற்றில் ஒரு வீட்டிலும், திருகோணமலையில் திரு.புவனேந்திரன் அவர்கள் வீட்டிலும் சமித்தி அங்கத்தவர்களோடு போய் பார்க்கக் கிடைத்தது. திரு.புவனேந்திரம் அவர்கள் வீட்டில் வீபூதிப் பிரசாத்தோடு எல்லாத் தெய்வ உருவங்களும் காட்சி கொடுக்கின்றனர். மாலை வளரும் காட்சியெல்லாம் பார்க்கவும் திரும்பவும் நடைபெறும் யாகப் பூஜைக்கு போக விரும்பினேன். எனது விருப்பத்தை நிறைவேற்றிக் கூட்டிச் சென்று அவர்களோடு பத்தினிபுரம் நாராயண சேவைக்கும் சென்று வரக் கருணை காட்டியுள்ளார். எங்கள் சாயி சமித்தியிலும் தத்ரூபமான காட்சிகள் காட்டி எமக்கு முன்பு தோன்றுவார். இவையெல்லாம் எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் எனப் போற்றித் துதிக்கிறேன்.

அன்பு சாயியின் அற்புத லீலைகளுக்கு அளவேயில்லை. நீல மேகத் திரையில், வெண்முகில் கூட்டங்களில் தோன்றி, சீரடிசாயியின் காட்சி, சுவாமியின் குழந்தைப் பருவக் காட்சி எல்லாம் காட்டியதோடு பிரேமசாயியின் அவதாரக் காட்சியையும் காட்டிக் கொண்டேயிருக்கின்றார். தெய்வ விசேட தினம் எல்லாம் காட்சி காட்டியருளுகின்றார்.

ஒரு நாள் சுவரில் பகவான் தோன்றி மறைய நான் விழித்துப் பார்த்து கும்பிட்டு பக்திப்பாடல் ஒன்று படிக்கவும் சிவனும் சக்தியும் தோன்றி அப்படியே சுவரில் அப்பாடல் முடியும் வரையும் நின்ற காட்சி மெய்மறக்கச் செய்தது. அன்றிலிருந்து சுவாமியும் வேறு எல்லாத் தெய்வங் களுமே வெளிப்படையாகவே காட்சி தருகின்றார்கள். பகவானே என்று சொல்லி கண்ணை மூடினால் போதும் சுவாமி தோன்றி கண்ணைச் சிமிட்டிக் காட்டுவதும், வாயசைத்துக் கதைப்பதும், அழகாகச் சிரித்து என்னைப் பரவசப் படுத்துவதும் மறக்க முடியாத காட்சி. கண் திறந்து பார்க்கும் போது சிரித்த முகத்தோடு நிற்பார். நான் ஏதும் பிழை விட்டிருந்தால் அதற்கு உடன் தண்டனை கிடைக்கும் பிழையை உணர்ந்து மன்னிப்பு கேட்டவுடன் சிரித்தபடி தலையசைத்துக் காட்டுவார். இந்த அடியாள் மீது அன்பு சொரியும் சாயி தெய்வத்திற்கு தினமும் நன்றி கூறியபடி இருக்கின் றேன்.

புண்ணிய ஷேத்திரமான புட்டபர்த்திக்கு இனி நான் போக முடியாது என்று, பிரசாந்தி நிலையத் திற்குக் கூட்டிச் சென்று சமாதிக்கு முன் பக்தர்களின் காட்சியும் காட்டுகின்றார். ஒருநாள் கண்ணைக் கசக்க சாயி முஸ்லீம் பக்தர்கள் வரிசையாக வந்து கொண் டிருப்பதைக் காட்டினார்.

சுவாமி அறைச் சுவரில் அன்னப் பறவை களுடன் எருது வாகனம் ஓடிய வண்ணம் தினமும் காட்சியில் காண்கிறேன். எல்லாம் பகவானின் திருவிளையாடல் தான். புத்தகத்தில் வைத்திருக்கும் சாயிபடம் ஒன்றில் தினமும் வீபூதிப் பிரசாதம் தூவப்பட்டிருக்கும். இது தெய்வீக அருளைக் காட்டும் அன்புப் பரிசாகக் கொடுக்கின்றார். புத்தகம் வாசித்துப் போதனைகள், உபதேசங்கள் பற்றிப் பேசுவதற்கு எழுதும் போது நிமிர்ந்து பார்த்தால் பிரகாசமான ஒளியோடு முன்னால் தோற்றம் தருவார். என்றும் அவருடைய அன்பும் ஆசீர்வாதமும் கிடைக்கப் பெற்றுள்ளேன். எம்மை ஆட்கொள்ளும் இறைவன் கூறிய அன்புப் பாதையை, வழிமுறைகளை நல்ல அறிவுரைகளை மனதில் பதித்து வாழ்ந்து காட்டுவதே சாயி பக்தர்களாகிய நாம் செய்யும் சேவையாகும்.

ஜெய்சாயிராம்

திருமதி.பொ.கனகசபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# இளைஞர்களுக்கான மனித மேம்பாடுகளும், சேவையும்

சுவாமி அனைத்து உயிரினங்களும், உங்களுக்குள்ளேயிருக்கும் அதே இறைவன் வசிக்கும் ஆலயங்களாகும். எனவே, உங்கள் அன்பையும் சேவையையும் அனைத்துயிர்களையும் உள்ளடக்கக் கூடியதாக விரிவுபடுத்துங்கள்.

அன்பின் கருத்து சேவையே ஆகும். அதாவது அன்பின் முதிர்ச்சி சேவையாகும். அன்பின்பாற்பட்ட சேவையே உயர்ந்த சேவையென சுவாமி கூறுகின்றார். ஏனெனில் அன்பானது, அனைத்துயிர்களையும் உள்ளடக்குமாறு வரிவடையும் போது உண்மையில் நீங்கள் உங்களில் உள்ள அதே "ஆத்மாவே" அனைத்துயிர்களிலுமுள்ள "ஆத்மாவென" உணர்ந்து கொள்வீர்கள்.

சுவாமி தியானத்தை விட சேவையே உயர்ந்தது என ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு அருகாமையில் உள்ள ஒருவர் நோயினால் கஸ்டப்படும் போது, அவருக்கு அன்புடன் ஓடிச் சென்று உதவி செய்யாது விட்டு விட்டு நீங்கள் தியானத்தை கடவுள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென எப்படி எதிர்பார்க்க முடியும்.

சுவாமி " உங்களை மட்டும் கருத்திற் கொண்டு, பிரார்த்தனைக்கான ஜெபமாலையுடனும், தியானத்துடனும் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டாம். உங்கள் சகோதர, சகோதரிகளின் மத்தியில் அவர்களுக்காக அன்புடன் சேவை செய்யும் சநதர்ப்பத்தை எதிர்பார்த்திருங்கள். ஆனால் சேவை செய்யும் போது இறைவனின் நாமத்தை உங்கள் நாவிலும், இறைவனின் உருவத்தை உங்கள் கண்முன்னும் நிறுத்துங்கள். இருதயத்தில் ராம நாமம், கரங்களிலோ சேவை என வாழுங்கள். அவ்வாறு வாழும் போது நீங்கள் கடவுளின் கிருபை முழு அளவில் பெறுவது திண்ணம்"

சுவாமி "பற்று என்ற தவறான பாதையிலிருந்து விடுபடுவதற்கான சரியான மார்க்கம் சேவையாகும். பற்று இருக்கும் போது, அன்பானது சுய நல வட்டத்திற்குள்ளேயே மட்டுப்படுத்தப் படுகின்றது. இதிலிருந்து விடுபட்டு அன்பை எல்லா உயிர் மீதும் பொழியுங்கள். திரும்பவும் அதே அன்பு கிடைக்கலாம் அல்லது கிடைக்காது விடலாம். வெற்றியில் முடியலாம் அல்லது தோல்வியில் முடியலாம். எந்த எதிர்பார்ப்பும் இன்றி அன்பு செலுத்துங்கள்.

இவ்வாறாக நீங்கள் செலுத்தும் அன்பானது, உதவி தேவைப்படுவோருக்குச் சேவையாகவும் மனமுடைந்திருப்போருக்கு ஆறுதலும், ஊக்கமும் அளிக்கும் அன்பு நிறைந்த வார்த்தைகளாகவும், அனுதாபமும் தயையும் நிறைந்த சிந்தனையாகவும் உருப் பெறட்டும்"

உயர் மாற்றம் என்பது தீய குணங்களை விடுத்து, உயர்ந்த தெய்வீகக் குணங்களை ஏற்றுக் கொள்வதன் மூலமே ஏற்படுகின்றது.

பகவான் மேலும் இது பற்றிக்கூறும் போது "பிரம்மவித் பிரம்மைவ பவதி" (பிரமத்தை அறிந்தவன் பிரம்மமாக மாறுகின்றான்) எனக் கூறியுள்ளார்.

தெய்வத்துவத்தை உணர்ந்து அவ் வழியில் நடந்து தெய்வத்தின் அறிவுரையை எங்கள் வாழ்க் கையில் நடைமுறைப்படுத்தும் போதே உயர் மாற்றம் ஏற்படுகின்றது.

பகவான் "மனத்தில் உயர் மாற்றம் ஏற்படாமல் எந்த ஆன்மீகச் சாதனை செய்தும் பிரயோசனம் இல்லை" எனக் கூறியுள்ளார்.

சுவாமி அன்பின் திருவுருவங்களே பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட சேவை செய்யும் கரங்களே உயர்ந்தவை. உங்கள் வாழ்க்கையைச் சேவை செய்வதற்காக அர்ப்பணி யுங்கள்.

பரோபகாரம் இதம் சரீரம். இந்த சரீரம் சேவை செய்வதற்காகவே இறைவனால் உங்களுக்கு வழங்கப்பட்டது. "மக்கள் சேவையே மகேசன் சேவை"

இறைவனுக்கு எங்களிடம் இருந்து எதுவும் தேவையில்லை, காரணம் எல்லாவற்றினதும் மூலம் அவரே. அவர் எங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது, சுயநலமற்ற அன்பு மட்டுமே.

இந்த சுயநலமற்ற அன்பே சேவையாகப் பரிணமிக்கிறது.

சேவை மூலமே இலகுவில் உயர் மாற்றம் அடைய முடியும்.

சேவை ஆணவத்தை அழித்து, சகிப்புத் தன்மையையும், சகோதரத்துவத்தையும் வளர்க் கின்றது.

சேவை மூலம், அனைத்துயிர்களிலும் இறைவனைக் காணும் தெய்வீகப் பண்பு வளர்கின்றது.

தேகாபிமானம் குறைகின்றது. ஆத்மாபிமானம் வளர்கின்றது.

ஆத்மாபிமானம் விருத்தியடையும் போது, அனைத்து தெய்வீகக் குணங்களும் இயல்பாகவே, எங்களுக்குள்ளேயிருந்து வெளிப்படுகின்றது.

சுவாமி, ஒளியின் மகிமை பற்றி கதைப்பதன் மூலம் இருளை அகற்ற முடியுமா?

மருந்தின் சர்வரோக நிவாரணத்தை புகழ்வதன் மூலம் நோய் தீருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தின் மகிமையைப் பற்றி கேட்பதன் மூலம் வறுமை தீருமா?

அதே போல, நற்பண்புகளைக் கேட்பதன் மூலம் மட்டுமே உயர்மாற்றமடைய முடியுமா?

நடைமுறையில் கடைசி 1 அவுன்ஸ் ஆவது நாளாந்தம் கடைப்பிடிக்க வேண்டும்.

உயர்மாற்றத்திற்கு புலன் கட்டுப்பாடு அவசியம்......

***புலன் கட்டுப்பாட்டுக்கு, அவசியமாக வேண்டப் படுபவை***

- பிரார்த்தனை (அஸத்தோமா ஸத்கமய)
- ஜபம் - காயத்ரீ மந்திரம்
- தியானம் (ஒளித் தியானம்)
- பஜனை
- 5D
- சுயநலமற்ற சேவை
- திரிகரணசுத்தி (புத்தரைப் போல - சம்யக் திருஸ்டி - நல்ல பார்வை, சம்யக் வாக்கு, நல்ல செயல்)
- ஆத்மாபிமானம்
- சாத்வீக உணவு
- சத்சங்கம்
- நல்ல சிந்தனைகளை வளர்க்க வேண்டும்
- சாத்வீக உணவு - நல்ல சிந்தனை - நல்ல செயல் - நல்ல சீலம் - உயர் மாற்றம்

Be Good நல்லவனாயிரு
Do Good நல்லதையே செய்
See Good நல்லதையே பார்

***சுவாமி "கிராம அபிவிருத்தி சேவை செய்யும் இளைஞர்களுக்கு இருக்க வேண்டிய தகமைகள்" எனக் கூறுபவை:***

1. பணிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

2. பூ மாதா (பூமித்தாய்),
கோமாதா (பசு)
தேகமாதா (பெற்ற தாய்)
வேத மாதா (வேதங்களின் தாய் - சாயி மாதா)
ஆகியோரை மதிப்பளித்து வணங்க வேண்டும்.

3. சொல், செயல், சிந்தனை மூன்றும் ஒன்றாகவிருக்கக் கூடியதாக அவதானித்து வாழ வேண்டும்.

4. கிராம மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கு எப்போதும் தயாராகவிருத்தல்.

5. நல்ல உடலாரோக்கியத்துடனும், அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும்.

6. ஆறு ஆலோசகர்களையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது உதவி செய்யும் போது பின்வரும் 6 வினாக்களையும் நினைவிற் கொள்ள வேண்டும்.
யாருக்கு?
எப்போது?
என்ன?
ஏன்?
எங்கே?
எப்படி?
என்ற கேள்விகளைத் தம்மைத் தாமே கேட்க வேண்டும்.

7. தங்களது சுய முயற்சியுடன், சுவாமியின் கிருபையில் தங்கியிருத்தல்.

8. சுயநலமற்ற, சுறு சுறுப்பான அர்ப்பணிக்கப்பட்ட சேவை மூலம் கிராம வாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

9. புலன் கட்டுப்பாடு அவசியம். (Watch ஐ ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.)

10. எப்போதும் சுவாமி பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற திடநம்பிக்கை உடையவராக இருக்க வேண்டும்

11. குறைவாகப் பேசி, நிறைவாக செய்யுங்கள்

12. ஐந்து மனித மேம்பாடுகளையும் 5 பிராணன்களாக கொண்டு கடைப்பிடிக்க வேண்டும்.

13. மனத்தைமூடி, இதயத்தை திறவுங்கள். சேவைக்கு சின்னமாக அனுமார் உள்ளார். அவருடைய ஒவ்வொரு ரோமமும் கூட "ராம, ராம" என உச்சரித்துக் கொண்டேயிருந்தது, நீங்களும் இறைவனதும், மக்களதும் சேவகன் எனக் கூறுவதற்கு பெருமைப்பட வேண்டும். அனுமாரைப் போல நாவில் ராம நாமத்துடனும், கரத்தில் சேவையுடனும் காலத்தைக் கழியுங்கள்.

"கிராம சேவையே, இராம சேவை" என நான் பல முறை கூறியுள்ளேன்".

அனுமார் இதையே விபூஷணனுக்கு, இராம நாமம் சொன்னால் மட்டும் போதாது, இராம சேவையும் செய்ய வேண்டும். எனக் கூறினார்.

14. உங்களுக்கும் எனக்கும் இடையே தூரம் ஒரு தடையென எண்ணாதீர்கள். நீங்கள் சத்தியத்தையும், தர்மத்தையும் கடைப்பிடிப்பீர்களேயானால் ஒவ்வொரு கணமும் உங்களுடன் கூட இருப்பேன்.

15. நீங்கள் மற்றவருக்கு செய்த நன்மையை மறந்து விடுங்கள். மற்றவர்கள் உங்களுக்குச் செய்த தீமையையும் மறந்து விடுங்கள். தாய், தந்தையருக்கு மதிப்பளியுங்கள்.

ஜெய் சாயிராம்

***சத்திய சாயி பாடசாலை - மானிப்பாய், ஸ்ரீலங்கா தொடர்புகளுக்கு***
Telephone: +94 21 225 5086 E mail - saischoolmail@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஆத்ம விசாரணை

நீ தீவிர விசாரணை செய்தாலேயல்லாமல், உனது இயற்கைப் பாங்கிற்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்றதான சிகிச்சை மருந்துகளைக் கண்டுபிடிக்க இயலாது. நம்பிக்கையுடனும், பக்தியுடனும் படித்து ஆராய்ச்சி செய். நீ படிப்பது எதுவோ அதன் கருத்துப் பொருளையும், உட்சிறப்பையும் ஆழ்ந்து நோக்கு. நீ படிப்பதைப் பயில்வதை கடைப்பிடிக்க வேண்டும். என்பதை வாழ்க்கையில் குறிக்கோளாக எப்போதும் வைத்துக் கொள். அவ்வாறு செய்தாலேயல்லாமல் பகவான் "Self enquiry" என்பது "ஆத்ம விசாரணை": யேயாகும். எனக் கூறிகின்றார்.

மேலும் சுவாமி ஆத்ம விசாரணை தான் ஆத்மா பற்றி உணர்ந்து கொள்வதற்கான நேரடியான வழியாகும். ஆத்ம விசாரணை அறியாமையை அகற்றுகின்றது எனவும் கூறியுள்ளார்.

பகவான் "தொடர்ச்சியாக ஆத்ம விசாரணை (அதுவே பிரம்மனைப் (கடவுள்) பற்றிய விசாரணை) யில் ஈடுபடவேண்டும்." எனக் கூறியுள்ளார்.

***சுவாமி ஆத்ம விசாரணை பற்றி மேலும் கூறுவதாவது-***

முதலில் "நீ யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபடு. இந்த நீ யார்? என்ற விசாரணையே ஆத்ம விசாரணைக்கு அடிப்படையாகவுள்ளது. இந்த நீ யார்? என்ற விசாரணையே நான் யார்? நான் இந்த உடலா? நான் இந்த மனமா? நான் புத்தியா? .. என்பது போன்ற வினாக்களுக்கும் ஒருவரை இட்டுச் செல்கின்றது. இந்த ஒவ்வொரு வினாவுக்கும் விடையை ஆராய்ந்து கண்டு பிடிக்கும் போது, நீ உண்மையில் உடலும் அல்ல, மனமும் அல்ல, புத்தியும் அல்ல என்பதை உணர்ந்து கொள்ள முடியும். உதாரணமாக "இது என் உடம்பு எனச் சொல்லும் போது" நீ வேறு உடம்பு வேறு எனத் தெளிவாக விளங்குகின்றது. எனவே நீ உடம்பல்ல. இந்த உண்மை உன்னால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். நீ இது என் உடம்பு, இது என் மனம், இது என் புத்தி என்று சொல்லும் பொழுதெல்லாம், உடம்பு, மனம், புத்தி அனைத்தும் உன்னிலிருந்து வேறானவை என்பதனையே குறிக்கின்றது. நீ உடம்பில் இருக்கின்றாய். நீ மனத்தில் இருக்கின்றாய், நீ எங்கும் இருக்கின்றாய். ஆனால் அவை உன்னில் இல்லை. ஆனால் இவை உனக்கு உரியவையாகவிருக்கின்றன. ஆனால் அவை உன்னை மாதிரி இல்லை. (கோடை அருள் மழை : 1977 பக் 33,34)

ஒருவர் தன்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில் விசாரணையின் தன்மை எப்படியிருக்க வேண்டும் என சுவாமி பின்வருமாறு விளக்குகின்றார்.

" முதலாவது உங்களது முழுமையான விலாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.
நீ யார்? ஆத்மா.
எங்கிருந்து வந்தாய்? ஆத்மாவிலிருந்து,
நீ எங்கே போகின்றாய்? ஆத்மாவுக்கு
எவ்வளவு காலம் நீ இங்கு இருப்பாய்? ஆத்மாவுடன் இரண்டறக் கலக்கும் வரையில்.
இப்போது எங்கே இருக்கின்றாய்? உண்மையற்ற என்றும் மாறிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் எந்த உருவில், ஆத்மாவாக என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
மறைந்து போகக் கூடிய பணிகளில் இனி என்ன செய்யப் போகின்றாய்? மறைந்து மாறிப் போகும் இவைகளை விட்டு, நித்தியமான, நிரந்தரமான என்றும் மாறாத பணிகளில் ஈடுபட்டு ஆத்ம பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டும்.
இதுவே ஜீவியின் பிரதான முயற்சியாக இருக்க வேண்டும்.
(பிரசாந்தி வாஹினி)

இந்த உண்மையை அடிப்படையாக வைத்தே, சுவாமி நாங்கள் ஒரு ஆள் மட்டும் அல்ல ஆனால் மூவர் ஒருவரில் உள்ளோம் எனக் கூறுகின்றார்.

ஒன்று - நாங்கள் யாரென்று நாங்கள் நினைப்பது
இரண்டு - நாங்கள் யாரென்று மற்றவர்கள் எம்மைப் பற்றி நினைப்பது
மூன்றாவது - உண்மையில் நாங்கள் யாராக இருக்கின்றோமோ அது.

எனவே நாங்கள் இந்த உடம்பு, மனம், ஆணவம் என்ற போலியான அடையாளம் காணுவதன் மூலம் எங்கள் உண்மைத் தன்மையை மறைப்பதை விட்டு விட வேண்டும்.

சுவாமி பிரசாந்தி வாஹினியில் நாங்கள் ஒவ்வொரு வரும் மேற்கூறிய வினாக்களை கேட்டு விசாரணை செய்யும் போது தான் எங்களைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ள முடியும் எனக் கூறுகின்றார்.

இவ்வாறான விளக்கங்களைக் கேட்பது குறிப்பது என்ன வென்றால், எங்களது விவேகம் அல்லது பகுத்தறிவே ஆகும்.

விவேகம் அல்லது பகுத்தறிவின் மூலம் இந்த உலகம் நிரந்தரமற்றது என்ற உண்மை எங்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்து விடுகின்றது. இதன் பின்னர் அனைத்து பற்றுக்களும் தாமாகவே விடுபட்டு விடுகின்றன.

ஜெய்சாயிராம்

தொகுப்பு:
சுலோஜனா உமாபதிசிவம்
புட்டபர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சத்திய சோதனை

நம்மை நாம் சாயி பக்தர்கள் என்று பெருமையாக சொல்லிக் கொள்கிறோம். சாயி தொண்டன் என்ற முத்திரையை நமக்கு நாமே குத்திக் கொள்ள முன் சில அடிப்படை நிபந்தனைகளை நமக்கு பகவான் சொல்லியிருப்பதை மறந்து விடக்கூடாது. ஒன்பது விதிகளை நமக்கு பகவான் சொல்லியிருந்தாலும் அவற்றில் சிலவற்றையாவது பின்பற்ற வேண்டாமா? சாயி பக்தன் என்று சொல்ல முன் நம்மை நாமே சோதனை செய்து பார்ப்போம்.

*"சித்தர்களும் யோகிகளும் சிந்தனையில் ஞானிகளும்*
*புத்தரோடு இயேசுவும் உத்தமர் காந்தியும்*
*எத்தனையோ உண்மைகளை எழுதி எழுதி வைச்சாங்க*
*எல்லாம் தானே படிச்சீங்க என்ன பண்ணி கிழிச்சீங்க"*

என்று பட்டுக்கோட்டை பாடியது எவ்வளவு உண்மை என்பதை நாம் அறிவோம். என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். ஒரு வருடத்தில் 52 வாரங்கள் இருக்கின்றன. அந்த 52 வாரங்களில் எத்தனை வாரங்கள் நாம் பஜனைகளுக்கு போயிருக்கிறோம். ஒரு வாரத்திலே 168 மணித்தியாலங்கள் இருக்கின்றன. அதிலே ஒரு மணித்தியாலத்திற்காவது ஒழுங்குடன் பஜனைக்கு போக முடிகிறதா? போகாத வாரங்களுக்கு காரணங்கள் ஆயிரம் சொல்வதற்கு தயாராக வைத்திருக்கிறோம்.

சத்திய சாயி நமது துன்பங்களுக்கு துணை வரவேண்டும். ஆசைகளை நிறைவேற்ற வேண்டும். முடிவில் நமது பிறவியை அறுக்க வேண்டும் என்றெல்லாம் வேண்டிக் கொள்கிறோம். ஆனால் அவனுக்காக ஒரு வாரத்திலிருக்கும் 168 மணித்தியாலங்களில் எந்தக் காரணமும் சொல்லாது ஒரு மணி நேரத்தை இறைவனுக்காக நாம் ஒதுக்குவதில்லை. "இறைவனை அடைய இறை நாமத்தை சொல்லுவதே சுலபமான வழி" என்று இந்த உலகத்தில் நமக்கு முன் அடியெடுத்து வைத்த அனைத்து தெய்வீக புருஷர்களும் அடித்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்காகவே சத்திய சாயி பகவான் வாரம் ஒருமுறை பஜனை என்ற வழக்கத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நெஞ்சத்தைத் தொட்டு நாம் இந்தக் கேள்வியை நமக்கு நாமே கேட்டால் சத்தியமாக என்ன பதில் வரும்?

இதைத் தான் மாணிக்கவாசகரும்

*"புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே*
*வழுவாதிருக்க வரந்தர வேண்டும் இவ் வையகத்தே*
*தொழுவார்க்கிரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்*
*செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடை மேல் வைத்த தீ வண்ணனே"*

என்று பாடியுள்ளார். மனிதனுக்கு மாத்திரம் தான் ஆடமுடியும். சிந்திக்க முடியும், பேச முடியும். இறைவன் நம்மை இப்பிறப்பில் மனிதனாகப் படைத்து அவனை சிந்திக்கின்ற வாய்ப்பினையும் தந்திருக்கிறான். நாம் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கின்றோம்.

இதனால் தான் ஸ்ரீ தாயுமான சுவாமி

*"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்*
*யாதினும் அரிது அரிது காண்:*
*இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?*
*ஏது வருமோ? அறிகிலேன்"*

என்று பாடினார்.

இறைவன் தந்த மனித பிறவியை சரிவர உபயோகித்துக் கொள்ள வேண்டாமா? இன்றிலிருந்து ஒவ்வொரு வாரமும் விடாமல் ஒரு பஜனைக்கு செல்வோம் என்று உறுதி கூறுவொம். சத்திய சாயி பகவானின் பரிபூரண ஆசி நம் எல்லோருக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஜெய் சாயிராம்

தெ.ஈஸ்வரன்
தலைவர்
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிதியம்
ஸ்ரீலங்கா

## எந்தன் சாயி

**புட்ட பர்த்தி மண்ணிலே**
**புனிதமாக மலர்ந்தவர்**
**அன்பு என்ற சொல்லையே**
**அமுதமாக வகுத்தவர்**
**பெற்றோரின் பெருமையை**
**பெரிதாக மதித்தவர்**
**பண்பு மிக்க மாணவராய்**
**பாரினில் உயர்ந்திட**
**கல்விக்கூடம் கலைக்கூடம்**
**என்று பல அமைத்திட்டார்.**
**சேவை பல செய்திடடா**
**என்று புத்திபுகட்டினார்**
**ஏழைகட்கு இரங்கி விடு**
**ஏழ்மையாய் வாழ்ந்து விடு**
**ஊனம் உற்றவர்க்கு நீ**
**உதவிக் கரம் நீட்டிவிடு**

**– வரதராணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# இளைஞர்களுக்கான அறிவுரைகள் சுவாமி 21.11.1999 அன்று அருளியது

இளைஞர்களே குடிமக்களே!

***ஒழுக்கம்:***

இவ்வுலகின் எதிர்காலம் நன்மையோ அன்றித் தீமையோ எதுவானாலும் உங்களது நடத்தையைப் பொறுத்தே அமையப் போகின்றது. இவ்வுலகம், பாதுகாப்பாகவும், பத்திரமாகவும், அமைதியாகவும், வளமாகவும் இருக்க வேண்டுமானால் உங்கள் நடத்தையும், ஒழுக்கமும் நல்லதாக இருக்க வேண்டும். இவ்வுலகத்திற்கு தற்போதய தேவை ஆடம்பரமும், உலகியல் சுகங்களும் அல்ல, மேன்மையான குணங்களும், நல் ஒழுக்கமும் நிறைந்த ஆடவரும், பெண்டிரும் தான்.

சத்யம், தர்மம், தியாகம் ஆகியவற்றைப் பின்பற்றி நடப்பவனே உண்மையான மனிதன். சத்யம் என்பது நீதி, தர்மம், என்பது ரீதி, தியாகம் என்பது க்யாதி. இவை மூன்றும் சேர்ந்தே மானவ ஜாதி (மனித குலம்) இந்த மனிதகுலம் சத்தியத்திலிருந்து உருவாகிற்று.

இந்தப்படைப்பு அனைத்தும் சத்தியத்திலிருந்தே பிறந்து, உருவாகிக் கடைசியில் சத்தியத்திலேயே ஐக்கியமாகின்றது. சத்தியம் இல்லாத இடமே இவ்வுலகில் இல்லை. இந்தத் தூய கலப்பற்ற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

இதை ஆதாரமாகக் கொண்டே, பண்டைய முனிவரும், மகரிஷிகளும்

ஸத்யம் ப்ருயாத்
ப்ரியம் ப்ருயாத்
ந ப்ருயாத் சத்யம் ப்ரியம்

(உண்மையே பேசு, இனிமையாகப் பேசு, மனதிற்கு ரசிக்காத உண்மையைப் பேசாதே)
இங்கே ஸத்யம் ப்ருயாத் என்பது நேர்மை என்னும் குணநலனைக் குறிப்பிடுகிறது.

மானவஜாதி (மனித குலம்) நீதி நேர்மை, ஒழுக்கம் இன்றி வாழ முடியாது.

***ஸத்யம்:***

அநியாயம், பொய்மை, அதர்மம் இவற்றால் எல்லாம் சூழப்பட்டு இன்றைய உலகம் தத்தளிக்கின்றது. சரிந்து வரும் மனித உயர்குண நலன்களை மீட்டு வந்து நிலை நாட்ட இளைஞர்களாலும், யுவதிகளாலும் மட்டுமே முடியும். மனிதன் நேர்மையைப் போற்றி அதன்வழி நடக்கும் போது தான் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவை சமூதாயத்தில் நிலவும், நேர்மையை தன் வழி முறையாகக் கொள்ள வேண்டுமானால் மனிதன் சத்யத்தை ஒட்டி நடக்க வேண்டும். அதனால் தான் ஸத்யம் ப்ருயாத் எனக் கூறுகின்றார்கள். இது தான் மனிதனின் தலையாய கடமை.

இரண்டாவது, ப்ரியம் ப்ருயாத் (இனிமையாகப் பேசுங்கள்). இது தர்மம் என்னும் குணநலனைக் குறிக்கிறது. இதைத்தான் அடிப்படையாகக் கொண்டு பகவத் கீதை

*அநுத்வேக கரம் வாக்யம் ஸத்யம்*
*ப்ரிய ஹிதம் ச யத்*

சத்யத்தை இனிமையாகவும், முழுமையாகவும் பேசுங்கள். உங்களது பேச்சு மற்றவர்களது உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் தூண்டி விடுவதாக அமையக் கூடாது.

மூன்றாவது "ந ப்ருயாத் ஸத்யம் ப்ரியம்" என்பது மனதிற்கு ரசிக்காத உண்மையைப் பேசாதே! ஆன்மீக குண நலனைக் குறிப்பிடுகின்றது. ஆன்மீகப் பாதையில் செல்ல மனிதன் இந்தக் குணநலன்களைக் கைக் கொள்ள வேண்டும்.

***ஆத்ம தத்துவம்:***

நீங்கள் அனைவரும் ஒன்றே, எந்த தேசத்தைச் சேர்ந்தவராயினும் சரி, பல்புகள் வேறானாலும் அவற்றினுள் பாயும் மின்சாரம் ஒன்றே, அதைப் போலவே நாடுகள், உடல்கள், உணர்வுகள் இவையெல்லாம் வேறாயினும் "ஆத்ம தத்துவம்" மட்டும் அனைத்திலும் ஒன்றே. ஆகவே சாதி, மதம், தேசியம் ஆகியவற்றின் பெயரால் வேறுபாடுகளைத் துறந்து ஒற்றுமையின் செய்தியை எல்லோரிடத்தும் பரவச் செய்யுங்கள்.

"நாடுகள் பலவாயினும் மண் ஒன்றே
நகைகள் பலவானாலும் தங்கம் ஒன்றே
நட்சத்திரங்கள் பலவானாலும் வானம் ஒன்றே
பசுக்கள் பலவனாலும் பால் ஒன்றே
உடல்கள் பலவானாலும் மூச்சு ஒன்றே"

இவ்வாறு அனைத்து உயிரினங்களிலும் ஒற்றுமை கண்டு, நீங்கள் சேவை புரியும் போது தான் ஆனந்தம் அனுபவமாகின்றது.

நீங்கள் அன்பினாலேயே பிறந்தீர்கள், அன்பினாலேயே வளர்க்கப்பட்டிருக்கின்றீர்கள், அன்பினாலே ஐக்கியமாகின்றீர்கள்.

பஞ்சபூதங்கள் சுயநலமற்ற தன்மைக்கு முழுமையான வடிவங்கள். சூரியன் சிருஷ்டிக்கப்பட்ட உயிரினங்களுக்கு ஒளியும், வெப்பமும், வாழ்வும் தந்து போஷிக்கின்றது. மரங்கள் கரியமில வாயுவைத் தன்னுள்ளே ஏற்று மனித வாழ்க்கைக்கு தேவையான பிராண வாயுவைத் தருகின்றன.

தாய் போன்ற மண்ணோ, பொறுமைக்கும், தியாகத்திற்கும் எடுத்துக்காட்டாய் பாடம் போதிக்கின்றது. எந்தவிதமான பிரதியுபகாரமும் எதிர்பாராமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மனித குலத்திற்குத் தொண்டாற்றுகின்றன. அன்பிற்கு சிறந்த உதாரணம் வேறெதுவும் இல்லை.

இயற்கையில் பிறந்து, இயற்கையினாலேயே போற்றிப் பாதுகாக்கப்படும் மனிதன், இயற்கை வெளிப்படுத்தும் நற்குணங்களைத் தன்னகத்தே கொள்ளாமல், சுயநலமும், சுயலாபமும் கொண்ட வாழ்க்கை வாழ்வது மிகவும் அவமானகரமானது. இளைய தலைமுறையினர் சுயநலத்தையும், சுய இலாபத்தையும் ஒரு சிறிய துளிகூட மிச்சமில்லாமல் வேரோடு களைய வேண்டும்.

*கிராம சேவை:*

நீங்கள் கிராமங்களுக்குச் சென்று தேவையான வர்களுக்கு வேண்டிய சேவைகளைச் செய்யலாம். கிராமப்புற முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத் தலாம். அவ்வாறு செய்வதால் நீ ஏதோ பெரிய சேவை செய்து விட்டதாக நினைக்காதே. உண்மையில் சொன்னால், இதெல்லாம் உன்னுடைய கடமை. நீ சேவை செய்வதற்காகப் பிறந்தவன். ஆகவே பிறருக்குச் சேவை செய்வதில் உனது வாழ் நாளைச் செலவிடு. பதவிக்கும், அதிகாரத்திற்கும் ஏக்கப்படாதே. யார் சேவகனாக இல்லையோ அவனால் நாயகனாக (தலைவனாக) விளங்க முடியாது. உண்மையில் ஒரு உண்மையான சேவகனே உண்மையான நாயகன்.

*தியானமா?*

மக்கள் ஜபம், தியானம்,தவம் ஆகியவை யெல்லாம் தான் ஆன்மீகப் பயிற்சி முறை என்ற தவறான நோக்கத்தில் இருக்கின்றார்கள். தியானம் என்றால் என்ன என்பதே அறியாமல் தியானம் செய்கின்றனர். தாங்கள் கடவுளின் மேல் தியானம் செய்வதாகச் சொல்கின்றார்கள். ஆனால் கடவுள் யாரென்று அவர்களுக்கே தெரியாது! ராமா, கிருஸ்ணா, யேசு, அல்லா, ஜொராஸ்டிரா என முணு முணுத்து அவர்களைத் தியானிக்கின்றார்கள். ஆனால் அனைவருமே கடவுளின் வடிவங்கள் என்ற உண்மை யைப் புரிந்து கொள்ளவில்லை.

மனம் குவித்துக் காண்பதை தியானம் எனத் தவறாக எண்ணகிறார்கள். மனக்குவிப்பு என்பது புலன்கள் சம்பந்தப்பட்டது. ஆனால் தியானம் என்பது மன எல்லைகள் அனைத்தையும் கடந்தது. தியானம் என்பதை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ, இடத்துக்கோ குறுக்கி விடக்கூடாது. "அது ஒரு வாழ்க்கை முறை" அன்பெனும் உணர்வோடு செய்யப்படும் அனைத்தும் தியானமே!

சக மனிதர்களிடம் அன்பு செலுத்தாமல், மணிக்கணக்காக தியானத்திற்காக உட்காருவது என்பது தியானமே அல்ல.

உண்மையான ஆன்மீக சாதனை என்பது அனைவருடனும் கைகோர்த்து சமுதாயம் முழுமைக் குமாக உழைப்பதுதான். அதன் மூலம் சமுதாய முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

உள்நோக்கி தன் பார்வையைச் செலுத்தத் தயாராகும் வரை, இந்த வெளிப்புற மார்க்கமான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு செயலையும் ஆன்மீகப் பார்வையோடு அணுகுங்கள். சத்யம், பிரேமை இவற்றைப் பின்பற்றிச் செய்வதை விடச் சிறந்த ஆன்மீகப் பயிற்சி முறை வேறெதுவும் கிடையாது. சத்யமும், பிரேமையும் இறைவனின் பெயர்கள். ஆகவே இவை இரண்டுமின்றி ஆன்மீக சாதனைகளை மேற்கொள்வதில் அர்த்தமில்லை.

*தியாகம்:*

அன்பையும், தியாகத்தையும் உங்களது பிராணனாக, மூச்சுக்காற்றாக எண்ணுங்கள். உங்கள் புலன்களை அடக்குங்கள். எந்தவொரு ஆன்மீக சாதனை வெற்றி பெற வேண்டுமானாலும், புலனடக்கத்தின் மூலம் தெய்வமாக உயரமுடியும்.

கோபம் என்பது நாயின் இயல்பு, சலனப்பட்டுக் கொண்டிருப்பது குரங்கின் குணம். உனக்குக் கோபம் வரும் போது "நான் நாயல்ல, நான் மனிதன்" என்று நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

அதைப் போலவே மனம் அலைபாயும் போது உனக்குள் திரும்ப, திரும்பச் சொல்லிக் கொள். "நான் குரங்கல்ல, நான் மனிதன்" என்று. சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை,அஹிம்சை ஆகியவை தான் உண்மை யான மனித உயர் குண நலன்கள். இந்தக் குண நலன்களை மனிதனின் பஞ்சபிராணன்களுக்கு ஒப்பிடலாம். பிராண, அபான, வ்யான, உதான மற்றும் சமான இந்த குண நலன்கள் ஏதாவது ஒன்றை இழந்தாலும் கூட வாழ்க்கையே துறந்து விடுவதைப் போன்றது, ஒரு குணநலனும் மற்றொன்றின்றி வாழ இயலாது. இக் குணநலன்களை இழந்து விட்டதால் மனிதன் இன்று வாழும் பிணமாக இருக்கின்றான்.

இக் குணநலன்களின் மேல் நம்பிக்கை வையுங்கள். அவற்றைப் போற்றி வளர்த்து, அவற்றிட மிருந்து கிடைக்கும் ஆனந்தத்தை அனுபவியுங்கள்.

*எங்கே நம்பிக்கையிருக்கின்றதோ அங்கே அன்பிருக்கிறது*
*எங்கே அன்பிருக்கிறதோ அங்கே அமைதியிருக்கின்றது.*
*எங்கே அமைதியிருக்கின்றதோ அங்கே சத்யம் இருக்கின்றது.*
*எங்கே சத்யம் இருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார்.*
*எங்கே சத்யம் இருக்கிறதோ அங்கே ஆனந்தம் நிறைகிறது.*

*ஆனந்தம்:*

இன்று ஒவ்வொரு மனிதனும், ஆனந்தமாக இருக்கவே விரும்புகின்றான். அதற்கு நம்பிக்கை என்பது முதலில் அவசியம். ஆனந்தத்தை பெறுவது சுலபமல்ல. ஆனந்தம் என்பது பிரமன் நிலையாக, தூயதாக, நிரந்தரமானதாக, இரட்டை நிலையைக் கடந்ததாக இருக்கக்கூடியது. தீய குணங்களைக் கைவிடாமல் மனிதன் இந்த உயர்ந்த ஆனந்தத்தை அனுபவிக்க இயலாது. இதயம் என்பது இறைவனின் கருவறை. அதனைத் தீய எண்ணங்களாலும், தீய உணர்வுகளாலும் மாசுபடுத்தி விடாதீர்கள்.

எந்தவொரு தனிமனிதச் செயல்பாடுகளிலும் சுயமுயற்சி என்பது வெற்றியடைய மிகவும் அத்தியா வசியமானது. ஒரு சிறிய பூவைப் பறிப்பதானாலும் அன்றி மரத்தினின்று பழம் பறிக்கக்கூட, உடலின் பல அங்கங்களான கண்கள், கரங்கள், கால்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புத் தேவையாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் கொடுக்கப்பட்டிருப்பது நல்ல தர்மமான வழியில் செயலாற்றுவதற்கும், அதன் மூலம் சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாய் விளங்கு வதற்கும் மட்டுமே. அல்லாது வீணே உறங்குவதற்கும், உண்பதற்கும், பருகுவதற்கும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்குமா கடவுள் மனிதனுக்கு அத்தனை சக்திகளையும் பரிசாகக் கொடுத்திருக்கின்றார். ஆனால் மனிதனால் தன்னுள் இருக்கும் சக்தியைப் புரிந்து கொள்ளத் தான் இயலவில்லை.

***பிறர்நலன்:***

எந்தவொரு செயலைச் செய்வதானாலும், மற்றவருடைய நலனைக் கருத்திற் கொள்ளுங்கள். சுயநலமான வாழ்க்கை வாழாதீர்கள். அனைவருடைய நலனையும் கவனியுங்கள். தனிப்பட்ட பலன்களை மட்டும் எண்ணாதீர்கள். ஜபம், தியானம் போன்றவை சுயநல நோக்குடன் செய்யப்படுகின்றன. இதற்குப் பதில் இறைவன் பெயரைச் சொல்லியவாறு சமுதாய த்தில் இறங்கிச் சேவை செய்யுங்கள். இதுவே உண்மையான சாதனையாக அமையும். நீங்கள் யாருக்குச் சேவை செய்தாலும் இறைவனுக்குச் செய்வ தாக எண்ணிக் கொண்டே செய்யுங்கள்.

இதயத்தில் தயை நிரம்பியிருந்ததால், ஒரு உயிரற்ற சவம், ஒரு நோயாளி வயது முதிர்ந்த ஒரு மனிதன் ஆகியவர்களைப் பார்த்ததுமே புத்தருக்கு ஞானம் புலப்பட்டு, அவரால் நிர்வாண நிலையை அடைய முடிந்தது. நீங்களும் எத்தனையோ சவங்களையும், வயது முதிர்ந்தோரையும், நோயாளி களையும் பார்க்கின்றீர்கள். ஆனால் உங்களிடம் அத்தகையை மனமாற்றம் ஏற்படாதது வருந்தத்தக்கது.

துரதிஷ்டவசமாக உங்கள் இதயங்கள் கடினமான பாறைகளாக மாறிவிட்டிருக்கின்றன. அடுத்தவரின் துயரம் உங்கள் இதயங்களைக் காயப்படுத்துவதில்லை. நிர்வாணம் அல்லது பந்த விடுதலை அடைய வேண்டுமென்றால், அடுத்தவரது துயரத்துடன். தன்னையும் இணைத்துப் பார்த்து, அவர்களது துயர் களைய முயற்சி மேற்கொள்ளப் படவேண்டும்.

***மனம்:***

துணைவேந்தர் தனது பேச்சில் குறிப்பிட்டது போல உடம்பை வளைத்து சேவை செய்யுங்கள். புலன்களை சரியான பாதையில் செலுத்தி கட்டுப் பாட்டுக்குள் வையுங்கள், மனதை செயலற்ற தாக்குங்கள்.

புலன்கள் கட்டுப்படுத்தப்பட்டால் மனம் என்பது இல்லாமலேயே போய் விடும். நல்ல எண்ணங்களைப் போற்றி வளர்க்கையில் மனத்தை அழித்துச் சாம்பலாக்கி விடலாம். மனிதனின் எண்ணங்கள் மாறுபாடாக ஒழுங்கு கட்டுப்பாடில்லாமல் போவதால் இன்று உலகமே தலைகீழாகப் போய்க் கொண்டிருக்கின்றது.

மனிதா! உனக்குள்ளேயே கேட்டு விசாரித்து தெரிந்து கொள். காலையிலிருந்து மாலை வரை இறைவனை மறந்து விட்டு, உயிர் வாழ்வதற்காக உழைப்பதில் உன் கல்வியையும், சக்தியையும் வீணடித்துக் கொண்டிருக்கின்றாயே இதில் என்ன சுகம் கண்டாய்.

நீங்கள் எது செய்தாலும் அது கடவுளின் பணி உதாரணமாக மூச்சு விடுவதும்கூட உள் மூச்சு, வெளி மூச்சு ஒரு ஆன்மீக சாதனை தான். மூச்சை உள்ளிளுக்கும் போது அது "ஸோ" என்ற ஒலியுடனும் மூச்சை வெளியிடும் போது ஹம் என்ற ஒலியுடனும் வெளிவருகின்றது. ஆகவே "ஸோஹம்" என்பது I am That என்ற பொருள் தருகின்றது. "ஸோ" என்பது தெய்வத்தையும், "ஹம்" என்பது அகங்காரத்தையும் குறிக்கின்றது. ஆகவே "ஸோஹம்" என்பது நல்லதை உள்ளிழுத்து அல்லதை வெளித்தள்ள வேண்டும் என்பதை பாடமாகக் கற்பிக்கின்றது. இந்த உள்மூச்சும், வெளிமூச்சும் ஒரு நாளில் 21600 முறை தொடர்ந்து நடைபெறுகின்றது. அதாவது உன்னுள் ஒரு குரல், ஒரு நாளைக்கு 21600 முறை உன்னைக் "கடவுள் நீ" தான் என உணர்த்துகின்றது. துரதிஷ்டவசமாக நீதான் அந்த செய்தியை ஏற்கத் தயாராகவில்லை. இந்த உண்மை யைப் புரிந்து கொள்ளத்தான் இறைவன் உனக்கு இந்த உடலைப் பரிசாகத் தந்துள்ளார். கடவுளை உன் பூஜை அறையுடன் நிறுத்தி விடாதே. கடவுள் உனது உயிர் மூச்சு.

***சமுதாயம்:***

கரங்கள், கண்கள், காதுகள், மூக்கு போன்றவை தேகத்தின் அங்கங்கள். சமுதாயம் இந்த பிரகிருதியின் அங்கம். பிரகிருதி கடவுளின் அங்கம். இதன் மூலம் தனிப்பட்ட மனிதனுக்கும், இறைவனு க்கும் இடையே உள்ள அதியுயர்ந்த உறவைப் பற்றி நீ புரிந்து கொள்ளலாம்.

உயிரற்ற ஜடங்களான தொலைபேசி போன்ற வைக்கே இணைப்புக்கள் ஏற்படுத்த முடியுமென்றால், மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையே தொடர்பு இருக்க வேண்டாமா? முதலில் சொன்ன இணைப் புக்கள் எல்லாம் செயற்கை.

ஜெய் சாயிராம்

தொகுப்பு:
சுலோசனா உமாபதி சிவம்
புட்டபர்த்தி

***நான் உங்கள் பிரச்சினை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரி, எவ்வளவு கொடூரமானதாக இருந்தாலும் சரி, உங்களது ஏமாற்றங்கள் எவ்வளவு பாடுபடுத்தி இருந்தாலும் சரி, இவைகள் எல்லாவற்றிலிருந்தும் நான் உங்களைக் காப்பாற்றுவேன். உங்களை நான் தள்ளிவிட மாட்டேன். உங்களுக்கெல்லாம் நான் சொந்தத் தாயார் போல இருப்பேன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தனிமையில் நம்மைப் பற்றி சிந்திப்போமா? எனக்கு நேரமில்லை......

ஏழு கடல் மணலை எண்ணினாலும் எண்ணலாம் எனது பிறப்பின் எண்ணிக்கையை எண்ண முடியாது. "இது ஒரு சிந்தனை. "புல்லாகிப் பூடாய், புழுவாய்,மரமாகி, பலவகை மிருகமாகி, பறவையாய், பாம்பாகி, கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாகி, வல்லரசுரராகி, முனிவராய், தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" இது ஒரு ஆத்மாவின் ஏக்கம், களைப்பு, உயிர்க்களைப்பு.

நாமும் பிறந்திருக்கிறோம், பிள்ளைகளாய் இருந்து, திருமணம் ஆகி பிள்ளைகள் பெற்று அவர்களுக்கு கல்வி, உணவு போன்ற அடிப்படை வசதிகளைக் கொடுத்து வளர்க்கிறோம். அவர்களை ஒரு அந்தஸ்தில் வைக்கப் பாடுபடுகிறோம். பின்னர் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறோம். அது தானா எமது வாழ்க்கை வட்டம்? இதற்குத் தானா பிறந்தோம்? சிந்திக்கிறோமில்லையே!
ஏனெனில் எனக்கு நேரமில்லை.......

எமது வாழ்நாள் சராசரியாக 75 வருடங்கள் என்று ஒரு கணக்குக்காக வைத்துக் கொள்வோம். ஒரு மணித்தியாலத்தில் 60 நிமிடங்கள் ஒரு நாளில் 60x24=1440 நிமிடங்கள். ஒரு வருடத்தில் 1440x365=525600 நிமிடங்கள், 75 வருடத்தில் 525600x75=39420000 நிமிடங்கள் எமக்கு இறைவன் தந்துள்ளான். இவ்வளவு நேரத்திலும் இறைவனைப் பற்றியோ அல்லது நம்மைப் பற்றியோ சிந்திக்க எவ்வளவு நேரம் ஒதுக்குகிறோம்? பிறரைப் பற்றிப் பேசவே எமக்கு நேரம் போதவில்லை. என்னைப் பற்றி சிந்திக்க....
எனக்கு நேரமில்லை.......

தன்னைப் பற்றிச் சிந்தித்த ஒரு கள்வன் ஒரு பெரும் முனிவரானான். அந்தக் கதையை பார்த்தோமானால், ஒரு அடர்ந்த காட்டிலே இரத்னாகரன் என்ற ஒரு கள்வன் வசித்து வந்தான். காட்டுப் பாதையாற் செல்வோர் கொண்டு செல்லும் பொருட்களைப் பறிப்பதற்காக, வழிப் போக்கர்களை பிடித்து கொடுமை செய்து பணம் சம்பாதித்தான். கொலை செய்யவும் தயங்கமாட்டான். இப்படிப்பட்ட கள்வன் தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் மீதும் மிகுந்த பாசம் உடையவன். அவர்களை அன்பாக போற்றி வளர்த்து வந்தான்.

ஒரு நாள் காட்டுப் பாதையூடாக சப்தரிஷிகள் என அழைக்கப்படும் ஏழு முனிவர்கள் வந்து கொண்டிருந்தனர். இரத்தினாகரனுக்குப் பெரும் கொண்டாட்டம். அவர்களுக்கு அன்பளிப்பாக கொடுத்த விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளையடிக்கலாம் என்று எண்ணி அவர்களைப் பின் தொடர்ந்து வந்தான். தனது எல்லை வந்தவுடன் அவர்களை வழிமறித்து, எல்லாப் பொருட்களையும் நிலத்தில் வைக்கும்படி பயங்கர குரலில் உத்தரவிட்டான். முனிவர்களுள் ஒருவர் இவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு "அப்பா, ஏன் இந்தக் கொடூரமான செயலைச் செய்கிறாய் ? இது எவ்வளவு பாவமான செயல் என்பதை நீ அறிய வில்லையா? என்று கேட்டனர். இந்தக் கேள்வி அந்தக் கள்வனையே ஒரு கணம் தன்னைப் பற்றிச் சிந்திக்க வைத்தது. ஆனால் அவன் மேலும் சிந்திக்காமல் தன்னைப் பற்றிக் கூறினான். "எனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் ஆகியோரைக் காப்பாற்ற பொருள் தேடத்தானே வேண்டும். அவர்களுக் காகவே இது பாவமான தொழில் என்று தெரிந்தும் செய்கிறேன்" என்றான். அப்போது முனிவர் "நீ சம்பாதிக்கும் பொருளால் பயனடையும் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் ஆகியோர் நீ செய்யும் இக் கொடிய பாவத்திலும் பங்கேற்பார்களா?" என்று கேட்டார். இக் கேள்வி அவனை இரண்டாம் முறையும் சிந்திக்க வைத்தது. "இதிலென்ன சந்தேகம்? எனது பொருளிற் பங்கேற்கும் அவர்கள், நான் செய்யும் பாவத்திலும் பங்கேற்கத் தானே வேண்டும்! ஆகவே எனது பாவத்தில் அவர்களுக்கும் பங்குண்டு" என்றான். அப்போது முனிவர் சிரித்து விட்டு "அப்பா, நீ போய் அவர்களிடமே கேட்டு வா" அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்ளச் சம்மதமா? என அறிந்து வா என்றார். அப்போதும் அவனது திருட்டு மூளை வேலை செய்தது. ஓகோ! சுவாமியார் தப்பி ஓடுவதற்காகத் தான் இப்படி என்னை அனுப்புகிறார் என்று நினைத்துக் கொண்டு "நீங்கள் தப்பி ஓடிவிடலாம் என்று எண்ணி விடாதீர்கள். நான் வரும் வரை இந்த மரத்தடியிலேயே நில்லுங்கள்" என்று கூறி அவர்களை அருகிலிருந்த மரா மரத்தில் கட்டி விட்டுத் தனது வீட்டை நோக்கி ஓடினான். அங்கு சென்று தனது தந்தையைக் கேட்டான் "அப்பா நான் செய்வது பாவமான தொழில் என்று உங்களுக்கு தெரியும் தானே? இத் தொழிலால் வரும் பொருளில் தானே உங்களைக் காப்பாற்றி வருகிறேன். இந்த தொழிலால் வரும் பாவத்தில் நீங்கள் பங்கேற்கத் தானே வேண்டும்" என்றான். அதற்கு தகப்பன் "மகனே! நான் உன்னை வளர்த்து ஆளாக்கியவன், உன் தந்தை. வயதான காலத்தில் காப்பாற்ற வேண்டியது உனது கடமை. நீ எப்படிச் சம்பாதிக்கிறாய் என்பது எனக்கு அக்கறை இல்லை. நீ உன் கடமையைச் செய்கிறாய், அதனால் ஏற்படக்கூடிய பாவத்தில் நான் எப்படி பங்கேற்க முடியும்? அதில் நான் பங்கேற்க முடியாது" என்று கூறிவிட்டார். அடுத்து இரத்னாகரன் தன் தாயிடம் இதே கேள்விகளைக் கேட்டான். தாய் கூறினாள் " நான் உன் தாய், உன்னைப் பெற்று பாலூட்டி வளர்த்தவள். வயதான காலத்தில் எங்களைப் பாராமரித்து நீ பெற்ற கடனை தீர்த்துக் கொள்கிறாய், இதற்காக நான் எப்படி உன் பாவத்தில் பங்கேற்க முடியும்?" என்று கேட்டாள். தன் மனைவியிடம் ஓடினான். இதே கேள்வியைக் கேட்டான். அவள் கூறினாள் "என்னைத் தொட்டு தாலி கட்டும் போது என்னை வாழ் நாள் முழுவதும் வைத்துக் காப்பாற்றுவேன் என்று அக்கினி முன்பாக சத்தியம் செய்தீர்கள். அதன்படி என்னைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை. நான் உங்கள் பாவத்தில் பங்கேற்க முடியாது". என்றாள். பிள்ளைகளிடமும் இதே கேள்வியைக் கேட்டான். "பிள்ளைகளைப் பாதுகாப்பது பெற்றோரின் கடமை. எம்மைப் பாதுகாத்தால் வயதான காலத்தில் உங்களைப் பாதுகாப்பது எமது கடமையாகிறது. இதற்காக பாவத்தில் பங்கு கொள்ள முடியாது." என்று கூறிவிட்டனர். இரத்தினாகரனுக்கு பூமியே சுழல்வது போலிருந்தது. நிற்கக் கூட முடியவில்லை. நிலத்தில் இருந்து விட்டான். மூன்றாம் தடவை தன்னைப் பற்றி சிந்தித்தான். அன்புக்குரிய பெற்றோர், மனைவி, பிள்ளைகள் இவர்களுக்காகத் தானே நான் இவ்வளவு காலமும் ஆபத்தும் பாவமும் நிறைந்த இந்தத் தொழிலை செய்து காப்பாற்றி வந்தேன். என்னைப் பற்றி சிந்திக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைப் பற்றித் தானே சிந்தித்து வந்தேன். என்னை இப்படிக் கை விட்டு விட்டார்களே! இவர்களைப் பற்றி இனி நான் ஏன் சிந்திக்க வேண்டும்? பற்று, பாசம், அபிமானம் எல்லாம் பொய் என்று தன் உண்மை நிலையை உணர்ந்தான். எழுந்து முனிவர்களை நோக்கி ஓடினான். அவர்களை கட்டிலிருந்து விடுவித்தான். அவர்களின் பாதங்களில் வீழ்ந்தான். "முனிவர்களே! எனது கண்களைத் திறந்து விட்டீர்கள். என்னை பற்றி சிந்திக்காமல் எனது மனைவி, எனது பிள்ளை, எனது பெற்றோர் என்று இவர்களைப் பற்றி சிந்தித்து இவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுக்கத்தானே நான் கொலைகளைச் செய்தேன், களவெடுத்தேன், கொள்ளையடித்தேன். அவர்களுக்காகவே எனது வாழ் நாளை அர்ப்பணித்தேன். ஆனால் எவருமே எனது பாவத்தில் பங்கேற்க முன்வரவில்லை. நான் செய்யும் பாவத்திற்கு நான்தான் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று கூறிவிட்டனரே. நான் எப்படி இந்த படுபாதாளத்திலிருந்து தப்புவேன். நம்பி மோசம் போனேன். எனது வாழ்நாளில் எஞ்சியுள்ள காலத்தை யாவது சரியான பாதையில் செல்ல வழிகாட்டுங்கள். என்றுகூறி முனிவர்களின் கால்களைப் பிடித்துக் கொண்டான். அவர்களும் அதனை ஏற்று, தங்களைக் கட்டி வைத்த அதே மரா மரத்தை சுட்டிக்காட்டி அந்த மரத்தடியில் அமர்ந்து தாங்கள் சொல்லித் தரும் நாமத்தை தொடர்ந்து இடைவிடாது சொல்லும்படியும் சில காலத்தின் பின் தாங்கள் வந்து சந்திப்பதாகவும் கூறி அவனது காதில் "மரா" என்ற நாமத்தை உபதேசித்தனர். அவன் வேறு சிந்தனையின்றி அந்த நாமத்தையே ஒரு மனதாக இடைவிடாது உச்சரித்தான். "மரா.. மரா.. மரா.. ராம.. ராம... ராம " நிமிடங்கள் மணிகளாகி மணிகள் நாட்களாகி நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங் களாகி சில வருடங்களின் பின் அந்த சப்தரிஷிகள் அப் பாதையால் வந்து கொண்டிருந்தனர். ஒரு பெரும் கறையான் புற்று. அந்தப் புற்றிலிருந்து ராம.. ராம.. ராம.. என்ற நாமம் வந்து கொண்டிருந்தது. சப்தரிஷிகளுக்குப் பெரும் மகிழ்ச்சி. "வால்மீகி" வெளியே வா! என்றனர். புற்றுக்களைப் பிளந்து கொண்டு இரத்தினாகரன் வால்மீகி முனிவராக வெளியே வந்தான். இந்த வால்மீகி முனிவர் தான் இராமாயண காப்பியம் மூலம் இன்றும் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஒரு கள்வன் தன்னைப் பற்றி சிந்தித்தான்: முனிவரானான், நாங்கள் நம்மைப் பற்றி ஒரு கணமாவது சிந்திக்கிறோமா? இல்லையே! ஏன்? எமக்குத்தான் நேரமில்லை...

எங்கள் கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு வரைப் பற்றியும் அவருடைய வேலை, சமயம், சாதி, வருமானம், குணங்கள், தனிப்பட்ட இயல்புகள் முதலிய எல்லா விடுப்புக்களையும் அலசி ஆராய்ந்து வைத்திருக்கிறோம். இதனால் பல மனஸ்தாபங்கள், போட்டிகள், பொறாமைகள் ஆகியவற்றை வளர்த்து வைத்திருக் கிறோம். "நான் யார்?" நான் எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்கிறேன்? என்ற இந்த 3 அடிப்படைக் கேள்விகளுக் காவது விடை கண்டோமா? நாங்கள் ஒரு புதிய இடத்திற்குச் சென்றால் அவர்கள் முதலில் கேட்கும் கேள்விகள் நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? ஏன் வந்தீர்கள்? என்பதே. இதே கேள்விகளை எமக்கு நாமே கேட்டு விடை கண்டு விட்டால் அது தான் ஆன்மீகம். இந்த மிகச் சுலபமான கேள்விகளுக்குக்கூட விடை தேட முடியாமல் வாழ்க்கையை முடிக்க இருக்கிறோம். அடுத்த பிறவியை எடுக்க ஆயத்தமாகி செல்கிறோம். ஏனெனில் இந்தப் பிறப்பில் எனக்கு நேரமில்லை.....

உலகத்தில் உள்ள அதி நவீனமான தொழிற் சாலைகளிலும் பார்க்க மிகச் சிறந்தததாகவும் ஒத்திசை வாக இயங்கக் கூடியதுமான இந்த உடம்பை எமக்கு இறைவன் தந்திருக்கின்றான். இந்த உடம்பினுள் எத்தனை இயக்கங்கள். நாம் வாயில் இடும் உணவு சமிபாடடைந்து அதிலுள்ள சத்துக்கள் இரத்தத்தில் கலந்து அழுக்கு வெளியேறுகிறது. ஒரு நாளில் 21600 தடவை மூச்சுக்காற்று உள் சென்று வெளியேறுகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை இருதயமும் இடை விடாமல் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு உள் உறுப்பின் செயற்பாட்டை உற்று நோக்கினால் எவ்வளவு அதிசயமான வேலை எமக்குள்ளே ஒன்றுக் கொன்று இசைந்து நடக்கிறது. இந்த அற்புதமான உடம்பை கடவுள் ஏன் தந்தார்? மதுவையும், இறந்த மிருகங்கள், பறவைகளின் மாமிசத்தையும் இதற்குள் போட்டு எம் வயிற்றை ஒரு புதை குழியாக்கவா? இந்த அருமையான கிடைத்தற்கரிய உடம்பை ஒரு கருவிளாகப் பாவித்து நாம் எமக்குள் இருக்கும் இறைவனைத் தேட வேண்டும். இதுதான் நாம் இங்கு வந்ததன் நோக்கம். இதைச் செய்கிறோமா? எனக்கு நேரமில்லை........

கடவுளை வணங்குவதை ஒரு பகுதி நேர வேலையாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கடவுளிடம் முழு நேர வேலைக்குரிய ஊதியத்தைக் கேட்கிறோம். பகுதி நேர வேலைக்கு பகுதி நேர ஊதியம் தான் கிடைக்கும். மேலும் எம்மில் சிலர் இளமைக் காலத்திலேயே ஆன்மீகத்தில் ஈடுபடாமல், வேலையிலி ருந்து ஓய்வு பெற்றபின் ஈடுபடலாம் என்று சாட்டுகள் கூறுகின்றனர். ஆனால் ஓய்வு பெற்றபின் நிமிர்ந்து உட்கார முடியாது, கால்களை மடிக்க முடியாது. மனத்தை ஒருமுகப் படுத்தும் பழக்கம் இராது. ஆகவே பிற் காலத்தில் ஆன்மீகத்தில் ஈடுபடலாம் என்பது வெறும் பேச்சுத்தான். ஆன்மீகம் என்பது (SPRITUALITY NOT A RETIRES PROFESSIONS) ஓய்வு பெற்றபின் பார்க்கும் தொழிலல்ல. இந்த ஆன்மீக உண்மைகளைப் போதித்து எங்களைக் கரையேற்ற வேண்டும். என்ற கருணையினால் தானே உலகில் மகான்கள் அவதாரங்கள் தோன்றி வழி காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இராமகிருஸ்ணரின் போதனைகள் மூலம் இராமகிருஸ்ண மடங்களும், யோகர் சுவாமிகளின் போதனையின்படி சிவதொண்டன் நிலையங்களும் சத்திய சாயியின் போதனைப்படி சாயி நிலையங்களும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ ஆன்மீக நிலையங்கள் செயற்படு கின்றன. ஏதாவது ஒன்றிலாவது இணைந்து எம்மைப் பற்றி சிந்திக்கிறோமா? எமக்கு நேரமில்லை....

குடும்பத்திற்காக ஓடி ஓடி உழைக்கிறோம். பணம் சம்பாதிக்கிறோம். உலக இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கிறோம். எமது வாழ்நாள் மெழுகுதிரி போல குறுகி வருகிறது. ஒவ்வொரு நாள் முடியும் போதும் எமது மரண நாளை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கிறோம். எமது வாழ்க்கையின் இறுதிநாள் ஒரு நாளைக்கு வந்தே தீரும். அப்போது கடவுளுக்கு நேர்த்திக் கடன் வைக்கிறோம். கடவுளுக்கு அர்ச்சனைகள் செய்கிறோம். கடவுளை உடனே வந்து மரண உபாதைகளை தீர்க்கும்படி அழைக்கிறோம். எமக்குத் தெரிந்த பிரார்த்த னைகளைச் செய்கிறோம். ஆனால் கடவுள் வரமாட்டார். இவ்வளவு நாளும் உதாசீனம் செய்து விட்டு கடைசி நேரத்தில் அழைத்தால் அவன் வருவானா? மாட்டான் ஏனெனில்
கடவுளுக்கு நேரமில்லை............

ஜெய்சாயிராம்

எஸ்.ஆர்.சரவணபவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்புடன் செயலாற்றுங்கள்

*சத்திய சாயி பாடசாலையின் பண்புவிருத்தி விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேசிய கல்வி இணைப்பாளர் ஸ்ரீமதி. சாந்தா மகேந்திரன் அவர்கள் ஆற்றிய உரை*

மகாபாரதத்தில் ஒரு சம்பவம். ஒரு முறை அர்ஜுனன் வெளியே போய் வந்து அரசன் தர்மரிடம் கூறினார்: "ஒரு விவசாயி வயலில் வேலை செய்து விட்டு ஆயுதங்களை இரவு அங்கே விட்டு விட்டு மறுநாள் போய் பார்த்த போது காணவில்லை என்று கூறினான்" என்றார். தருமர் ஆச்சரியத்துடன் அர்ஜுனனைப் பார்த்தார்.

இன்னுமொரு நாள் வீதியில் போய் உலாவும் போது, சில பெண்கள் தங்கள் வீட்டுக் கதவுகளைப் பூட்டிவிட்டு வெளியே சென்றனர். விசாரித்த போது, "ஸ்வாமி வேலை பார்ப்பதற்கு வீட்டைப் பூட்டாமல் சென்றால் எங்கள் உடமைகள் யாவும் தொலைந்து விடும்" என்றார்கள். அர்ஜுனனுக்கு இது திடுக்கிடும் தகவலாக இருந்தது. பாண்டவர் இராச்சியத்தில் எந்தவொரு வீடும் பூட்டியது கிடையாது. யாவரும் ஒரு கவலையுமின்றிச் சுதந்திரமாக நடமாடினர்.

ஒருநாள் அரசர் வெளிவீதி செல்லும் போது ஒரு காட்சி. ஒரு பெண்ணும் ஆணும் பகிரங்கமாகப் பாதையின் நடுவில் நின்று உரையாடுவதைக் கண்டார். அப்படி ஒரு போதும் அவர்கள் இராச்சியத்தில் நடைபெற்றது கிடையாது.

தருமர் ஆச்சரியத்தில் இடிந்து போனார். பின்பு அவருக்குப் புரிந்தது. என்ன! கலியுகம் தொடங்கி விட்டதா? இவ்வுலக வாழ்வை நீத்து யாவரும் பரலோகத்தை அடைய வேண்டு மென்று அன்றே தீர்மானித்தனர். கலாச்சாரம் இப்படி நலிவுற்று விட்டதா என்று கவலைப்பட்டனர்.

இப்போது கலியுகத்தின் அரைவாசிப்பகுதி வரை சென்று விட்டது. கலியுக அவதாரர்கள் யாவரும் மனிதனை நல்வழிப்படுத்தவே அவதரித்தனர். பகவான் பலமுறை கூறியுள்ளார்: திரேதா யுகத்திலும் துவாபர யுகத்திலும் தீயவர்கள் வேறு நல்லவர்கள் வேறாக இருந்தனர். எனவே அந்த அவதார புருஷர்களுக்கு அவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றுவது பெருங்கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால் கலி யுகத்தில் நல்லவர்களும் தீயவர்களும் கலந்து இருக்கிறார்கள். ஒருவரை எடுத்தால், அவர் காலையில் நல்லவராகவும், மாலையில் தீயவராகவும் உள்ளார். இவர்களை அழிப்பதானால் உலக மக்கள் யாவரையும் அழிக்க வேண்டும். இதனால் தான் பகவான் பாபா மக்களை நல்வழிப்படுத்தி உயர் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக ஒப்புயர்வற்ற கல்வி முறையை எமக்கு அளித்துள்ளார். அவர் தந்த ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் ஒருவரது உடல்,மனம், உணர்ச்சிகள், அறிவு, ஆன்மா யாவற்றையும் மலரச் செய்து முழு மனிதனாக பரிணமிக்கச் செய்வதாகும். பகவான் அடிக்கடி கூறும் ஒரு வாக்கியம்

Bend the Body உடலை வளைத்து
Mend the Senses புலனை நெறிப்படுத்து
End the Mind மனதினை அழித்து விடு

எமது மாணவர்கள் இங்கு விளையாட்டுகளில் ஈடுபடும் போது இந்த சொற்தொடர் எவ்வாறு பொருத்த மாகின்றது என்பதனை உணரலாம். இங்கு கற்கும் மேம்பாடுகளை எந்த இடத்திலும் கற்க முடியாது. உடல் ஆலயம் என்று பல பெரியோர்கள் கூறியுள்ளனர். எதற்காக? இறைவன் குடியிருப்பதால் எமது சக்திகள் அனைத்தையும் ஒன்று குவித்து விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதால் நாம் எமது உடலை இறைவன் குடியிருக்கும் ஆலயத்தை நன்றாக வைத்திருப்பதற்கான மனத்திருப்தியுடன் செயல் படுகிறோம். உடலின் நன்மைக்காக மட்டுமல்லாது. ஒற்றுமை. கூட்டுணர்வு, கட்டுப்பாடு, விடாமுயற்சி போன்ற மேம்பாடுகளையும் கற்க முடியும். இவை இரண்டாவது படியான புலன்களை வழிப்படுத்த உதவுகின்றன. எவ்வளவு வெய்யிலிலும் மனத்திடத் துடன் பயிற்சி பெற வழிவகுக்கின்றன. கடைசிப் படியான மனதின் எல்லை ஒருமுகக் குவிப்பில் மனம் அர்ப்பணிப்புடன் ஒரே நோக்கத்திற்காகச் செயல் படுவதில் நிறைவு காண்கிறது. பல வருடங்களுக்கு முன்பு பகவான் முன்னிலையில் விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்த வேளையில் ஒரு சிறுமி நடனமாடிக் கொண்டிருந்த மேடை தீப்பிடித்து விட்டது. பார்வையாளர்கள் பயந்து நடுங்கி அல்லோலகல் லோலப்பட்டுக் கொண்டிருந்த போதும் அந்தச் சிறுமி மட்டும் பகவானை நோக்கியே தனது கவனத்தை ஒரு மனக்குவிப்புடன் செலுத்தி தனது நடனத்தை ஆடிக் கொண்டிருந்தாள். பகவான் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை குழந்தைகளின் பயத்தை அகற்றி விடுகிறது. பகவானுக்காக என்ற அர்ப்பணிப்புடன் செயலாற்றும் போது எந்தச் சூழ்நிலையும் அவர்களைப் பாதிப்பதில்லை.

சத்திய சாயி மனித மேம்பாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பண்பு விருத்திதான் முக்கிய நோக்கம். ஏனைய இடங்களில் நடைபெறுவதைப் போன்று போட்டி, பொறாமை, கழுத்தறுத்தல், காலை வாரிவிடல் போன்ற எதிர்மறைச் செயல்களுக்கு இடமில்லை.

மனித மேம்பாட்டு கல்வித் திட்டம் குழந்தையின் ஆளுமையில் ஐந்து அம்சங்களின் வளர்ச்சியைப் பற்றியது. இது நன்கிணைந்த பரிபூரண வளர்ச்சியாகும். இதன் மூலம் கற்கும் மாணவர்கள் வருங்காலத்தில் எத்துறையிலும் தலைமைத்துவத்தை ஏற்று பண்புள்ள மக்களாக உயர்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஜெய் சாயிராம்

திருமதி சாந்தா மகேந்திரன்
தேசிய கல்வி இணைப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# இலங்கை யுத்தகளத்தில் இராமரால் உபதேசிக்கப்பட்ட விபூஷண கீதை

எல்லோரும் ஸ்ரீமத் பகவத் கீதை பற்றி அறிந்துள்ளோம். இன்னும் சிலர் பல்வேறு கீதைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அஷ்டவக்கிரகர் கீதை, ஹம்ச கீதை, அவதூத கீதை முதலியன. அநேகமாக எல்லா கீதைகளும் சமஸ்கிருத பாஷையில் உள்ளது. ஆனால் "விபூஷண கீதை" 'அவாதி' பாஷையில் உள்ளது. அவாதி என்பது ஹிந்தி மொழியின் ஒரு பிரிவு. இது இராமர் அவதரித்த அயோத்தியில் பேசப்பட்ட மொழி. விபூஷண கீதை கோஸ் சுவாமி துளசிதாசர் எழுதிய துளசி இராமாயணத்தில் ஆறாவது காண்டமாகிய லங்கா காண்டத்தில் உள்ளது. துளசி இராமாயாணத்தில், இராம கீதை, சிவ கீதை, லஷ்மண கீதை என்று பல கீதைகள் உள்ளன. "கீதை" என்பது சமஸ்கிருத மொழியில் பாடல்கள் என்று பொருள்படும்.

பகவத் கீதைக்கும் விபூஷண கீதைக்குமிடையே ஒரு ஒற்றுமை உள்ளது. இரண்டுக்கும் போர்க்கள பின்னணி உள்ளது. குருஷேத்திரத்தில் அர்ச்சுணனுக்கு உபதேசிக்கப்பட்டது. பகவத் கீதை. இலங்கை யுத்தகளத்தில் இராமரால் விபூஷணனுக்கு உபதேசிக்கப்பட்டது வீபூஷண கீதை. ஆனால் பிரச்சனைகளும், சூழ்நிலைகளும் வேறானவை. குருஷேத்திரத்தில் அர்ச்சுணனின் மிகப் பெரிய கௌரவப்படைகளால் சூழப்பட்டு சரி எது? பிழை எது? என்று தீர்மானிக்க முடியாமல் மதி மயங்கி நின்ற வேளையில் ஸ்ரீகிருஸ்ணரால் உபதேசிக்கப்பட்டது பகவத்கீதை. ஆனால் விபூஷண கீதை உபதேசிக்கப்பட்ட நிலமை வேறு.

ஸ்ரீராமர் போர்க்களத்தின் ஒரு புறத்திலும், மறுபுறத்தில் விபூஷணனின் சகோதரரின் வீரர்கள் நிற்கிறார்கள். இராவணன் அதர்மத்தின் உருவமாக நிற்கிறான். தனது தாய் மாமன் மாலியவான், மனைவி மண்டோதரியுடன் விபூஷணனின் அறிவுரைகளைக் கேளாததினால் விபூஷணன் தர்ம வழியில் நிற்கும் இராமர் பக்கம் சேர்ந்த நிலையில் இந்த போதனை நடைபெறுகிறது. இராமாயாண காலத்தில் நடைபெற்ற இந்தப் போதனை இராமாயண காலத்தை விட தற்காலத்தில் மகிவும் பொருத்தப்பாடு உடையதாக உள்ளது. நன்மைக்கும், தீமைக்கும், பெருந்தன்மைக்கும், கீழான போக்கிற்கும், தர்மத்திற்கும், அதர்மத்திற்குமிடையே நடைபெற்று வரும் போராட்டம் முடிவடையவில்லை. ஒவ்வொரு தனிமனிதனின் மனத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற்று வருகிறது.

இராம இராவண யுத்தம் முடியுறும் தறுவாயில் இராவணன் தனது பெரிய போர் வீரர்களான கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோர்களை இழந்த பின் தானே போர்க் களத்திற்கு செல்ல வேண்டிய நிலை. ஒருவர் மற்றவரை முடிக்க வேண்டிய தீர்மானத்துடன் யுத்த களத்திற்கு வருகிறார்கள். நன்கு பாதுகாக்கப்பட்ட கவசங்கள் அணிந்து, விசேடமான யுத்த ரதத்தில் எல்லாவித ஆயுதங்களுடனும் கம்பீரமாக வருகிறான் இராவணன். அங்கு இராமர் எவ்வித கவசங்களும் அணியாமல் காலிற்குக்கூட எதுவும் அணியாமல் நிலத்தில் நின்றார். அம்பும் வில்லும் மட்டும் ஏந்தியபடி இராமர் நிற்கிறார். இந்தக் காட்சியை விபூஷணன் பார்த்ததும் அவருடைய நலனிலும் பாதுகாப்பிலும் கவலைப்பட்டு இராமரிடம் பின்வருமாறு கூறினான். "ஓ பிரபுவே! பலவகையான ஆயுதங்களை ஏந்தியபடி, கோபமும் பழிவாங்கும் எண்ணத்துடனும் தேரில் வந்திருக்கும் இந்த இராவணனை இந்தக் கோலத்தில் நீங்கள் எப்படி வெல்ல முடியும்?" என்று இராமரைக் கேட்டான் விபூஷணன். இந்த சந்தேகத்தை அடிப்படையாக வைத்து ஒரு அருமையான சொற்பொழிவை இராமன் தருகிறார். அதுவே விபூஷண கீதை எனப்படுகிறது. துளசிதாசர் இந்த அழகிய போதனையை அருமையான ராகத்தில் தந்துள்ளார் அதன் கருத்து வருமாறு.

ரதத்தினால் ஒருவர் அடையும் முழு வெற்றி வித்தியாசமானது. கசவங்கள், ஆயுதங்கள், உடல் பலத்தினால் இறுதி வெற்றியை அடைந்து விட முடியாது. தர்மத்தேர் என்றால் என்ன? அது எப்படி செல்லும் என்பதை அழகிய பாடல்கள் மூலம் இராமர் விளக்குகிறார். வீரம், சகிப்புத்தன்மை ஆகியவையே ரதத்தின் சக்கரங்கள். சத்தியத்தில் உறுதியும், நற்குணங்களுமே ரதத்தின் பாதுகாப்பிற்கும், வெற்றிக்குமான கொடிகள். ரதத்தின் குதிரைகள் பலமும். சரி பிழையைத் தீர்மானிக்கும் தன்மை (விவேகம்) புலனடக்கம், பிறர்நலன் பேணல் ஆகியவையே நான்கு குதிரைகள்.

முதலாவது குதிரை - ***பலம்*** - ஆசையும் பற்றும் இல்லாதிருக்கும் போதே பலம் உண்மையானதாக இருக்கும். என்னிடம் இல்லாத ஒன்றை விரும்பும் போது ஆசை எனப்படும். என்னிடம் உள்ள ஒன்றை விரும்பும் போது பற்று எனப்படும்.

இரண்டாவது குதிரை - ***விவேகம்.*** - எது சரி, எது பிழை எனத் தெரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல். எது உண்மை எது பொய் என அறியும் ஆற்றல். எது எனது கடமை இல்லை என அறியும் ஆற்றல்.

மூன்றாவது குதிரை - ***புலனடக்கம்*** - புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். தேவையைத் தெரிந்து பயன்படுத்த வேண்டும்.

நாலாவது குதிரை - ***பிறர் நலன் பேணல்*** - மற்றவர்களின் நலத்தை உத்தேசித்தே காரியம் ஆற்ற வேண்டும். - சுயநலம் கூடாது.

இந்த நான்கு குதிரைகள் சரியாக இருந்தாலும் கடிவாளக் கயிறு சரியாக இருக்க வேண்டும்.

முதலாவது கயிறு - ***மன்னிக்கும் தன்மை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கயிறு - ***இரக்கம்***
மூன்றாவது கயிறு - ***மனச் சமநிலை***

சாரதி

***கடவுள் பக்தி*** - ஒரு புத்திசாலியான சாரதிக்கு அழகு
***சாந்தம்*** - கேடயம்
***திருப்தி*** - வாள்
***தர்மம்*** - கோடரி
***புரிந்துணர்வு*** - கணை
***தன்னை அறிதல்*** - வில்லு
***தூய்மையும் துணிவும் கொண்ட மனம்*** - அம்பறாத்தூணி
***மன அமைதி*** - அம்புகள்

***இயம நியமங்கள், குருவிற்கும் கற்றறிந்தோருக்கும் மரியாதை உடைக்க முடியாத கவசங்கள்***


நண்பனே இந்தத் தேரை வைத்திருப்பவனுக்கு எதிரிகள் எவரும் இந்த உலகத்தில் இல்லை. அவன்தான் பெரிய வீரன். சம்சாரம் என்ற எதிரியை வெற்றி கொள்ளக்கூடியவன்.

இந்த அறிவுரைகளைக் கேட்டதும் இராமருடைய மலர்ப்பாதங்களில் வீழ்ந்து வணங்கி பின்வருமாறு கூறினான். "தர்மதேவரை வர்ணிப்பதன் மூலம் எனது வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி விட்டீர்கள் என்று கூறி மீண்டும் மீண்டும் வீழ்ந்து வணங்கினான். இராவணன் இறந்ததும் விபூஷணன் அடுத்த அரசன் என்று இராமரால் கூறப்பட்டதால் அடுத்த அரசனை தயார்ப் படுத்தும் போதனையாகவும் இருந்தது.

இந்த போதனைகள் விபூஷணனுக்கு மட்டு மல்ல எங்கள் எல்லோருக்குமாகத்தான்.
ஓம் தத் சத்.

ஜெய் சாயிராம்

"விபூஷண கீதை"
சுவாமி தேஜோமயானதாவின்
உரையிலிருந்து...
தமிழாக்கம்: எஸ்.ஆர்.சரவணபவன்



***உங்கள் முன்னால் நீங்கள் வைத்திருக்கும் கடவுள் படமும் அதன் மீது நீங்கள் சூட்டியிருக்கும் மாலைகளும், பூக்களும் அந்தப் படத்தின் முன்னால் நீங்கள் உட்கார்ந்து பாடும் பாடல்களும், நீங்கள் ஏற்றுக் கொள்ளும் விரதங்களும், ஜபங்களும் இவை எல்லாமே உங்களைச் சுத்தம் செய்து கொள்வ தற்கான நடவடிக்கைகள். இவைகளெல்லாம் உங்களைச் சுற்றியிருக்கும் குறைகளை அகற்றி உங்களை கடவுளின் அருகே நேராக கொண்டு செல்ல வழி செய்யும். நீங்கள் யாராக இருந்தாலும் நீங்கள் என்னவா 'தான்! உங்களை நான 'விட்டு விட மாட்டேன். நீங்கள் எங்கே இருந்தாலும், என் அருகில் தான் இருக்கிறீர்கள். நீங்கள் என் பிடியை விட்டுச் சென்றுவிட முடியாது.***

***- சாயி பாபா***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

## பிரசாந்திக் கவுன்சில்

***மகாசமாதி தினம் - 24.04.2013***
***"ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம்"***

பகவானுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிக்குமுகமாக 24.4.2013 மகா சமாதி தினத்தை "ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவ" மாக கொண்டாடு வோம். கீழே தரப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் சிலவற்றை யாவது முடிந்தால் முழுவதையுமாவது உங்கள் நிலையங்களிலும், பிராந்திய, தேசிய மட்டத்திலும் கொண்டாடலாம்

1. ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் குறிக்கோள் அவரது பெருமையை பற்றிய அனுபவப் பகிர்வு
2. பக்திப் பாடல்களும் பஜனையும்
3. கலாச்சார நிகழ்ச்சிகள்
4. சத்திய சாயி கல்வி நிகழ்வுகளும், இளைஞர்களும்
5. சேவைத்திட்டங்கள்
6. பாபாவின் தரிசனம், அவரது உரைகள் மனி தாபிமான சேவைத்திட்டங்கள் பற்றிய படக் காட்சிகள் ஒழுங்கு செய்தல்.

உங்கள் நிலைய, பிராந்திய, தேசிய மட்டங்களில் நடைபெறும் இந்த "ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவ" மங்கள நிகழ்ச்சிகளில் எல்லா பக்தர்களும் அன்புடனும் உற்சாகத்துடனும் பங்கு கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

- டாக்டர். நரேந்திரநாத் ரெட்டி
பிரசாந்தி கவுன்சில்

***அவதாரப் பிரகடனத் தினம் - அக்டோபர் 20***

அவதார பிரகடனத் தினமான அக்டோபர் 20 ஐ பூமி சேவைத் தினமாக கொண்டாட வேண்டுமென்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வருடம் "ஏழைகளுக்கு உணவளித்தல்" என்ற விடயம் முக்கியத்துவப்படுத்தப்படும். உலகெங்குமுள்ள எல்லா பிராந்தியங்களிலுமுள்ள பக்தர்கள் இந்நிகழ் வில் பங்கு பற்ற வேண்டும். பசித்தோருக்கு உணவளித்தலை சுவாமி புனிதமான சேவையெனக் கூறுகிறார். உங்கள் பிராந்தியத் தலைவர்கள் விரிவான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அறிவிப்பார்கள். அனைவரும் உற்சாகமாகக் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

- டாக்டர்.நரேந்திரநாத் ரெட்டி
பிரசாந்தி கவுன்சில்

## தேசியச் செய்திகள்

***சத்திய சாயி பாடசாலை வருடாந்த பண்பு விருத்தி விளையாட்டு விழா***

மானிப்பாயில் அமைந்துள்ள இலங்கையின் ஒரேயொரு சத்திய சாயி பாடசாலையின் வருடாந்த பண்பு விருத்தி விளையாட்டு விழா 16.2.2013 அன்று நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு.வி.செல்வராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும், கொழும்பு மத்திய சபை சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர் திருமதி சாந்தா மகேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இதே வேளை முன்னாள் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ.மு.வன்னியசேகரம் அவர்களும் பாரியாரும் கலந்து கொண்டனர். நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

## பிராந்தியச் செய்திகள்

### வடமத்திய பிராந்தியம்

***தண்ணீரூற்று சாயி நிலையம்***

1. இரண்டு வயதிற்குட்பட்ட 300 குழந்தைகளுக்கு மாதாந்தம் ஒரு பக்கட் பால்மா வழங்கப்பட்டு வருகிறது.
2. ஐந்து முன்பள்ளிகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பிள்ளைகளுக்கு காலை உணவு, சீருடை, ஆசிரியர்களுக்கான வேதனம் ஆகியன வழங்கப் பட்டு வருகிறது.
3. தையற்பயிற்சி வகுப்பிற்கு இரண்டாவது குழுவில் 25 யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யுவதிகள் சேர்க்கப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.
4. நீலகண்டபுரம் என்ற இடத்திற்கு சென்று ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இலவச ரியூசன் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகிறது.
5. கர்ப்பிணித் தாய்மார்கள் 10 பேருக்கு மாதாந்தம் 5000 ரூபா பெறுமதியான அன்புப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

***வவுனியா சாயி நிலையம்***

1. "மகா கச்சக் கொடிய" என்ற சிங்களக் கிராமத்தில் 24.2.2013 அன்று மருத்துவ முகாம் நடாத்தப்பட்டது. 120 கிராமவாசிகள் பயன் பெற்றனர். மாதத்தில் இரு தடவை இங்கு மருத்துவ முகாம் நடாத்த திட்டமிடப் பட்டுள்ளது.
2. "சம்பூர்" மக்கள் மீள்குடியேற்றப் பகுதியில் உதவி தேவைப்படும் வறிய குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 40000 பிரதேச செயலகம் ஊடாக வழங்கப் பட்டது.

***திருகோணமலை சாயி நிலையம்***

1. தம்பலகாமம் பகுதியிலுள்ள மூன்று கிராமங்களில் உள்ள 30 வறிய குடும்பங்களை ஒன்றிணைத்து ஒரு பால் பண்ணை அமைக்கும் திட்டம். இதற்கு முன்னோடியாக 5 மாடுகள் வழங்கி ஆரம்பிக்கப்பட் டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட பிராந்தியம்

1. பொம்மை வெளியில் வசித்து வரும் முஸ்லீம் கிராம மக்களின் பொதுவான பயன்பாட்டுக்காக பலநோக்கு மண்டபம் ரூபா 950000.00 பெறுமதியில் அமைக்கப்பட்டு 11.10.2012 திகதியன்று கையளிக்கப்பட்டது. சிங்கப்பூர் பிரேமசாயி நிறுவன அன்பர்கள் ரூபா 500000.00 இதற்கு வழங்கியிருந்தனர்.
2. கட்டுவன் கிராமத்தில்ரூபா 140894.00 பெறுமதியில் பழைய கிணறு புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டதுடன் அக்கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு அன்புப் பொதிகளும் வீட்டு சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.
3. அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட பூம்புகார் கிராமத்திற்கு சிங்கப்பூர் சாயி அன்பர்களின் ஆதரவுடன் மாணவர்களின் கல்வித் தேவைக்கு வசதியாக முன்பள்ளியில் வைத்து பயன்படுத்தும் நோக்கில் ரூபா 47500.00 பெறுமதியான ஜெனரேட்டர் ஒன்று வழங்கப்பட்டதுடன், அக் கிராமத்தில் இனங்காணப்பட்ட 23 கிணறுகள் ரூபா 274988.00 பெறுமதியில் புனரமைக்கப்பட்டு வழங்கப்பட்டது.
4. இரு வறிய குடும்பங்களின் கொட்டில் வீடுகளின் நிலத்திற்கு ரூபா 60000.00 செலவிடப்பட்டு சீமெந்து தரை அமைத்துக் கொடுக்கப்பட்டது.
5. இலங்கை மக்கள் அனைவரினதும் சாந்திக்காகவும், சுபீட்சமான வாழ்விற்காகவும் இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம் மானிப்பாயிலுள்ள சத்திய சாயி பாடசாலை வளாகத்தில் செப்டம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று தினங்கள் சர்வமதப் பிரார்த்தனையும், மஹா மிருத்துஞ்சய சாந்தி யாகமும் நடாத்தப்பட்டது. இந் நிகழ்வுகளில் சர்வமத குருமார்கள் கலந்து கொண்டனர்.
6. கிளிநொச்சி மாவட்ட க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்வடையச் செய்யும் நோக்குடன் ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டு இலங்கை மத்திய செயற்குழு மூலம் கடந்த ஆகஸ்ட் 2012 ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகளும், மாதிரிப் பரீட்சைகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கு ரூபா 578000.00 பணம் அன்பர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளது.
7. 2012 செப்படம்பர் மாதம் இடம் பெற்ற இரத்ததான நிகழ்வில் 50 சாயி அன்பர்கள் இரத்தம் வழங்கினார்கள்.
8. இலவச மருத்துவ முகாம்கள் யாழ் மாவட்டத்தில் காட்டுப்புலம், சுதந்திரபுரம், பூம்புகார், பொன்னம்மா கிராமம், மணியந் தோட்டம், சாந்தை ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை, உடையார்கட்டு, சுதந்திரபுரம் ஆகிய இடங்களிலும் வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் மருத்தவகுழுவினரால் 2012 ஆம் ஆண்டு 9 மருத்துவ முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் போது மொத்தமாக 1404 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். சராசரியாக 5 மருத்துவர்களும், 7 மருத்துவ தொண்டர்களும் இச்சேவைகளில் ஈடுபட்டனர்.
9. பதினோராவது வருடமாகவும் அன்புவாரம் 2012 அக்டோபர் மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் இறுதி நாள் நிகழ்வு 25.2.2013 திகதியன்று கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வுக்கு தீவக வலய கல்விப் பணிப்பாளர் திரு.ரீ. ஜோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதனையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சித்திர ஆக்கப் போட்டிகளில் பங்கு பற்றிய பாடசாலை மாணவர்கள் 1080 பேருக்கு சான்றிதழ்களும், 380 பேருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

*யாழ்ப்பாணம் சாயி நிலையம்*

1. தற்போது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட அரியாலை, பூம்புகார் கிராமத்தில் வசித்து வந்த வறிய மாற்றுவலுவுடைய குடும்பம் ஒன்றிற்கு ரூபா 40000.00 செலவில் தற்காலிக கொட்டில் அமைத்து வழங்கப்பட்டது.
2. கொக்குவில் பூநாறி மரத்தடியைச் சேர்ந்த திருமதி மஞ்சுளா என்ற வறிய குடும்பத்திற்கு ரூபா 48605.00 செலவில் மலசுடம் அமைத்து வழங்கப்பட்டதுடன், புத்தாடைகளும் வழங்கப்பட்டது.
3. அரியாலை பூம்புகாரில் உள்ள 85 குடும்பங்களுக்கு ரூபா 47797.00 பெறுமதியான பாய், தலையணை மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
4. சாயி செய்தியை பாடசாலை மாணவர்களுக்கும் கிராம சிறுவர்களுக்கும் இலகுவில் எடுத்துச் செல்ல வசதியாக பயிற்சிக் கொப்பிகளில் சாயி செய்தியும் பகவானின் அட்டைப் படமும் இடப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் அச்சிடப்பட்டது. வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இலவச அப்பியாசக் கொப்பி விநியோக சேவை மூலம் அந்தந்த சாயி நிலையங்களால் இக் கொப்பிகள் விநியோகம் செய்யப்பட்டன.
5. கிளிநொச்சியில் இவ்வாண்டு ஜனவரி மாதமளவில் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த பன்னங்கண்டி கிராம மக்களுக்கு ரூபா 24530.00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.
6. யாழ் மங்கயற்கரசி பாடசாலையில் கல்வி பயிலும் 48 வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ரூபா 44910.00 பெறுமதியான சப்பாத்துகளும் காலுறைகளும் விநியோகிக்கப்பட்டன.

## கிழக்கு, தெற்கு, மேற்கு பிராந்தியம்

1. 2013 பெப்ரவரி மாத இறுதியில் மூன்று நாட்கள் ஆன்மீக சாதனை முகாம் கதிர்காமத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சாயி காயத்ரீ, பஜனை, தொடர்ந்து "புத்தரும் சாயியும்" என்ற தலைப்பில் டாக்டர்.சுனந்தா டேகம்பொட அவர்களின் உரையும், "நாளாந்த வாழ்வில் ஆன்மீகம்" எனும் தலைப்பில் டாக்டர்.ஜெகநாதன் அவர்களின் உரையும், மல்ரிமீடியா உதவியுடன் "அன்பு ஒரு சக்தி" எனும் தலைப்பில் ஸ்ரீ.பிரபாகரன் அவர்களின் உரையும் இடம் பெற்றது. அத்தோடு பகவான் 1970 ஆம் ஆண்டு மேற்கொண்ட அற்புதங்களின் வீடியோவும் காண்பிக்கப்பட்டது. இந் நிகழ்வில் 270 பேர் கலந்து கொண்டனர். குறிப்பாக 108 கிழக்கு மாகாண அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனச் செயற்பாடுகளின் தொகுப்புக்கள்



மானிப்பாயில் இடம்பெற்ற சர்வமத பிரார்த்தனையும், மஹாமிருத்துஞ்ஜய யாகமும்



யாழ்ப்பாண நிலையத்தின் ஏற்பாட்டில்
வறிய குடும்பத்திற்கு மலகூடம் அமைக்கப்பட்டமையும், மங்கயற்கரசி பாடசாலை வறிய
மாணவர்கள் 48 பேருக்கு சப்பாத்து வழங்கலும்



2012 ஆம் ஆண்டுக்கான அன்புவார இறுதி நிகழ்வின் போது கலந்து கொண்டோரும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தீவக வலய கல்விப் பணிப்பாளர் திரு.ரீ ஜோன் குயின்ரன்ஸ் அவர்களும்





கதிர்காமத்தில் மூன்று நாட்கள் சாதனா முகாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sai Margam January - April 2013 Price: LKR 50.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org